# சஞ்சீவி

விலை ரூபா 8-00

மலை: 6 வள்ளுவர் ஆண்டு 2028 ஆடி 17 சனிக்கிழமை (02-08-1997) SANJEAVY · Regenerative Tamil Weekly சிகரம்: 9


# நெடுங்கேணியில் உக்கிரச் சண்டை!

## இழப்புகள் குறித்து முரணான தகவல்கள்

கொழும்பு, ஒகஸ்ட் 2

நெடுங்கேணியில் நிலை கொண்டுள்ள 53 ஆவது படையணி மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய ஆட்லறி மற்றும் மோட்டார் தாக்குதல்களை அடுத்து அப்பகுதியில் உக்கிரச் சண்டை வெடித்ததாக அறிவிக்கப்படுகின்றது.

இழப்புகள் குறித்து இரு தரப்பினரும் வெளியிட்ட தகவல்கள் முரண்பாடானவையாக இருந்தன.

மோட்டார் தாக்குதலை அடுத்து ஏற்பட்ட சண்டையில் 50 விடுதலைப் புலிகள் உயிரிழந்ததாகவும், 30 புலிகள் காயமுற்றதாகவும் அரசுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

இராணுவத் தரப்பில் ஓர் அதிகாரி உட்பட 17 படையினர் பலியானதாகவும் 14 படையினர் காயமுற்றதாகவும் பாதுகாப்பு வட்டாரத் தகவல்கள் மேலும் தெரிவித்தன.

புலிகளின் தாக்குதலுக்குப் பதிலாக படையினர் ஆட்லறித் தாக்குதலை மேற்கொண்டனர் என்றும் —

ஹெலிக்கொப்டர்களைப் பயன்படுத்தி புலிகளின் தாக்குதல் முறியடிக்கப்பட்டது என்றும் —

அரசுத் தரப்பில் மேலும் அறிவிக்கப்பட்டது.

### புலிகள் தரப்பு அறிவிப்பு

நேடுங்கேணிக்குத் தென் மேற்கே நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற சண்டையில் 17 படையினர் உயிரிழந்ததாகவும் 14 படையினர் காயமுற்றததாகவும் புலிகளின் தரப்பு அறிவிப்புதெரிவித்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் தரப்பில் பலியான 9 பேர்

வவுனியா, ஒக. 2

நெடுங்கேணியில் நேற்று முன்தினம் இரவு நடந்த மோதலில் தமது தரப்பில் 9 பேர் களப்பலியானதாக 'புலிகளின் குரல்' அறிவித்தது அவர்களின் விவரம் வருமாறு:-

செம்பியன் (மாங்குளம்), சோழன் (விசுவமடு), மணிமாறன் (மட்டக்களப்பு), கௌதமன் (விசுவமடு), வல்லவன் (மட்டக்களப்பு), சகாதேவன் (கிளிநொச்சி), எழிலன் (யாழ்ப்பாணம்), நெடுஞ்சேரன் (முருங்கன்), தணிகைநம்பி (யாழ்ப்பாணம்) ஆகியோரும் —

தலைமைக்காவலர் மூர்த்தி கந்தசாமி (அக்கராயன்குளம்) என்பவருமே —

களப்பலியானதாக மேலும் அறிவிக்கப்பட்டது. (உ-164-3)

## சித்தாண்டி முகாம் மீது புலிகள் ஷெல் தாக்கு!

மட்டக்களப்பு, ஒக. 2

மட்டக்களப்பு — வாழைச்சேனையில் உள்ள சித்தாண்டி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் நேற்றுக் காலை 8.30 மணிக்கு ஷெல் தாக்குதல் மேற்கொண்டனர்.

மூன்று ஷெல்கள் முகாமில் வீழ்ந்து வெடித்ததில் இரு இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்; இரு படையினர் காயமடைந்தனர்.

இதைத் தொடர்ந்து படையினர் நடத்திய பதில் தாக்குதலில் முகாம் சுற்றாடலில் வசிக்கும் இரு பொது மக்கள் காயமடைந்தனர். (உ-21:3)

## குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஒக. 2

கொக்குவில் பகுதியில்கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து பாதுகாப்புப் படையினர் 4 குண்டுகளைக் கண்டெடுத்தனர் என்றும் —

பருத்தித்துறையில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் இருந்து 60 தோட்டாக்களைப் படையினர் கைப்பற்றினர் என்றும் —

இலங்கை வானொலி தெரிவித்தது. (உ-3)

## ஆஸ்பத்திரியில் மிதிவெடி மீட்பு!

யாழ்ப்பாணம், ஒக. 2

யாழ். போதனா வைத்திய சாலை வளவினுள் நேற்று மிதிவெடி ஒன்று கண்டெடுக்கப்பட்டது.

26 ஆம் வார்ட் முன்பகுதியில் பொலித்தீன் பையில் சுற்றப்பட்ட நிலையில் இருந்த இந்த மிதிவெடியை சிற்றூழியர் இருவர் கண்டு அதனை நிர்வாகத்திடம் தெரிவித்தனர்.

நிர்வாகம் இராணுவத்தினரிடம் அதனை ஒப்படைத்தது. (உ-15)

## 2 முஸ்லிம்கள் சுட்டுக்கொலை

மட்டக்களப்பு, ஒக. 2

அம்பாறை மத்திய முகாமில் இருந்து சம்மாந்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த இரு முஸ்லிம் வியாபாரிகள் நேற்றுக் காலை 5.30 மணிக்கு சொறிக்கல்முனை என்ற இடத்தில் வைத்து இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இவர்களில் ஒருவர் ஊர் காவல்படையைச் சேர்ந்தவர் என பொலீஸார் தெரிவித்தனர். (உ-21-3)

## ஊர்காவலர் உயிரிழப்பு!

கொழும்பு, ஒக. 2

அரந்தலாவப் பிரதேசத்தில் ஊர்காவற்படையினர் மீது நேற்று முன்தினம் இரவு விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் ஊர்காவலர் ஒருவர் உயிரிழந்தார். (உ-5)

## மின் மாற்றிகள் தகர்ப்பு

அம்பாறை மாவட்டத்தில் சம்மாந்துறைப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு 8.45 மணிக்கும் 9 மணிக்கும் இடையில் இரு மின் மாற்றிகள் இனந்தெரியாதவர்களால் குண்டு வைத்து சேதமாக்கப்பட்டன.

இதன் காரணமாக 600 குடும்பங்களுக்கான மின் இணைப்பு துண்டிக்கப்பட்டுள்ளது. (உ-21-3)

## மாமாங்கத்தில் குண்டு வெடிப்பு

மட்டக்களப்பு, ஒக. 2

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் கோயிலுக்கு அருகில் நேற்றிரவு 7. 20 மணிக்கு குண்டு ஒன்று வெடித்தது.

இக்குண்டு வெடிப்பில் படுகாயமுற்ற இரு குழந்தைகள் உட்பட மூவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர்.

ஆலய வருடாந்த உற்சவம் தற்சமயம் நடைபெற்று வருகிறது. (உ-21-3)

## சிப்பாய்கள் அடையாளம் காணப்பட்டனர்

யாழ்ப்பாணம் ஒக. 2

வல்லையில் கடந்த 12 ஆம் திகதி காவலரண் பகுதியில் இளம்பெண் ஒருவர் இரண்டு சிப்பாய்களினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக நேற்று யாழ். நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்பு ஒன்று

(6 ஆம் பக்கம் பார்க்க)

## செயலக ஊழியர் இருவர் கைது!

யாழ்ப்பாணம், ஒக. 2

கொழும்பில் இருந்து வந்த விசேட பொலீஸ் புலனாய்வுப் பிரிவினரால் யாழ். செயலக புனர்வாழ்வுப் பிரிவு நிர்வாக அதிகாரி எஸ். விக்னேஸ்வரமூர்த்தி, யாழ் செயலக சாரதி சுதா ஆகியோர் விசாரணைக்காக அழைத்துச்செல்லப்பட்டுள்ளனர்.

கடந்த ஒரு வார காலமாக லொறி உரிமையாளர் சங்கப் பிரதிநிதிகள், லொறி உரிமையாளர்கள் உட்படப் பலரை விசாரணை செய்து வந்த இந்த விசேட குழு யாழ்.செயலகத்தில் உள்ள சில ஆவணங்களையும் பரிசீலனை செய்தது.

நேற்று முன்தினம் மாலை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்ட செயலகத்தைச் சேர்ந்த இருவரும் கொழும்புக்கு மேல் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிய வந்தது. [உ-3]

### ரூ. 200 கோடிக்கு மேல் மோசடி:

## அரச அதிபர்கள் உட்பட பலர் விசாரிக்கப்படுவர்?

யாழ்ப்பாணத்தில் இது வரை காலமும் இருநூறு கோடி ரூபாவுக்குமேல் இடம்பெற்றதாகக் கூறப்படும் உணவு, நிவாரண மோசடி தொடர்பாக இரகசியப் பொலீஸார் 168 பேரை விசாரிக்கவுள்ளதாக இரகசியப் பொலீஸ் வட்டாரங்களை மேற்கோள்காட்டி தனியார் வானொலி ஒன்று தெரிவித்தது.

முன்னாள் அரச அதிபர்கள் உட்பட யாழ்ப்பாணத்தின் மூத்த நிர்வாக அதிகாரிகள் நால்வர், கூட்டுத்தாபன அதிகாரிகள் 21 பேர் மற்றும் பொலீஸ் — இராணுவ அதிகாரிகள் 143 பேர் விசாரிக்கப்படவிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

இந்த மோசடி தொடர்பாக உடனடியாக எவரும் கைதுசெய்யப்பட மாட்டார்கள் என்றும் —

அரச உயர் அதிகாரிகள் இந்த மோசடியில் சம்பந்தப்பட்டிருப்பதாக சந்தேகிக்கப்படுவதால் ஜனாதிபதியுடன் ஆலோசனை நடத்திய பின்னர் அடுத்த கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது என்றும் —

இரகசியப்பொலீஸ் வட்டாரங்கள் தெரிவித்ததாக. அந்தவானொலி அறிவித்தது

### 'குட்வில் கைட்'

## கப்பல் திருத்தப்பட்டாலும் சேவை நடத்துவதில் சிக்கல்!

திருகோணமலை, ஒக. 2

திருகோணமலைக்கும், சாங்கேசன்துறைக்கும் இடையில் சேவையில் ஈடுபடுத்த வாடகைக்கு அமர்த்தப்பட்டுள்ள 'குட்வில் கைட்' என்ற கப்பல் சேவையில் ஈடுபடக்கூடியதாகத் திருத்தப்பட்டாலும் —

அக்கப்பலை சேவையில் ஈடுபடுத்துவதில் புதிய நெருக்கடி உருவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

சேவையில் ஈடுபட திருகோணமலை வந்து சேர்ந்த இக்கப்பலை, பரிசோதனை நடத்திய துறைமுக அதிகாரிகள், இக்கப்பலில் உள்ள சில குறைபாடுகள் நிவர்த்தி செய்தால் மட்டுமே பயணிகள் சேவைக்கு அதனை அனுமதிக்க முடியும் என்று தெரிவித்தனர்.

இந்தப் பணிப்புரையை அடுத்து இக்கப்பல் திருத்தப்பட்டுவருகிறது. கொழும்பில் இருந்து குளிரூட்டிகள் உட்பட மற்றும் சில கருவிகள், பொருள்கள் இன்று எடுத்து வரப்பட்டு கப்பலில் பொருத்தப்படும் என்றும் கப்பல் நிறுவனம் தெரிவித்துள்ளது.

திருத்த வேலையின் பின்னர் கப்பல் சேவைக்கு தகுதியானது என்று துறைமுக அதிகாரிகள் சிபார்சு செய்வர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போதைய ஏற்பா[illegible]களின்படி கரையில் இருந்து 40 மைல் தூரத்திலேயே[illegible]

(6 ஆம்பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## இறைச்சிக்கோழி

இறைச்சிக் கோழி [Brolier] கிலோ ரூபா 160-க்கு விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 86, கோயில் வீதி. யாழ்ப்பாணம்.
[48723]

இறைச்சிக்கோழி [Broiler] விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல - 15, மெமோறியல் லேன், மானிப்பாய்.
[48582]

இறைச்சிக்கோழி (புறோயிலர்) விற்பனைக்குண்டு. தொடர்பு: கிறிஸ்துவுக்காக இளைஞர், 462, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
[48726]

இறைச்சிக்கோழி விற்பனைக்குண்டு. சுகாதார முறைப்படி சுத்தம் செய்து கொடுக்கப்படும். மொத்தமாகவும், சில்லறையாகவும் கிடைக்கும். தொடர்பு; Lucky Farm Sales Centre, Palay Road, Thirunelvely
[48730]

புறோயிலர் இறைச்சிக் கோழி விற்பனைக்குண்டு. தொடர்பு: No;- 101, இலுப்பையடிச் சந்திக்கு அருகாமை, பலாலிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
[48724]

## விற்பனைக்கு

1997 ஆம் ஆண்டு முதல் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான மாதிரி வினாவிடைத் தொகுப்பு எல்லாப் பாடங்களுக்கும் விற்பனையாகிறது. பூபாலசிங்கம் புத்தகசாலை, இல. 04, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்,
[சி/1234]

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் (புளியடியில்) சுண்டுக்குளிப் பகுதியில் உள்ள அரியாலையில், 75 பரப்பு பெரும் விளைச்சல் வயற்காணி தெருக்கரையில் கண்டிறோட்டிற்கு அண்மையில் விற்பனைக்குண்டு. தொடர்பு;- 142, Base Line Road, Colombo- 9 தொலைபேசி எண்:- 692770.
[48707]

யாழ். பல்கலைக்கழகத்திற்கு சமீபமாக சகல வசதிகளுடன் கூடிய வீடு 2 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு:- சி. சத்தியபாலன், இல. 73, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம், [48706]

## தேவை

3½ மாதத்திற்கும், [illegible]½ மாதத்திற்கும் இடைப்பட்ட நல்லின பேட்டுக்கோழிகள் தேவை. தொடர்பு; No.101: இலுப்பையடிச் சந்திக்கு அருகாமை, பலாலிறோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
[48725]

காலை தொடக்கம மாலை வரை பிள்ளையை கவனிக்கக் கூடிய நடுத்தர வயதுப் பெண்தேவை. நேரில்வரவும். 52, மருதடி வீதி, நல்லூர்.
[48653]

பெண்களுக்குரிய ஆடைகள் வெட்டித் தைக்கக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. ஞாயிற்றுக்கிழமை நேரில் வந்து சந்திக்கவும். சி. கந்தையா, அரசடி, அம்மன் கோயில் வீதி, திருநெல்வேலி,
[48727]

## மணமகள் தேவை

ஜேர்மனியில் இருக்கும் 1963 ஆம் ஆண்டு பிறந்த கார்த்திகை நட்சத்திர மேடராசி கிரக குற்றமற்ற மணமகனுக்கு மணமகள் தேவை. [illegible]வரங்கட்கு கடிதமூலம் [illegible]ாடர்பு கொள்ளவும். [illegible] கணேசராசா, மே/பா [illegible]ிஜயா, அரசகேசரி விநா[illegible] வடக்கு வீதி, நீர்வேலி.
[48617]

## SPOKEN ENGLISH

சுலபமான முறையில் ஆங்கிலம் பயில ஆசிரியர் ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), காங்கேசன் துறைவீதி, யாழ்ப்பாணம்.
[48700]

## மரம்

சர்க்கரை வேம்பு, வேம்பு, பலா, கரிசலாங்கண்ணி அகத்தி மில்கிவைற் சோப்/சலவைப்பவுடர் 10க்கு அல்லது ரூபா 10 தென்னம் பிள்ளை, வேப்பம் பிண்ணாக்கு, ஸ்ரீராமகிருஷ்ண விஜயம், யோகக்கலைப்புத்தகமும், படமும் வழங்கப்படும். ''மில்கிவைற்'
[சி - 1247]

## ஆங்கிலம், கணிதம்

விசேடமாக (விடுமுறைக்குள்) ஆண்டு 6 தொடக்கம் O/L வரை விசேட பெறுபேறடைய வாரம் 5 மணித்தியாலம் கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் மேற்கு வீதி, திருநெல்வேலி.
[48733]

## திருமணசேவை

விவாகப் பொருத்தம் பார்த்தல், காணி, வீடு வாங்க, விற்க திருப்திகரமான சேவை, 2 வருட இடைவெளிக்குப்பின் ஆரம்பம். வெள்ளி, சனி, ஞாயிறு, தினங்களில் காலை 9 மணி முதல் பி. ப 2 மணி வரை தற்காலிக முகவரி: திருவிளங்கம் இல. 40/5, ரெம்பிள்றோட்லேன். [ரெயில்வே பாதைக்கு சமீபமாக.]
[48657]

எம் நிறுவனத்தில் சகல மதத்திலும் மணமகன், மணமகள் உண்டு ஜாதகம், புகைப் படத்துடன்நேரில் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: ஸ்ரீமுருகன் சோதிட நிலையம், திருஞானசம்பந்தசர்மா, நல்லூர்வடக்குவீதி, நல்லூர்.
[48713]

## யாழ்ப்பாணத்தில்

'அந்த ஆறு மாதங்கள்' கட்டுரையை வீரகேசரியில் தொடர்ந்து எழுதும் அராலியூர் ந, சுந்தரம்பிள்ளையின் நூல்கள் நாடகம் எழுதுவது எப்படி? — ரூபா 50. அக்கரைச் சீமையிலே நாவல் ரூபா 25.
[48717]

# நல் வாழ்த்துக்கள்

## திருமதி ஈஸ்வரி பரமகுரு

B. Sc Dip- in- Ed.

யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை
பருத்தித்துறை.

பல்லாண்டு காலம் ஆசிரியப் பணிபுரிந்து ஓய்வு பெறும்
திருமதி ஈஸ்வரி பரமகுரு
அவர்கள் சிறப்புற வாழ வாழ்த்துகின்றேன்.

திருமதி த. ஜெயா, B. A
ஆசிரியை,
யா/ வட இந்து மகளிர்கல்லூரி.

(48661)

நியாய விலை! அதிவிசேட தரம்!!

# மல்லிகா மிக்சர்

சுத்தமான பசு நெய் சேர்க்கப்பட்டு, சுகாதார முறைப்படி அதிவிசேட மாகத்தயாரிக்கப்பட்டது.
உங்கள் இல்லங்களில், காரியாலயங்களில் நடைபெறும்
மங்கள வைபவங்களில் விருந்தினரை நிறைவோடு உபசரிக்க தேவையான மிக்சர், பகோடா, காராப்பூந்தி, ஓமப்பொடி, பொரிகடலைப்பருப்பு, முறுக்கு வகைகளை மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.
விற்பனையாளர்களின் வசதிகருதி அவர்களின் தேவைக்கேற்ப பைக்கற்றுக்களிலும் அடைத்துக் கொடுக்கப்படும்.

(அவற்றுக்கான விலை வேறு)

ஒரு கிலோ விலை ரூபா 120 மட்டுமே!

## மல்லிகா ஸ்ரோர்ஸ்

மத்திய சந்தை முன்பாக, மானிப்பாய்.

எமது தயாரிப்புகளை யாழ்ப்பாணத்தில், மொத்தமாகவும் சில்லறையாகவும், பெற்றுக்கொள்ள, தரம் நாடுவோர் தவறாது நாடவேண்டிய இடம்:

## சிறீ சக்தி ஸ்ரோர்ஸ்

310 A, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(சி-1214)

# "பாட்டா"

விற்பனையாளர்களுக்கு
ஒரு நற் செய்தி!

பின் வரும் பாட்டா பாதணிகள்
விசேட விலைக் கழிவுகளுடன் பாட்டா
மொத்த விற்பனை நிலையத்தில் விற்பனையாகின்றன.

**RAVIN, PALITHA, CITY GIRL, JESSIE, MALA.**

'பாட்டா' மொத்த விற்பனை நிலையம்

350, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

(48731)

# வாழ்த்துகின்றோம்

எங்கள் கல்லூரிப் பழையமாணவனும்
எங்கள் அதிபராய் இருந்து அரும் பெரும்
சேவையாற்றியவருமான
"ஸ்கந்தவரோதயன்"

## திரு. ஆ. கமலநாதன் அவர்கள்

தெல்லிப்பளைக் கல்விக்கோட்டத்திற்கு கல்வி அதிகாரியாகப் பதவி உயர்வு பெற்றமை குறித்து வாழ்த்துவதுடன் அவர் மேன்மேலும் பல பதவி உயர்வுகள் பெறல் வேண்டும் என்றும் வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
அலுவலர்கள், மாணவர்கள்.

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி,
கந்தரோடை, சுன்னாகம்.

(சி-1248)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் சிவநேசம்

மயிலங்கூடல் இளவாலையைப் பிறப்பிடமாகவும், ஆலங்குழாய் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுப்பிரமணியம் சிவநேசம் நேற்று 1-8-97 இல் சிவபாதமடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், சாந்தாதேவி, சகுந்தலாதேவி (ஆசிரியை, அளவெட்டி அருணோதயக் கல்லூரி), அமரர் சிறிதேவன், சிறிஸ்வரன் (லங்கா சிமெந்து லிமிட்), அமரர் கெங்காதேவி, அமரர் சிறிதரன் ஆகியோரின் அன்புத்தாயாரும், யோகேஸ்வரன், திருவாசரூபி ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2-8-97) சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுப்பனை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

தகவல்:
சு. சிறீஸ்வரன்
(மகன்)

ஆலங்குழாய்,
சண்டிலிப்பாய்.

(47358)

## திருமதி இராசம்மா இராசசுந்தரம்

சுழிபுரம் மத்தி, சுழிபுரம்

காலஞ்சென்ற மலாயன் பென்ஷனர் பெ. இராசசுந்தரம் அவர்களின் அன்பு மனைவியும், சிவசுப்பிரமணியம் (சிங்கப்பூர்), பாலசுப்பிரமணியம் (கனடா), டாக்டர் சுப்பிரமணியம் (லண்டன்), சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் அமரர் குமாரசுப்பிரமணியம் ஆகியோரின் பாசமிகுதாயாருமான இராசம்மா இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01-08-97 வெள்ளிக்கிழமை கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெற்றன.

தகவல்:
இ. பாலசுப்பிரமணியம்

2/1 C.D. I. தொடர்மாடி,
104, மன்னிங்ஸ் பிளேஸ்,
கொழும்பு 6.

(48738)

## கனகசுந்தரம் பூலோகராசா

(உரிமையாளர், ராசி சில்க், யாழ்ப்பாணம்—கொழும்பு)

வண்ணார்பண்ணையைப் பிறப்பிடமாகவும், கொட்டடியை வசிப்பிடமாகவும் கொண்ட கனகசுந்தரம் பூலோகராசா 31 - 07 - 97 அன்று கொழும்பில் காலமானார்,

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரம்- நல்லம்மா தம்பதிகளின் மூத்தமகனும், காலஞ்சென்ற துரையப்பா - செல்லம்மா தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சசிதரா (கனடா), சசிதரன் (ராசி சில்க், யாழ்ப்பாணம்), ரவிதரன் (ராசி சில்க், கொழும்பு), லலிதரா (இந்தியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், திருநாவுக்கரசு (கனடா — கணக்காளர்), கோமளவதனி, ஜெயந்தி, சரவணபவான் (சென்னை மருத்துவக் கல்லூரி) ஆகியோரின் அன்பு மாமனாரும், வினோ, டினோ, நிராஜ், கோபிகா, மிதுன்ராஜ், அபிஷேக், ஹரிஜா, உதிஸ்ரா, ஹரிகிஷாந், பாலாஜி, சத்தியா, பிரசாந் ஆகியோரின் அன்புப் பேரனும், வில்வராசா, காலஞ்சென்ற சேனாதிராசா மற்றும் துரைராசா, பற்குணராசா, இந்திராணி, குணசிங்கம், ஜெயராணி, கனகலிங்கம், பொன்ராசா, காலஞ்சென்ற யோகராசா (பஞ்சு) ஆகியோரின் மூத்த சகோதரரும், சிவபாக்கியம், சொக்கலிங்கம், ஞானேஸ்வரி, சேனாதிராசா, கனகேஸ்வரி, அரசரெட்ணம், து. கருணாகரன், து. சிவராம் (முகாமையாளர், இலங்கை வங்கி, முல்லைத்தீவு), து. சத்தியசீலன் (அதிபர், யாழ். கரவெட்டி கிழக்கு அ. த. க. பாடசாலை), து. அம்பிகைராஜன் (பிரான்ஸ்), து. தேவலோஜினி (லண்டன்), செல்வலோஜினி, கேதாரநாதன், குணசிங்கம் (கோபிகா ஆடையகம்), கனகலிங்கம் (நாரந்தனை) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (3-8-97) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் நடைபெறும் என்பதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:
பூ. சசிதரன்
(மகன் — ராசி சில்க், யாழ்ப்பாணம்)

230, நாவலர் வீதி,
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

(48743)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளைக் கண்டிக்கும் போக்கை கடைப்பிடிக்க அமெரிக்கா முடிவு?

புலிகளுடன் அரசு இரண்டு முனைகளில் யுத்தம் புரிய வேண்டியதாக உள்ளது.

ஒன்று நாட்டுக்குள். — மற்றையது நாட்டுக்கு வெளியே.

நாட்டுக்குள் நடப்பதில் ஆயுத யுத்தம் முக்கிய பங்கு வகிக்கின்றது. அரசைப் பொறுத்தவரை நாட்டுக்கு வெளியே நடப்பது பெரும்பாலும் பிரசார யுத்தமே.

நாட்டுக்குள் நடக்கும் ஆயுத யுத்தத்தில் அண்மைக் காலத்தில் சந்திரிகா அரசு கணிசமான வெற்றிகளை ஈட்டியிருக்கின்றது என்பது ஓரளவுக்கு உண்மையே.

யாழ். குடாநாடு, கிளிநொச்சிப் பிரதேசங்கள் அரசுப் படைகளால் கைப்பற்றப்பட்டதை முக்கியமாகக் குறிப்பிடலாம்.

எனினும் நாட்டுக்குள் கிடைக்கும் யுத்த வெற்றிகளை அரசு நிரந்தரமாக்கிக் கொள்ள வேண்டுமானால் நாட்டுக்கு வெளியே இருந்து புலிகளுக்குக் கிடைக்கும் சகல உதவிகளும் துண்டிக்கப்பட வேண்டியது அவசியமானதாகின்றது.

நாட்டுக்குள் நடக்கும் யுத்தத்தில் கணிசமான அளவு முன்னேற முடிந்த அரசுத் தரப்பால் நாட்டுக்கு வெளியே நடக்கும் யுத்தத்தில் ஒரு சிறிதளவேனும் முன்னேறுவது கஷ்டமானதாக இருக்கின்றது.

இந்தியா தவிர்ந்த உலக நாடுகள் எதுவும் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக உத்தியோகபூர்வமாகக் கருதவில்லை. அனேகமாக எல்லா நாடுகளுமே தத்தமது இடங்களில் புலிகள் அலுவலகங்களைத் திறந்து அவை சுயாதீனமாக இயங்க அனுமதித்து வருகின்றன.

இதனால் ஸ்ரீலங்கா அரசுக்கும் அரசுப் படைகளுக்கும் எதிராக உலகம் முழுவதும் வியாபித்துள்ள ஒரு செயற்பாட்டு இயந்திரத்தைப் புலிகளால் பேண முடிகின்றது.

புலிகளை இந்த விடயத்தில் வீழ்த்தும் முயற்சியில் ஸ்ரீலங்கா வெளிவிவகார அமைச்சு ஓரளவு முன்னேறத் தொடங்கியிருப்பதாகக் கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

புலிகளைப் பயங்கரவாத அமைப்பாக அறிவிக்கும்படி ஸ்ரீலங்கா அரசு விடுத்து வந்த கோரிக்கையை இதுவரை காலமும் உதாசீனம் செய்து வந்த அமெரிக்கா இப்போது அக்கோரிக்கையைப் பரிசீலனைக்கு எடுத்திருப்பதாகத் தெரிய வருகின்றது.

அமெரிக்காவை இந்த விடயத்தில் இணங்கச் செய்து வைத்துவிட்டால் — தற்போதுள்ள சர்வதேச அரசியல் போக்கில் — அமெரிக்காவைப் பின்பற்றி ஏனைய நாடுகளும் வழிக்கு வந்து விடும் என ஸ்ரீலங்கா எதிர்பார்க்கின்றது.

அமெரிக்காவின் பென்டகனிலிருந்து மூத்த ஜெனரல்கள் சிலர் அடிக்கடி கொழும்பு வந்து திரும்புவதற்கும் இந்த ஏற்பாட்டுக்கும் இடையில் தொடர்புகள் இருக்கக்கூடும் என்றும் சந்தேகிக்கப்படுகின்றது.

புலிகளைப் பயங்கரவாத இயக்கமாக அறிவிக்கக் கோரும் இலங்கையின் கோரிக்கையை — அடுத்த மாதத்தில் — செப்ரெம்பரில் —'ஸீரியஸாக' பரிசீலனைக்கு எடுப்பதாக அமெரிக்கத் தரப்பு இலங்கைக்குக் கூறியிருப்பதாகவும் ஒரு தகவல்.

தற்போது இடம்பெற்று வரும் சில சம்பவங்கள் இந்த விடயத்தில் அரசுத் தரப்புக்கு உதவுபவையாகவும் — புலிகளுக்கு 'மைனஸ் பொயிண்ட்' ஆகவும் — அமைந்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

அந்தச் சம்பவங்கள் வருமாறு:-

★ திருகோணமலை மாவட்ட எம். பியான தங்கத்துரை படுகொலை.

★ திருகோணமலை மாவட்ட எம் பியான மஹ்ரூப் படுகொலை.

★ வடக்கு, கிழக்கு கடலில் கப்பல் போக்கு வரத்துக்குப் புலிகள் தடைவிதித்தமை.

★ ஸ்ரீலங்கா அரசுக்கு ஆயுதங்களை ஏற்றி வந்த கப்பல் ஆழ்கடலில் காணாமல் போனமை.

இவற்றில் தங்கத்துரை. மஹ்ரூப் படுகொலைகளுக்குப் புலிகள் மீதே அரசுத் தரப்பு பகிரங்கமாகக் குற்றம் சுமத்தி வருகின்றது; புலிகள் மௌனம் சாதித்து வருகின்றார்கள்.




''புலிகள் இந்தப்படுகொலைகளைச் செய்யாவிடில் அதனைப் பகிரங்கமாக மறுப்பதோடு கொலைகளைக் கண்டிக்கவும் வேண்டும்'' — என சர்வதேச மன்னிப்புச்சபை அதிகாரிகள் கேட்கும் அளவுக்கு இந்தப் படுகொலை விவகாரங்கள் புலிகளுக்கு எதிராகத் திரும்பி விட்டன. ஆனால் புலிகள் இதுவரை அக்கொலைகளுக்கான பொறுப்பை மறுக்கவுமில்லை; கொலைகளைக் கண்டிக்கவுமில்லை.

எனவே இக்குற்றச்சாட்டுக்களிலிருந்து புலிகள் இன்னும் ஒதுங்கவில்லை.

ஆகவே ஆயுதம் ஏந்தாத நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொல்லும் இத்தகைய செயல்களுக்குப் புலிகளைப் பொறுப்பாக்கும் ஸ்ரீலங்கா அரசின் வலையில் சர்வதேச மன்னிப்புச் சபையும் அமெரிக்க அரசும் விழுவதைத் தவிர வேறு வழியில்லாத நிலையே நிலவுகின்றது.

திருகோணமலை மாவட்டம் இறக்கக் கண்டிப் பகுதியில் முப்பதுக்கும் அதிகமான முஸ்லிம்கள் கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருப்பதும் —

அவர்களில் சிலரை விடுவித்து ஏனையோரைத் தாங்களே தடுத்து வைத்திருப்பதாகப் புலிகள் அறிவித்திருப்பதும் கூட —

புலிகளுக்கு எதிரான சர்வதேசப்போக்கை வலுவூட்டியிருக்கின்றன.

இக்கடத்தல்களுக்கு என்ன காரணத்தை — சமாதானத்தை — புலிகள் கூறினாலும் அது சர்வதேச அளவில் எடுபடுமா என்பது கேள்விக் குறியே.

இது தவிர, வடக்கு — கிழக்குக் கடலில் கப்பல் போக்குவரத்துக்கு தடை விதித்த புலிகளின் செயலும் புலிகளுக்கு எதிரான போக்கை அமெரிக்கா தீவிரப்படுத்த வழிகோலியிருப்பதாகத் தெரிகின்றது.

பொதுமக்களுக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களையும், பொது மக்களையும் ஏற்றிச் செல்லும் கப்பல்களுக்கு தீங்கு ஏதும் விளைவிக்கக் கூடாது என்று கோரியுள்ள அமெரிக்கா அத்தகைய 'பயங்கரவாத' செயல்களை கண்டிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

படையினருக்கு ஷெல்களை ஏற்றி வந்த கப்பல் நடுவழியில் காணாமல் போயிருக்கின்றது. அந்தப் பொறுப்பும் புலிகள் மீதே சுமத்தப்பட்டிருக்கின்றது. அது உண்மையானால் அமெரிக்கா புலிகளுக்கு எதிராக மேலும் சீற்றமடையக் கூடும்.

ஏனெனில் சர்வதேச கடல் பரப்பில் கப்பல்களைக் கொள்ளையிடுவது, கடத்துவது, தடுப்பது, கைப்பற்றுவது போன்றவை — அது எந்தக் கப்பலாக இருந்தாலும், எத்தகைய பொருள்களை ஏற்றி வருவதாக இருந்தாலும் — சர்வதேச கடல் வாணிபத்தைப் பாதிக்கும் செயல் என்று அமெரிக்கா வியாக்கியானம் செய்யும்.

ஈராக், கியூபா போன்ற நாடுகளின் மீது தனது ஏற்பாட்டில் பொருளாதாரத் தடை விதிக்கும் போது கடலில் இத்தகைய போக்கைத் தான் அமெரிக்கா பின்பற்றுகின்றது என்பது வேறுவிடயம். சர்வதேசக் கடலில் பயணிக்கும் கப்பல்களை வழிமறித்துத் தடுத்து, மேற்படி நாடுகளுக்கு தமது தடையுத்தரவை மீறி பொருள்கள் செல்கின்றனவா எனச் சோதிப்பது 'சர்வதேச பொலீஸ்காரன்' என்ற முறையில் தனக்கும் தனது நேசநாட்டு அணிகளுக்கும் உள்ள உரிமை என அமெரிக்கா கருதுகின்றது.

ஆனால் இலங்கை அரசுக்கு யுத்த தளபாடங்களை ஏற்றிச் செல்லும் கப்பல்களை புலிகள் சர்வதேச கடல்பரப்பில் வழிமறித்தால் அதை 'பயங்கரவாதம்' என்றுபிரகடனம் செய்யவும் அமெரிக்கா தயங்கப்போவதில்லை.

இந்நிலையில் தான் — வடபகுதிக்கான கப்பல் சேவைகளுக்கு எதிராகப் புலிகள் விடுத்திருக்கும் அறிவிப்பை 'பயங்கரவாத உத்தி' என்று அமெரிக்கா பிரகடனப்படுத்தியிருக்கின்றது.

இது தொடர்பான அமெரிக்கத் தரப்பின் அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

''கப்பல் போக்குவரத்தில் தலையீடு செய்வது மற்றும் படுகொலைகளை அமெரிக்கா வன்மையாகக் கண்டிக்கின்றது. அனைத்துப் பயங்கரவாத நடவடிக்கைகளையும் கைவிடுமாறு விடுதலைப் புலிகளைக் கோருகின்றோம். யுத்தத்தில் ஈடுபடாதவர்களைப் படுகொலை செய்வதையும் ஏனைய மனித உரிமை மீறல்களையும் கைவிடுமாறு புலிகளிடம் சர்வதேச மன்னிப்புச்சபை விடுக்கும் கோரிக்கையுடன் நாமும் சேர்ந்து கோரிக்கை விடுக்கின்றோம்.

''இப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிக்கு தொடர்ந்து ஆதரவளிக்கிறோம்,'' — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளுக்கு எதிரான தனது போக்கை அமெரிக்கா தீவிரப்படுத்துவதையே அமெரிக்காவின் பிந்திய நிலைப்பாடு எடுத்துக் காட்டுகின்றது.

★ ★ ★

### கப்பல் மர்மம் நீடிக்கிறது

ஸ்ரீலங்கா அரச படைகளுக்கு 12 'கென்டெயினர்'களில் — 81 எம். எம். அளவுடைய— 32 ஆயிரத்து 400 போட்டார் ஷெல்களை ஏற்றிக் கொண்டு வந்த சமயம் ஆழ்கடலில் — இடைவழியில் — காணாமல் போனதாகக் கூறப்படும் கப்பல் பற்றிய மர்மம் ஸ்ரீலங்காப் படை வட்டாரங்களில் தொடர்ந்து நீடித்து வருகின்றது.

வெடிப்பொருள்களுடன் கப்பல் காணாமல் போனதைத் தவிர. அது பற்றிய மிகச் சொற்பமான தகவல்களே இதுவரை வெளியாகியிருக்கின்றன.

முதலில் அக்கப்பலின் உண்மையான பெயர் குறித்தே சர்ச்சைகள் நிலவுகின்றன.

கப்பல் கடத்தப்பட்டது குறித்து மேற்கத்திய தூதரகம் ஒன்றுக்கு முதன் முதலில் கிடைத்த 'பக்ஸ்' செய்தியில் அக்கப்பலின் பெயர் 'ஸ்டில்லஸ் விக்ரோறியா' ('Stillus Victoria') எனக் குறிப்பிடப்பட்டிருந்ததும் —

ஆனால் அக்கப்பலின் பெயர் 'ஸ்டில்லஸ் லிமசுல்' ('Stillus Limmasul') என சுயாதீன செய்தி வட்டாரங்கள் செய்தி வெளியிட்டிருந்ததும் தெரிந்ததே.

ஆனால் இந்த ஆயுதக் கப்பல் இலங்கையின் கடல் எல்லைக்குள் பிரவேசிக்கலாம் என்று தெரிவித்து —

அது குறித்து அதிதீவிர கண்காணிப்பு மேற்கொள்ளுமபடி கடற்படைத் தளபதி றியர் அட்மிரல் சிசில் திஸேரா சகல கடற்படைத் தளங்களுக்கும் ஜூலை 18 ஆம் திகதி அனுப்பிய — அவசர — எச்சரிக்கைத் தகவலில் கப்பலின் பெயர் 'பில்லஸ் லிமசோல்' ('Pillus Limmasol') எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

உண்மையான பெயர் எதுவென்று தெரியாவிட்டாலும், இந்தளவு எண்ணிக்கை ஷெல்களுடன் கப்பல் ஒன்று காணாமல் போனது மட்டும் உண்மை என்கின்றன சுயாதீன செய்தி வட்டாரங்கள்.

இந்த வெடிப்பொருள்கள் ஸிம்பாப்வே தலைநகர் ஹராரேயில் இருந்து தரைவழியாக மொஸாம்பிக் நாட்டுக்கு எடுத்து வரப்பட்டு, அதன் துறைமுக நகரான பெய்ராவில் (Beira) வைத்து கடந்த மே 24 ஆம் திகதி கப்பலில் ஏற்றப்பட்டன.

அதன் பின்னர் வேறு சரக்குகளை ஏற்றுவதற்காக அக்கப்பல் பெயர் குறிப்பிடப்படாத — தென்னாபிரிக்காவின் — சில துறைமுகங்களுக்கு அல்லது துறைமுகத்துக்குச் சென்றதாகத் தெரிகின்றது.

அதன் பின்னரே கப்பல் மடகஸ்காருக்குச் சென்றது. அங்கிருந்து கப்பல் இலங்கை நோக்கி புறப்பட்டு இன்றோடு சரியாக ஒரு மாதம் ஆகின்றது.

ஆனால் கப்பலின் கதி தெரியவில்லை.

இதற்கிடையில் மற்றொரு சந்தேகமும் கிளப்பப்படுகின்றது.

ஸிம்பாப்வேயில் உள்ள தமது தொடர்புகள் மூலமாக குறிப்பிட்ட வெடிப்பொருள்களை இலங்கைக்கு ஏற்றிச் செல்லும் பொறுப்பை புலிகளின் கப்பல் கம்பனியே வேறு பெயரில் பெற்றுக் கொண்டதா என்பதுதான் அந்தச் சந்தேகம்.

மேற்படி வெடிப் பொருள்களை ஏற்றி வந்த கப்பலின் பெயர் குறித்து நிலவும் குளறுபடிகள் இத்தகைய சந்தேகத்தை மேலும் தீவிரப்படுத்தியிருக்கின்றன.

வெளிநாட்டில் இயங்கும் புலிகளின் கப்பல்களும், கப்பல் கம்பனிகளும் பல்வேறு பெயர்களில் இயங்குகின்றன. அடிக்கடி கப்பல்களின் பெயர்களை மாற்றுவதி புலிகள் சூரர்கள்.

இந்தியக் கடற்படை 1993 ஜனவரி 13 ஆம் திகதி புலிகள் பிரமுகர் கிட்டு பயணம் செய்த கப்பலைச் சுற்றி வளைத்துப் பிடித்தது தெரிந்ததே.

அக்கப்பலின்பதிவுப் பெயர் M. V. Yahat. ஆனால் கப்பல் வழிமறிக்கப்பட்ட சமயம் Y என்ற எழுத்து அழிக்கப்பட்டு M. V. Ahat என்ற பெயரில் கப்பல் இருந்தது.

எனவே ஓரிரு எழுத்துக்களை மாற்றுவதன் மூலம் கப்பல் பற்றிய தகவல்களை குழப்பி விடுவதில் புலிகள் தேர்ந்தவர்கள் என்பது தெரிகின்றது.

தற்போது வெடிப்பொருள்களை ஏற்றி வந்ததாகக் கூறப்படும் கப்பலின் பெயரிலும் இத்தகைய குழப்பங்களே காணப்படுகின்றன.

இக்கப்பல் பற்றிய தகவலை ஒரு மாதமாக கண்டுபிடிக்கமுடியாமல் இருப்பது இச்சந்தேகத்தை மேலும் தீவிரமாக்குகின்றது.

இந்தச் சந்தேகம் உண்மையானால் புலிகளைப் பொறுத்தவரை 'பழம் நழுவிப் பாலில் விழுந்த கதை'' தான்.

இதற்கிடையில் —

இந்த வெடிப்பொருள்களைக் கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்த ஸிம்பாப்வே பாதுகாப்பு அமைச்சின் சார்பில் உயரதிகாரி ஒருவர் இவ்வாரத்தில் கொழும்பு வர இருந்தார். அவர் கொழும்பு வந்ததும் கப்பல் மர்மம் பற்றிய மேலதிக விடயங்கள் அம்பலத்துக்கு வரும் என கொழும்பு பாதுகாப்பு அதிகாரிகள் எதிர்பார்த்திருந்தனர்.

இதற்கிடையில்—

இந்த வெடிப்பொருள்கள் வந்து சேராததால் ஏற்பட்ட நஷ்டத்துக்கு காப்புறுதி பெறும் முயற்சிகள் குறித்து சில பாதுகாப்பு வட்டாரங்கள் ஆராய்ந் வருவதாகத் தெரிகின்றது.

**பாசுபதன்**

( 5 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேச்சும் புலிகள் போக்கும்!

## உள்ளும் புறமும்

குறுமுனி

பேச்சுக் குறித்து அடிக்கடி பேச்சு அடிபடுவதுண்டு. ஆனால் இப்போது பேச்சென்ற மூச்சே இல்லாமல் போய்விட்டது.

எனினும் நீதி அமைச்சர் பேராசிரியர் ஜி எல். பீரிஸும், வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரும் சில பத்திரிகைப் பேட்டிகளில் பேச்சுக் குறித்து கோடிகாட்டியிருக்கின்றார்கள்.

இராணுவரீதியில்புலிகளைப் பலவீனப்படுத்திய பின்னரே பேச்சுக்கள் நடத்தப்பட வேண்டும் என்ற சாரப்பட அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள்.

''புலிகளைப் பேச்சுக்குக் கொண்டு வருவதானால் அவர்களை இராணுவரீதியில் பலவீனப்படுத்தியாக வேண்டும். அதன் பின்னரே அவர்கள் வேறு வழியின்றி பேச்சுக்கு முன்வருவார்கள்''— என்று அரசுத்தரப்பில் வியாக்கியானம் கூறப்படுகின்றது.

இதையேதான் அண்மையில் கொழும்பு வந்து தமிழ்க் கட்சிகள் உட்பட பலதரப்புடனும் பேச்சுநடத்தி விட்டுத் திரும்பிய ஆஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் அலெக்ஸாண்டர் டௌனரும் குறிப்பிட்டுச் சென்றிருக்கின்றார்.

தமிழ்க்கட்சிப் பிரமுகர்களைச் சந்தித்த அவர்—

''அரசின் தீர்வுத் திட்ட யோசனைகளில் உள்ள குறைபாடுகளைப் பெரிதுபடுத்தாமல் அதனை முதலில் ஏற்றுக் கொள்ளுங்கள். அப்போதுதான் புலிகளைப் பலவீனப்படுத்தி பாதைமாற்றலாம். வடக்கு—கிழக்கில் முப்பது வீதமான மக்களே புலிகளை ஆதரிக்கின்றனர். எனவே அவர்களைப் பலவீனப்படுத்த முயலுங்கள்''—என்று கூறியிருக்கின்றார்.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் மு. சிவசிதம்பரம் உட்பட பல தமிழ்க் குழுக்களின் பிரதிநிதிகளும் 'புலிகளை ஓரங்கட்டுதல், பலவீனப்படுத்தல்' —ஆகியவை குறித்தே அச்சந்திப்பில் பிரஸ்தாபித்திருக்கின்றார்கள்.

அரசினதும் ஏனைய தமிழ்க் கட்சிகளினதும் இலங்கை இனப்பிரச்சினைகளில் ஈடுபாடு காட்டும் ஆஸ்திரேலியா போன்ற நாடுகளினதும் கருத்துக்களுக்கு பதிலளிக்கும் வகையில் புலிகள் கருத்து வெளியிட்டிருக்கின்றார்கள்.

அவர்கள் தெரிவித்திருப்பதாவது:—

''ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளைவிட்டு ஸ்ரீலங்கா படையினர் வெளியேறும் வரை ஸ்ரீலங்கா அரசுடன் பேச்சுவார்த்தை என்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் வற்புறுத்தி வரும் இந்த நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

''விடுதலைப்புலிகளைப் பலவீனமாக்குவது என்ற போர்வையில், தமிழ் மக்களின் ஆத்மாவோடு இரண்டறக் கலந்துவிட்ட விடுதலை எழுச்சியையும், அவர்களின் சுய கௌரவ உணர்வையும் பலவீனப்படுத்துவதே ஸ்ரீலங்கா அரசின் நோக்கமாகும்.

''பலவீனமான நிலையில் அரைகுறைத் தீர்வுகளுக்கு தலையாட்டிக் கொண்டிருக்கும் தமிழ்க் கட்சிகள் போன்று, விடுதலைப் புலிகளையும் பணியவைப்பது தான் பேரினவாதிகளின் திட்டமாகும்.

''தமிழ் மக்களின் உணர்வெழுச்சியின் சின்னமாக உள்ள விடுதலைப் புலிகளை பலவீனப்படுத்திவிட்டால் பின்னர் தமிழ் மக்களின் எழுச்சிக்குஆப்பு வைத்து விடலாம் என்று நினைக்கிறார்கள்.

''ஸ்ரீலங்கா அரசு தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க விரும்பினால் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை நாடாமல் இருப்பது ஏன்? விடுதலைப் புலிகள்தான் அரசியல் தீர்வுக்குத் தடையாக இருப்பதாக சிறிலங்கா அரசு கூறுகிறது. தான் முன்வைத்த அரைகுறைத் தீர்வுப் பொதியைக்கூட ஒப்பேற்ற முடியாமல் போனது ஏன்?

''புலிகளைப்பலவீனப்படுத்துவது என்பதும் ஒன்றுதான், தமிழ் மக்களின் தேசிய எழுச்சியின் ஆத்மாவை பலவீனப்படுத்துவது என்பதும் ஒன்றுதான்,

''உண்மையான சமாதானத்தை நாம் என்றும் எதிர்த்தவர்கள் அல்லர். சமாதானம் என்ற பெயரில் எங்கள் தேசிய கௌரவத்தை — தேசிய ஆத்மாவை — பேரினவாதத்தின் காலடியில் போடுவதற்கு நாம் சம்மதிக்கப்போவதில்லை.

''சர்வதேச சமூகம் முன்பாக ஸ்ரீலங்கா அரசு சமாதான வேடம் புனைந்து நிற்கிறது

''ஆனால்தமிழ் மக்கள் மீது கொடூரமான யுத்தத்தை கட்டவிழ்த்துவிட்டுள்ளது. தினமும் தமிழர் குடியிருப்புக்கள் மீது எறிகணைவீச்சுக்களும், விமானத் தாக்குதல்களும் இடம்பெற்ற வண்ணமுள்ளன.

''உணவுப் பொருள்கள் அனுப்புவதை விடுதலைப் புலிகள் தடுப்பதாக அரசு கூறிவருகிறது.ஆனால் வன்னியில் அரசின் பொருளாதாரத் தடைகாரணமாக பட்டினிச் சாவுகள் ஏற்பட்டு வருகின்றன. மூவாயிரத்து நானூறு மாணவர்கள் பசியினைப் போக்க பிச்சை எடுக்கும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சர்வதேச சமூகத்தின் முன்பாக இவையெல்லாம் மறைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சி எம்மை நோக்கி திரும்பும் நாள் வெகுதூரத்தில் இல்லை

''எத்தகைய இடர் ஏற்பட்டாலும் தமிழ் மக்களின் சுதந்திரமான வாழ்வுக்காக, தன்மானத்திற்காக விடுதலைப் புலிகளின் படையணிகள் போரிடச் சித்தமாயுள்ளன''— என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

★ ★ ★

### அமைச்சர் பதவி: சமசமாஜிகள் விலகுவர்?

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் இடம்பெற்றுள்ள லங்கா சமசமாஜக் கட்சி,அமைச்சரவையிலிருந்து வெளியேறுவது என்று கொள்கைஅளவில்தீர்மானித்திருப்பதாக பிந்திக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன.

அண்மையில் நடந்த கட்சியின் மத்திய செயற்குழுக்கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் 34க்கு 11 என்ற வாக்குகள் அடிப்படையில் நிறைவேற்றப்பட்டதாக கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்போது லங்கா சமசாஜக் கட்சியைச்சேர்ந்த பேர்னாட் சொய்ஸா அமைச்சராகவும், அத்தாவுட செனவிரத்ன பிரதி அமைச்சராகவும் உள்ளனர். இது தவிர அக்கட்சியைச் சேர்ந்த மேலும் மூன்று எம். பிக்கள் அரசுத் தரப்பில் உள்ளனர்

''அரசுக்குள் அமைச்சர்கள் பதவி தந்திருந்தாலும் அதிகாரம் வழங்கப்படாமல் பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. எம்மைக் கேட்காமல் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் முடிவுகள் எடுக்கப்படுகின்றன. எமக்கு உடன்பாடில்லாத முடிவுகளும் மேற்கொள்ளப்படுகின்றன. முடிவுகள் எம்மீது திணிக்கப்படுகின்றன. இதனால் நாம் செய்யாத முடிவுகளுக்கு நாம் பொறுப்பேற்க வேண்டிவருகின்றது.''

''கூட்டுப் பொறுப்பில் முடிவுகள் எடுப்பதாக முன்னரே தீர்மானிக்கப்பட்டிருந்தாலும் கூட்டணிக்குள் இருக்கும் கட்சிகளுடன் சம்பந்தம் வைக்காமலேயே அரசு முடிவுகளை எடுக்கிறது.'' — என்று கட்சி வட்டாரங்கள் குற்றம் சுமத்தின.

''அமைச்சரவையிலிருந்து சட்சி உறுப்பினர்கள் வெளியேறினாலும் அரசுத்தரப்பு நாடாளுமன்ற குழுவில் தொடர்ந்து இடம் பெறுவோம். அங்கு எமது கருத்துகளை வலியுறுத்துவோம்'' —என்று அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன

★ ★ ★

### எம். பி. க்களின் பெயரில் குளறுபடி

காலமான எம். பிக்களின் பெயர்கள் குறித்து கடந்த வாரம் நடந்த குளறுபடிகள் சுவையானவை.

திருகோணமலை மாவட்ட எம். பியான மஹ்ரூப்பின் உயிரிழப்புபற்றியசெய்தியை வெளியிட்ட ரூபவாஹினி ''ஐக்கிய தேசியக் கட்சியின் காலஞ் சென்ற எம். பியான அஸ்வரின் மரணச் சடங்கில் பெரும் எண்ணிக்கையானோர் பங்குகொண்டனர்'' —என்று தவறுதலாக ஒரு தடவை அறிவித்து விட்டது.

கடந்த வாரம் சபைகூடிய போது இந்த விவகாரத்தைப் பிரஸ்தாபித்த அஸ்வர் எம். பி. ''முஸ்லிம்கள் மறுபிறப்பில் நம்பிக்கை வைக்காவிட்டாலும் மறுபிறப்பு எடுத்து நான் இங்கு வந்திருக்கின்றேன்''—என்று பலத்த சிரிப்புக்கு மத்தியில் கூறினார்.

அதன் பின்னர் சபை அமர்வுக்கு தற்காலிகமாகத் தலைமை வகித்த ஹென்றி ஜெயமஹா எம். பி.''அடுத்த மரண அறிவித்தல் அமரர் சரச்சந்திர ராஜகருணவினுடையது''— என்று அறிவித்தார்.

அப்போது மீண்டும் குறுக்கிட்ட அஸ்வர் எம். பி., நாடாளுமன்ற உறுப்பினரான சரச்சந்திர ராஜகருண இன்னும் உயிரோடு இருப்பதாகவும், சரத்சந்திர குணரட்ணவுக்கே அஞ்சலி செலுத்தப்படவிருப்பதாகவும் சுட்டிக் காட்டினார்.

இதனிடையில் குறுக்கிட்ட குழுக்களின் தலைவர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா ''நாங்கள் அமரர் அஷ்ரப்பின் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கவும் ஒப்புக் கொண்டுள்ளோம்'' — என்று குறிப்பிட்டார்.

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அதிரடி அரங்கு

யாழ்ப்பாணத்து மக்களுக்கு இன்று அவசரமான — அவசியமான — சேவைகளில் ஒன்று தொலைத் தொடர்புச்சேவையாகும்.

யாழ்ப்பாணத்துக்கு என ஒதுக்கப்பட்ட மூன்று, நான்கு 'லைன்' களை மட்டும் வைத்துக் கொண்டு அரசாங்க நிறுவனங்களுக்கும், தனியார் துறையினருக்கும், பொது மக்களுக்கும், சில வேளைகளில் படையினருக்கும் என பலதரப்பினருக்கும் தேவைப்படும் அழைப்புக்களைக் கொடுக்க முடியாது அல்லாடுவது 'ரெலிகொம்' நிறுவன யாழ். ஊழியர்களின் நிலை.

வார நாள்களில் — பகல் நேரத்தில் வங்கிகள், பத்திரிகை நிறுவனம் போன்ற பரபரப்பாகச் செயற்படும் — அமைப்புகளுக்கு நீண்ட நேர தொலைபேசி அழைப்புகளை வழங்க வேண்டியதேவை 'ரெலிகொம்' நிறுவனத்துக்கு உள்ளது. அதனால் அத்தினங்களில் பொதுமக்களின் சேவையைப் பூர்த்தி செய்வது ரெலிகொம் ஊழியர்களுக்கு கஷ்டமாக உள்ளது.

அத்துடன் வார நாள்களில் — வேலைத் தினங்களில் பொது மக்களும் தமது அன்றாட வேலைகளை விட்டு விட்டு, வெளியூர் தொலை பேசி அழைப்புகளுக்காகக் காத்துத் 'தவம்' கிடப்பது இயலாததே.

ஆகவே எந்த வகையில் பார்த்தாலும் பொது மக்களுக்கு கூடிய அழைப்புக்களை வழங்குவதற்கு ரெலிகொம் நிறுவனத்துக்கும் —

கூடிய அழைப்பு வசதிகளைப் பெறுவதற்கு பொது மக்களுக்கும் —

வசதியான நாள் ஞாயிறு போன்ற விடுமுறைத் தினங்களே.

இத்தினத்தில் மேலதிகமாக வேலை செய்து மக்கள் தேவையை நிறைவேற்ற 'ரெலிகொம்' நிறுவன ஊழியர்கள் தயார். ஆனால் மக்களுக்கு நியாயமான கட்டணத்துடன் செயலாற்றி வரும் யாழ். பிரதம தபால் கந்தோர்தான் அத்தகைய தினங்களில் திறக்க முடியாத நிலை.

கடந்த காலங்களில் ஞாயிற்றுக் கிழமைகளில் திறந்திருந்து மக்களுக்கு தொலைபேசிச் சேவையை வழங்கி வந்த யாழ். பிரதம தபால் கந்தோர் கடந்த சில ஞாயிறுகளாகப் பூட்டப்பட்டுக்கிடக்கின்றது.

விசாரித்துப் பார்த்ததில் கீழ் மட்ட ஊழியர்களில் இருந்து பிரதம தபால் அதிபர் வரை அனைவரும் ஞாயிற்றுக் கிழமை சேவையின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படத் தயாராக இருக்கின்றார்கள் என்பதும் —

உள்ளூரில் இருக்கும் உயர்மட்ட அதிகாரி ஒருவரே கொழும்பில் சில குழப்பங்களைப் பண்ணி, ஞாயிற்றுக்கிழமைச் சேவைக்கு தடை ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றார் என்பதும் தெரிய வருகின்றது.

அரச சேவைகளின் சிவப்பு நாடாப் போக்குகள், யுத்தத்தால் பாதிப்புற்றிருக்கும் யாழ்ப்பாணத்துக்குப் பொருத்தமற்றது என்பதும் —

அத்தியாவசிய இடங்களில் நாட்டு நிலைமை கருதி சிவப்பு நாடாப் போக்குகளைத் தூக்கி எறிந்து விட்டே ஏனைய திணைக்களங்கள் செயற்படுகின்றனஎன்பதும் சம்பந்தப்பட்ட அதிகாரிக்குத் தெரியாததல்ல. தனிப்பட்ட அதிகாரிகள் மீது இருக்கும் குரோதம் காரணமாக — சில அதிகாரிகள் மக்கள் மத்தியில் நற்பெயர் எடுப்பதைத் தாங்க முடியாது — 'குள்ளத்தனமான' வேலை செய்து மக்களுக்குத் தேவையான அத்தியாவசிய சேவையை முடக்குவது அநியாயமான செயல்.

கொழும்பைக் காட்டி தப்பித்துக் கொள்ளும் கொழுப்பு மனப்பான்மை மாறவேண்டும். இல்லையேல் பொதுமக்களை அசௌகரியப்படுத்தும் இத்தகைய செயல்களில் படை அதிகாரிகள் நேரடியாகத் தலையிடும் நிலை ஏற்படும். அது நாமாகவே நமது குடுமியை படை அதிகாரிகளின் கைகளில் கொடுப்பதாக அமைந்து விடும்.

அதுவும் யாழ். நகரப் படை அதிகாரி பொறுப்பு புதியவரிடம் வரும் இவ் வேளையில் மதியூகத்துடன் செயற்பட வேண்டும்.

கொழும்புடன் தொடர்பு கொண்டு குடாநாட்டு மக்களுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கிடைக்கும் வசதியை ஓரளவாவது எட்டவைப்பது அதிகாரிகளின் கடமை. அது முடியாதவர்கள் வேலையை விட்டுவிட்டு சிவனைச் சிந்திக்கச் சென்று விடலாம்.

ஏனென்றால் இங்கு யாரும் நரியைப் பரியாக்க வரப்போவதில்லை.

★ ★ ★

மக்களின் போக்குவரத்துக்கு இடைஞ்சலாக இருக்கும் தொல்லைகளுள் முக்கியமானது ஒன்று வீதிகளுக்குக் குறுக்காக அமைக்கப்படும் வேகத்தடைகள் (Speed Brakers)ஆகும்.

பாதுகாப்பு ஏற்பாடு கருதி படையினர் வேகத்தடைகள் அமைப்பதை குற்றம் சொல்ல முடியாது. ஆனால் அந்தப் பெயரில் தாம் விரும்பிய இடம் எங்கும் — கண்ணை மூடிக் கொண்டு — அவர்கள் வேகத்தடைகளை அமைப்பது கண்டிக்கத்தக்கது.

பருத்தித்துறை வீதி இன்று குடாநாட்டில் முக்கிய வீதியாகக் கருதப்படுகின்றது. அவ்வீதி தார் போட்டு திருத்தப்பட்ட சமயம், ஆங்காங்கே நிலை கொண்டிருந்த படையினர் தங்கள் விருப்பப்படி வேகத்தடைகளை அமைக்கச் செய்திருப்பதை அவதானிக்க முடிகின்றது.

சிறுப்பிட்டி — புத்தூர் பகுதிகளில் சுமார் மூன்று கிலோ மீட்டர் தூரத்துக்கு இடையில் ஒரு டசின் வேகத் தடைகள். அதுவும் சராசரி வாகனங்கள் செல்ல முடியாதளவு உயரத்துக்கு வீதிக்குக் குறுக்கே பிட்டிகள். இராணுவ வாகனங்கள் உயரமானவை. இந்த வேகத்தடைகளைப் பாய்ந்து குதித்துக் கடந்து விடும்.

ஆனால் பொதுமக்களின் 'மொறிஸ் மைனர்' போன்ற கார்கள், ஸ்கூட்டர்கள் பாடுதான் திண்டாட்டம்.

இந்த வேகத்தடைகளில் வாகனங்கள் ஏறிக் குதிப்பதால் அவ்வப்போது முதுகு முறியும் பயண அனுபவங்கள் வேறு.

எப்போது நீங்கும் இந்த அவலம்?

- மின்னல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலிகளுக்கு....

(மூன்றாம் பக்கத் தொடர்)

ஸ்ரீலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை—அதன் யுத்தச் செலவினத்தைப் பொறுத்தவரை — 32 ஆயிரத்து 400 ஷெல்களின் இழப்பு, நிதிரீதியில் ஓர் இழப்பே அல்ல—காப்புறுதி மூலம் நஷ்ட ஈடு பெற முடியாமல் போனால் கூட.

ஆனால் இவ்வளவு ஷெல்களும் ஸ்ரீலங்கா அரசைப் பொறுத்தவரை—பிழையான கைகளில் — புலிகளின் கைகளில்—சிக்கியிருந்தால் அதன் பாதிப்பு— இழப்புகள் அளவிடமுடியாததாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

* * *

## படை அதிகாரிகள் மாற்றம்

யாழ். நகரப் பகுதியில் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான படை அதிகாரிகளில் விரைவில் மாற்றம் இடம்பெறவிருப்பதாக நம்பிக்கையாகத் தெரியவருகின்றது.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை வலிகாமம், தீவகப் பிரதேசங்கள் 51 ஆவது டிவிஷனின் கீழும் —

வடமராட்சி, தென்மராட்சிப் பிரதேசங்கள் 52 ஆவது டிவிஷனின் கீழும் வருகின்றன.

யாழ். குடாநாடு முழுவதற்கும் கட்டளைத் தளபதியாக மேஜர் ஜெனரல் கருணாதிலக பணிபுரிகின்றார்.

51 ஆவது டிவிஷன், மேஜர் ஜெனரல் எல். பி. பலகல்லவுக்கு கீழும் —

52 ஆவது டிவிஷன் சிரேஷ்ட பிரிகேடியர் சூள செனிவிரத்னவுக்குக் கீழும் செயற்படுகின்றன.

51 ஆவது டிவிஷனின் தலைமையகம் அச்செழுவிலும்—

52 ஆவது டிவிஷனின், தலைமையகம் யாழ்ப்பாணம் சுபாஸ் ஹோட்டலிலும் உள்ளன.

51 ஆவது டிவிஷனின் கீழ் நான்கு பிரிகேட்டுகள் உள்ளன.

அச்செழுப் பிரதேசத்தில் 511 பிரிகேட், யாழ். நகரத்தில் 512 பிரிகேட், வலிகாமத்தின் ஏனைய பகுதி 513 பிரிகேட், தீவகத்தில் 514 பிரிகேட் (முன்னர் 27 ஆவது பிரிகேட் என அழைக்கப்பட்டது) ஆகியன செயற்படுகின்றன.

அச்செழுப் பிரதேசத்தில் செயற்படும் 511 பிரிகேட்டுக்குப் பொறுப்பாக புதிய பிரிகேடியர் ஒருவர் இவ்வாரம் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ். நகரத்தில் உள்ள 512 பிரிகேட்டுக்குப் பொறுப்பாக பிரிகேடியர் காமினி ஜயசுந்தர உள்ளார்.

கடந்த வருடம் ஜூலை 4 ஆம் திகதி யாழ். ஸ்ரான்லி வீதியில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் உயிரிழந்த பிரிகேடியர் ஆனந்த ஹமங்கொடவின் இடத்துக்கு நியமிக்கப்பட்டவர் பிரிகேடியர் ஜயசுந்தர.

யாழ்ப்பாணத்தில் தமது ஒருவருடப் பணியைப் பூர்த்தி செய்து கொண்டு, மேலதிக பயிற்சி நெறி ஒன்றைப் பின்பற்றுவதற்காக அடுத்த சில வாரங்களில் அவர் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டுச் செல்கின்றார்.

மென்மையாகப் பேசும் சுபாவம் கொண்ட பிரிகேடியர் காமினி ஜயசுந்தர, யாழ். நகரில் உள்ள அரசு அதிகாரிகளுடன் நட்புறவுடனான தொடர்பைப் பலப்படுத்திக் கொண்டவர்; அதிகம் சர்ச்சையில் சிக்காதவர்.

எனினும் யாழ். நகரில் அவர் பதவியேற்ற ஆரம்ப காலத்தில்தான் கிருஷாந்தி குமாரசுவாமி மற்றும் மூவர் படையினரால் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது.

அவரது படையணித் துருப்புகளினால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஈனச்செயல் பற்றிய விவரங்களை அவரது படையணிக்கு வெளியே இருந்து வந்த அதிகாரிகளே விசாரணை நடத்திக் கண்டுபிடித்தனர்.

இதனால் தமது படைச் சேவையில் குறை கூறும் நிலையைச் சம்பாதித்துக் கொண்டவர் ஜயசுந்தர.

அவரது இடத்துக்கு யாழ். நகரத் தளபதியாகத் தற்போது தீவகப் பகுதிக்குப் பொறுப்பாக இருக்கும் கேணல் மெண்டிஸ் நியமிக்கப்படவிருப்பதாக சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரிகேடியர் என்ற பதவி உயர்வுடன் 512 பிரிகேட்டின் பொறுப்பதிகாரியாக அவர் யாழ். நகருக்கு அடுத்த சில வாரங்களில் வருவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் வந்த பிரதேசங்களில் அரசாங்கத்தின் நடவடிக்கைகள் முழு மூச்சில் செயற்படுத்தப்பட வேண்டும் என்பதில் 'எள் என்றால் எண்ணெய் ஆக' நிற்பவர் கேணல் மெண்டிஸ். அவரின் இந்த வீச்சான போக்கால் அரச அதிகாரிகள் பலர் அதிருப்திக்கு உள்ளாவது வழமை.

யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை பல அரச திணைக்களங்களின் முக்கிய அலுவலகங்கள் செயற்படுவதும், உயரதிகாரிகளின் பணிமனைகள் இருப்பதும் யாழ். நகரில் தான். யாழ். நகருக்குப் பொறுப்பாகக் கேணல் மெண்டிஸ் வருவதும் யாழ். நகர அரச அதிகாரிகளுக்கு விளக்கெண்ணெய் குடித்த நிலையை ஏற்படுத்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. நெருக்கடியை எதிர்கொள்ளப் போகும் மற்றொரு சாரார் பதுக்கல் வியாபாரிகள், வர்த்தகர்களாக இருப்பர். கப்பல் வருகை ஒரு கிழமை தாமதமானால் விலைகளை உச்சி மரத்துக்கு ஏற்றும் 'பாச்சா' இனிமேல் பலிக்காமல் போகக்கூடும்.

கேணல் மெண்டிஸ் 512 பிரிக்கேட் தலைமைப் பொறுப்பை ஏற்றால் அவரது தற்போதைய இடத்துக்கு — தீவகத்தில் உள்ள 514 பிரிகேட்டுக்குப் பொறுப்பாகப் புதியவர் ஒருவர் நியமிக்கப்படலாம் என்றும் படை உயர் வட்டாரங்கள் தெரிவித்தன.

* * *

## நல்லூர் உற்சவ காலத்தில் ஊரடங்கு தளர்வு

அடுத்த வெள்ளிக்கிழமை நல்லூர் உற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

இந்த உற்சவத்தை ஒட்டி ஆலயச் சுற்றாடலில் உள்ள சில தடைமுகாம்கள் அகற்றப்படலாம் என்றும்—

மூடப்பட்டுள்ள சில வீதிகள், ஒழுங்கைகள் திறக்கப்பட்டு தாராள போக்குவரத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்றும்—

படை உயர்மட்டங்கள் தெரிவித்தன.

முக்கிய உற்சவ நாள்களில் ஊரடங்கு உத்தரவை மேலும் சில மணி நேரம் தளர்த்துவது குறித்தும் முடிவு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிகின்றது.

உற்சவ காலத்தில் கோயில் சுற்றாடலில் ஒரு சுதந்திரமான நடமாட்ட நிலைமை நிலவவேண்டும் என உயர் படைஅதிகாரிகள் கருதுவதாகவும் தெரிகின்றது.

* * *

## பயணிகள் விமான சேவை குறித்தும் புலிகளுடன் பேச்சு

பயணிகள் விமான சேவையில் ஈடுபட்டிருந்த 'லயன் ஏயார்' விமானங்கள் கடந்த புதன்கிழமை வரை இரண்டு வாரங்கள் பலாலி — இரத்மலானை சேவையை அடியோடு நிறுத்தியிருந்தது தெரிந்ததே.

இதற்குப்பல காரணங்கள் அவ்வப்போது கூறப்பட்டு வந்ததும் குறிப்பிடத்தக்கது.

பயணிகள் விமான சேவை நிறுத்தப்பட்டதற்கு மற்றொருகாரணம் கொழும்பில் தற்போது கூறப்படுகின்றது.

கப்பல் சேவை போன்று பயணிகள் விமான சேவையையும் புலிகள் இலக்கு வைக்கலாம் என்று அந்த சேவையில் ஈடுபட்ட விமானிகள் அஞ்சியதாகவும் —

அதனால் கடமையில் ஈடுபட அவர்கள் மறுக்கவே வேறு வழியின்றி சேவை இடைநிறுத்தப்பட்டதாகவும் கூறப்படுகின்றது.

இந்த இக்கட்டு நிலையில் பலாலிக்கான விமான சேவையை நடத்துவதற்கான இணக்கத்தை புலிகளிடமிருந்து பெறுவதற்காக லண்டனில் உள்ள விடுதலைப் புலிகளின் பணிமனையில் 'லயன் ஏயார்' நிறுவனம் பேச்சுவார்த்தைகளை நடத்தியதாகத்தெரியவருகின்றது.

இப்பேச்சுக்கள் பயன் அளித்தனவா? இணக்கம் காணப்பட்டதா?—என்பவை குறித்து ஏதும் தெரியவில்லை ஆனால் விமான சேவை கடந்த மூன்று தினங்களாக நடைபெற்று வருகின்றது.

* * *

## படையினர் ஓட்டம்

வவுனியாவுக்கு வடக்கே தற்போது இடம் பெற்று வரும் 'வெற்றி உறுதி' நடவடிக்கையில் தரை யுத்தத்தில் ஈடுபட அனுப்பப்பட்ட 3 ஆயிரம் விமானப் படையினரில் 900 படையினர் யுத்த முனையிலிருந்து தப்பி ஓடி விட்டதாகவும்—

யுத்தப்பிரதேசத்தில் நிறுத்தப்பட்ட பொலீஸாரிலும் கணிசமான எண்ணிக்கையானோர் தலைமறைவாகி விட்டதாகவும்—

சிங்கள வார இதழ் ஒன்று தகவல் வெளியிட்டிருக்கிறது,

கண்ணீர் அஞ்சலி

எமது அருமை நண்பர்

திரு. செ. சிவலிங்கம் அவர்களது

அன்பு மனைவியும், சுதாகரன், ஜனனி, செல்வகரன் ஆகியோரின் அன்புத் தாயாருமாகிய

திருமதி சிவலிங்கம் இராசகுமாரியம்மா

(இராசாத்தி)

அவர்கள் 14-07-97 இல் விசுவமடுவில் காலமாகிய செய்தி கேட்டு ஆறாத்துயரடைந்தோம். அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல தலங்காவல் பிள்ளையாரைப் பிரார்த்திக்கின்றோம்.

தகவல்:-

ஆ. சின்னத்துரை

குடும்பத்தினர்.

முகவரி;-

செல்வராசா அவெனியு,

அம்மன் வீதி,

திருநெல்வேலி கிழக்கு.

(48732)

## திருமலையில் சிக்கியுள்ள 5 ஆயிரம் பயணிகளுக்கு இடர் நிவாரணப் பணம்

யாழ்ப்பாணம் வருவதற்காக திருகோணமலை பிரதேச செயலகத்தில் பதிவு செய்துவிட்டுக் காத்திருக்கும் 5 ஆயிரம் பயணிகளுக்கு இடர் நிவாரணம் வழங்கும் பணி நேற்று ஆரம்பமானது.

கப்பல் வசதியில்லாத நிலையில் — கையில் பணம் இல்லாத கட்டத்தில் — கஷ்டப்படுபவர்களுக்கு உதவும் வகையில் வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநரின் ஏற்பாட்டில் இந்த நிவாரணம் வழங்கப்படுகிறது.

முதல் கட்டமாக பெரியவர்களுக்கு 50 ரூபா வீதமும், சிறுவர்களுக்கு 30 ரூபா வீதமும் முதல் 4 நாள்களுக்கு உரிய உதவிப் பணம் வழங்கப்பட்டது.

முதல் கட்டக் கொடுப்பனவுக்காக ஆளுநர் நிதியில் இருந்து 75 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

(உ-150-3)

## விசேட அ. அட்டைகள் விநியோகம்

யாழ்ப்பாணம், ஓக. 2

புன்னாலைக் கட்டுவன் வடக்கு (ஜே—208) கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்தோருக்கான விசேட அடையாள அட்டைகள் நாளை ஞாயிற்றுக் கிழமை நிலாவரையில் உள்ள சிவில் நிர்வாக அலுவலகத்தில் வைத்து வழங்கப்படவுள்ளதாக கிராம அலுவலர் அறிவித்துள்ளார். (ஐ)

## சமய சந்நிதி

மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய வருடாந்த திருவிழா நாளை மறுதினம் திங்கட்கிழமை மாலை 5 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 7ஆம் திகதி காலை 7, 30 மணிக்கு திருநாள் திருப்பலியுடன் திருவிழா நிறைவுறும். (ஐ)

* * *

சாவகச்சேரி கச்சாய் வீதி புனித லிகோரியார் தேவாலய நவநாள் உற்சவ திருநற்கருணை ஆராதனையும் திருப்பலி பூசையும் இன்றுபிற்பகல் 3.00மணிக்கு நடைபெறும். நாளை காலை 7.00 மணிக்கு திருநாட்பாடற் பலிபூஜையும் திருச்சொரூப பவனியும் இடம் பெறும். (ஐ-117)

## பேச்சும்...

(4 ஆம் பக்கத் தொடர்)

மஹ்ரூப் எம்.பியின் பெயருக்குப் பதிலாகவே தவறுதலாக அமைச்சர் அஷ்ரப்பின் பெயரைக் கூறி குழப்பிக் கொண்டார் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா.

இப்போது மீண்டும் குறுக்கிட்ட அஸ்வர் எம்.பி. ''ஏன் எல்லோரும் சேர்ந்து சபையில் இருக்கும் உறுப்பினர்களை உயிருடன்கொல்லுகின்றீர்கள்?'' — என்று கேட்டு நகைச்சுவையை ஏற்படுத்தினார்.

*

எமது

புதிய வெளியீடு!

விக்னேஸ், தேவயாணி நடித்த

காதலி

புதிய பாடல் 29

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்

(48746)

வில்லிசை

கரவெட்டி,

அந்திரான் முருகமூர்த்தி ஆலயத்தில்

இன்று பிற்பகல் 4 மணிக்கு வரனம் பாடி வில்லிசைக்குழுவினரின்

'வள்ளி திருமணம்'

எனும் வில்லிசை நடைபெறும்.

பரிபாலன சபை

தகவல்: து. சீலன்

அந்திரான்,

கரவெட்டி. (48728)

கண்ணீர் அஞ்சலி

யாழ். ப. நோ. கூ. சங்கப் பணியாளர்

திரு. சு. விமலநாதன்

அவர்களின் தாயார்

அமரர் சு. பூரணம்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தலைவர் மற்றும் இயக்குனர் சபை,

பொது முகாமையாளர்,

யாழ். ப.நோ.கூ. சங்கம்

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,

யாழ். பட்டணக் கிளை.

[48740]

கண்ணீர் அஞ்சலி

யாழ். ப. நோ. கூ. சங்கப் பணியாளர்

திருமதி சந்திரபவானி தியாகராசா

அவர்களின் தந்தையார்

அமரர் இ. சுப்பிரமணியம்

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

தலைவர் மற்றும் இயக்குனர் சபை,

பொது முகாமையாளர்,

யாழ். ப. நோ. கூ.. சங்கம்

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,

யாழ். பட்டணக்கிளை.

(48741)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாளை
ஆடி 18
ஞாயிற்றுக்கிழமை
திதி: அமாவாசை
பிற்பகல் 2.23 வரை.
நட்சத்திரம்: பூசம்
பிற்பகல் 1.52 வரை.
ஆடி அமாவாசை விரதம்
சுபநேரம், 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பகலுக்கும் இரவுக்கும்)
பழைய நேரப்படி

# டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பம்

கொழும்பு, ஒக. 2
இலங்கை - இந்திய அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி இன்று கொழும்பு பிரேமதாசா கிரிக்கெட் விளையாட்டு அரங்கில் ஆரம்பமாகிறது.

இலங்கை அணியில் மஹெல ஜயவர்த்தன (20 வயது) என்ற புதிய துடுப்பாட்டக்காரர் சேர்க்கப்பட்டுள்ளார். (உ-10)

# பலாலியில் இராணுவ ஆஸ்பத்திரியில் திருட்டு

## 2 லட்சம் ரூபா காணோம்!!

யாழ்ப்பாணம். ஒக். 2
பலாலி இராணுவ ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் ஊழியர்களின் ஜூலைமாதத்திற்கான சம்பளப்பணத்தில் 2 இலட்சத்து 19 ஆயிரம் ரூபா திருடப்பட்டுள்ளதாக பலாலி பொலீஸாரால்நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

ஊழியர்களின் சம்பளப் பணம் வழங்கப்பட்ட போது சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளாத ஊழியர்களின் சம்பளப்பணம் தனித்தனியாகக் கடித உறைகளில் போடப்பட்டு வைக்கப்பட்டிருந்தன என்றும்-

மறுநாள் பாத்ரூமிற்குச் செல்லும் கதவும் ஜன்னல்களும் திறந்து இருக்கக் காணப்பட்டதால் சந்தேகத்தில் காசு வைக்கப்பட்டிருந்த இடத்தைப் பார்த்த போது தான் காசு திருட்டுப்போன விடயம் தெரிந்தது என்றும்- நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

இதுபற்றி சந்தேகத்துக்கிடமான மூவரின், கைவிரல் அடையாளங்கள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். நீதிபதி ஏ. என். இராமச்சந்திரன் முன்னிலையில் வழக்கு எடுக்கப்பட்ட போது இம்மாதம் 21 ஆம் திகதிவரை நீதிபதி வழக்கை ஒத்திவைத்தார். (உ-5)

# வில்லூன்றி பிதிர்க்கடன்

யாழ்ப்பாணம், ஒக. 2
ஆடி அமாவாசையை ஒட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை வில்லூன்றி புனித தீர்த்தத்தில் ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவமும் பிதிர்க்கடன் நிறைவேற்றுதலும் இடம் பெறவுள்ளன.

காலை 8.15 மணிக்கு விநாயகப் பெருமான் தீர்த்தவாரி கொண்டருளியதன் பின்னர் பொதுமக்கள் பிதிர்க் கடன்களை நிறைவேற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. (ஐ)

# விடைத்தாள் திருத்துவோருக்கு

ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சை விடைத்தாள் திருத்துவதற்கு விண்ணப்பித்து. பரீட்சைத் திணைக்களத்திலிருந்து நியமனம் கிடைக்கப்பெற்றவர்கள், தாங்கள் கொழும்பு செல்வதற்கு பிரயாண ஒழுங்கு செய்வதற்கு, தங்களது முழுப் பெயரையும், தேசிய அடையாள அட்டை இலக்கத்தையும் எதிர்வரும் திங்கட்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு முன்னதாக யாழ். வலயம் 1 அலுவலகத்தில் சேர்க்குமாறு கல்விப் பணிப்பாளர் சு. இரத்தினராஜா அறிவித்துள்ளார்.

# சிறுவர் விளையாட்டுப் போட்டி

தென்மராட்சி, ஒகஸ்ட் 2
சரசாலைதெற்கு சரஸ்வதி அறவழி மழலைகள் கல்விப் பூங்கா சிறார்களின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் இன்று பி.ப 2 00 மணிக்கு கு நகுலேஸ்வரன் தலைமையில் சரசாலை சரஸ்வதி வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக சரசாலை சரஸ்வதி வித்தியாலய முன்னாள் அதிபர் ச. நடேசபிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி இந்துக்கல்லூரி முன்னாள் அதிபர் க. மகேஸ்வரன், மறவன்புலோ சகல கலாவல்லி வித்தியாலய அதிபர் ச. ஞானலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர். (ஐ-117)

# இன்று

யாழ்ப்பாணம், ஒக. 2
நல்லூரில் உள்ள ஞானக் குழந்தை இல்லம் பாலர் பாடசாலையின் வருடாந்த விளையாட்டு விழா இன்று காலை 9 மணிக்குப் பாடசாலை விளையாட்டு மைதானத்தில்பாடசாலைப்பொறுப்பாசிரியை செல்வி தி. மீனலோஜினி தலைமையில் நடைபெறும். இவ்விழாவில் கல்விப் பணிப்பாளர் வ. தானையா பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ)

★ ★ ★

நீர்வேலி வடக்கு காமாட்சி அம்பாள் சனசமூக நிலையமும், சமூக அபிவிருத்தி மன்றமும் இணைந்து நடத்தும் காமாட்சியம்பாள் முன்பள்ளியின் விளையாட்டு விழா இன்று பிற்பகல் 1-30 மணியளவில் சனசமூக நிலைய முன்றலில் நடைபெற்று உள்ளது. (ஐ-15)

# சங்கிலி அறுத்த இளைஞன் வசமாகச் சிக்கினான்!

யாழ்ப்பாணம், ஒக. 2
கொக்குவில் பகுதியில் ஆசிரியை ஒருவரின் 3 பவுண் தங்கச்சங்கிலி ஒன்றை அறுத்துச் சென்றார் என்று குற்றஞ்சாட்டப்பட்டு அரியாலையைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ். நீதிமன்றத்தில் யாழ்ப்பாணப் பொலீஸாரால் ஆஜர் படுத்தப்பட்டார்.

சிவனேசரத்தினம் குணரத்தினம் என்ற ஆசிரியையின் தங்கச்சங்கிலியே அறுத்துச் செல்லப்பட்டதாகக் கூறப்பட்டது. இந்தச் சங்கிலியின் பெறுமதி 19 ஆயிரத்து 500 ரூபா என்றும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த புதனன்று கொக்குவிலில் பிரஸ்தாப ஆசிரியை நடந்து சென்று கொண்டிருந்தபோது சைக்கிளில் வந்த இளைஞன் அவரது தங்கச்சங்கிலியை அறுத்துக் கொண்டு ஓடிவிட்டான்.

பின்னர் கன்னாதிட்டிப் பகுதியில் உள்ள நகைக்கடை ஒன்றில் இந்தச் சங்கிலியை அந்த இளைஞன் விற்க முயன்றபோது பிரஸ்தாப ஆசிரியையின் மகன் அதனைக் கையும் மெய்யுமாகக் கண்டு பிடித்து சம்பந்தப்பட்ட இளைஞனை பொலீஸில் ஒப்படைத்தார்.

இதனையடுத்து மகாதேவன் மதிவதனன் என்ற அந்த இளைஞன் வியாழன் அன்று யாழ். நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டான்.

யாழ். நீதிபதி ஏ. என். இராமச்சந்திரன் முன்னிலையில் மேற்படி வழக்கு எடுக்கப்பட்டபோது, இளைஞன் குற்றத்தை ஒப்புக்கொண்டான். தங்கச் சங்கிலியை ஆசிரியையிடம் ஒப்படைக்கப்பட்டது. ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அந்த இளைஞனுக்கு அனுமதி வழங்கப்பட்டது. (உ-5)

# விசாரணை 21 ஆம் திகதி

யாழ்ப்பாணம்: ஒக. 2
குடாநாட்டில் காணாமற் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்யபாதுகாப்பு அமைச்சால் நியமிக்கப்பட்ட குழுவின் அடுத்த விசாரணை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் 7 நாட்கள் பலாலியில் நடைபெற விருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

கடந்த இரு தடவைகள் பலாலியில் இக்குழு விசாரணை நடத்தி சுமார் 300 பேரின் சாட்சியங்களை பதிவு செய்திருந்தது.

இம்முறை விசாரணையில் சாட்சியமளிக்க அழைக்கப் படவிருப்பவர்களின் விவரங்கள் அடுத்த வாரமளவில் யாழ். செயலகத்துக்கு கிடைக்கும் எனத் தெரிவிக்கப்பட்டது

இக்குழுவினர் இதுவரை விசாரித்தவர்களில் 189 பேரின் நிலை தொடர்பாக அவரவர் குடும்பங்களுக்கு தபால் அனுப்பப்பட்டுள்ளதாகவும்-தெரிவிக்கப்பட்டது. (உ-3)

# நெடுங்கேணியில்...

(முதலாம் பக்கத் தொடர்)
இதேபோன்று கடந்த புதன்கிழமையன்று நெடுங்கேணிப் பகுதியில் நடந்த மற்றொரு சண்டையில் படையினர் தரப்பில் ஓர் அதிகாரி உட்பட 17 பேர் உயிரிழந்ததாகவும் —

பத்துக்கு அதிக படையினர் காயமுற்றதாகவும் —

'புலிகளின் குரல்' வானொலி குறிப்பிட்டது.

நேற்று முன்தினம் இரவு நெடுங்கேணி மதியாமடுப் பகுதியை நோக்கி முன்னேற முயன்ற படையினருடன் நடந்த மோதலில் தமது தரப்பில் 9 புலிகளும், காவல்துறையைச் சேர்ந்த ஒருவரும் உயிரிழந்ததாக அந்த வானொலி மேலும் தெரிவித்தது.

நேற்று முன்தினம் இரவு நெடுங்கேணியில் நடந்த சண்டையின் சேத விவரங்கள் குறித்து மேலதிக தகவல்கள் எதிர்பார்க்கப்பட்டதாகவும் 'புலிகளின் குரல்' நேற்றிரவு தெரிவித்தது. (உ-3-10)

# கப்பல்...

(முதலாம் பக்கத் தொடர்)
பல்கள் தமது சேவையை நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தக்கப்பல் கரையில் இருந்து 20 மைல் தூரம் வரையுள்ள கடல் பகுதியிலேயே செல்லக்கூடியதுஎன்று அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளதால், கரையிலிருந்து 40 மைல் தூரத்தில் சேவையை நடத்துவதற்கு இக்கப்பலை எப்படிப் பயன்படுத்துவது என்ற கேள்வி எழுந்துள்ளது. (உ-150-3)

# கணனிகள் கையளிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 2
யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் இருந்து கொள்வனவு செய்யப்பட்ட 28 கணனிகள் நேற்று வைபவரீதியாகப் பாடசாலைகளுக்குக்கையளிக்கப்பட்டன.

யாழ். இந்துக் கல்லூரியில் இடம்பெற்ற இந்த வைபவத்தில் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிவதாசன், எஸ். தங்கவேல், யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன், யாழ். கல்விப் பணிப்பாளர்கான சு. இரத்தினராசா, எஸ்.சிவராசா, ஈ.பி.டிபியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் கே.வி.கே. ஜெகன் உட்பட பலர் பங்குபற்றினர். (உ-3)

# நாளை நடப்பவை

யாழ்ப்பாணம், ஒக. 2
'யுனெஸ்கோ' நிறுவனத்தின் ஏற்பாட்டில் நல்லூர் கோட்டப் பாடசாலைகளின் பெற்றோர் ஆசிரிய சங்கங்கள் மற்றும் பழைய மாணவர் சங்கங்களின் செயலாளர்கள், பொருளாளர்கள் ஆகியோருக்கான கருத்தரங்கு நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துமகளிர் கல்லூரியில் நடைபெற விருப்பதாக யாழ். வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ)

★ ★ ★

யாழ். மாவட்ட கிரிக்கெட் மத்தியஸ்தர்கள் சங்கம் நடத்தும் பயிற்சிவகுப்புகள் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும். இதே பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் முற்பகல் 10 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-4)

# சிப்பாய்கள்...

(முதலாம் பக்கத் தொடர்)
நடத்தப்பட்டது.

முறைப்பாட்டுக் காரரான இளம் பெண் இரு இராணுவச் சிப்பாய்களான பி. ரட்ணாயக்கா, பி. வி. சமன்குமார ஆகியோரை அடையாளம் காட்டினார்.

பின்னர் முறைப்பாட்டுக் காரரின் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

யாழ் பதில் நீதிவான் க. கேசவன் முன்னிலையில் இந்த அடையாள அணி வகுப்பு நடைபெற்றது.

எதிரிகள் இருவரையும் எதிர்வரும் 15 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு விட்டார் (உ—5)


# 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம்: 10 - 12 - 1917
மறைவு: 03 - 07 - 1997

## அமரர் திருமதி பூதத்தம்பி இலட்சுமி

மயிலிட்டி தெற்கு, (சண்டிலிப்பாய்)

அன்பின் திருவுருவாய் இருந்து எம்மை வழி நடத்திய எங்கள் அன்புத்தெய்வமே! நீங்கள் மறைந்து நாள் 31 கடந்து விட்டாலும் எம் வாழ் நாளில் எம் நெஞ்சங்களில் இருந்து உங்கள் நினைவுகள் என்றும் அகலாது.

இன்று (2-8-97) எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும், கலந்து கொள்ளுமாறும் உறவினர்களையும், நண்பர்களையும் கேட்டுக்கொள்கின்றோம்.

அம்மா! உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்.

பூ. சிவராசா
பிரதேச செயலக ஒழுங்கை,
சண்டிலிப்பாய். (48744)



# மரண அறிவித்தல்

## திருமதி இராசகுமாரி அம்மா (இராசாத்தி)

திருமதி இராசகுமாரி அம்மா (ஓய்வு பெற்ற நெசவு போதனாசிரியை) காலமாகி விட்டார்

இவர் ஏழாலையைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலி கிழக்கில் வசிப்பவருமான செல்வராசா சிவலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும், சுதாகரன் (யா/ இந்துக் கல்லூரி உயர்தரம் கணிதப் பிரிவு 95), ஜனனி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), செல்வகரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-07-97 அன்று விசுவமடுவில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

தகவல்:
திரு. திருமதி மகேஸ்வரன்
(மைத்துனர், சகோதரி)
இராமலிங்கம் வீதி,
முடமாவடி, திருநெல்வேலி. (48735)


மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகமனையில் 02-08-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சஞ்சீவி
# சஞ்சிகை

02 - 08 - 1997 சனிக்கிழமை

அழகுக்கு அழகு தரும்
அழகு சாதனப் பொருள்களை
மொத்தமாகவும், சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ள நாடுங்கள்:

**ஜெயா அழகுமாடம்**
**(JEYA FANCY)**

மொத்தமாக பெற்றிட:
127, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
சில்லறையாகப் பெற்றிட:
149, 168, நவீனசந்தை,
யாழ்ப்பாணம். (சி/1221)

## கருத்துக் கலசம்

### போலித்தனம்

இறைவன் தூணிலும் இருப்பார்; துரும்பிலும் இருப்பார் என்று சிறு வயதுப் பிள்ளைகளுக்குப் பெரியவர்கள் சொல்லிக் கொடுக்கக் கேட்கிறோம். ஆனால் பல பெரியவர்களுக்கே கடவுள் எங்கிருக்கிறார் என்பது தெரிவதில்லை. ஆண்டவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறார் என்று கூறும் மிகப் பலருக்கு, அடுத்தவரிடம் — மிகக் குறிப்பாக ஆதரவற்றவர்களிடம், அநாதைகளிடம், ஏழைகளிடம், வசதி குறைந்தவரிடம், அங்கவீனரிடம் — அவர்களுடனேயே இறைவன் இருக்கின்றான் என்பது மனதில் படுவதில்லை; மறந்துவிடுகிறார்கள்.

ஆலயத்துக்குப் போகிறோம். பணம் செலவழித்து எங்கள் சமூகத் தகுதியை — பணவளத்தைப் பிரதிபலிக்க — தாம்பாளத்தில் அர்ச்சனைப் பொருள்களை நிறைத்துச் சென்று வழிபடுகின்றோம்.

ஒரு நேர உணவுக்கு வழியில்லாத பரம ஏழைகள், உண்மையாகவே ஆதரவற்றோர் ''தர்மம் தாருங்கள்'' என்று தொண்டைத் தண்ணீர் வற்றி, நா வறளும் வரை கத்தினாலும் திரும்பிப் பார்க்கவே மனம் வருவதில்லைப் பலருக்கு!

நேர்த்தி வைத்தோம், ஆலய உபயம் செய்கிறோம் என்று பல்லாயிரக் கணக்கில் பணம் செலவிடும் பெரிய பண முதலைகள், ''ஐயா பிச்சை'' என்று படலையில் இரந்து நிற்கும் பிச்சைக்காரனைப் பார்த்து 'வீட்டிலை ஒருவரும் இல்லை சத்தம் போடாமல் போ' என்று, மனதுக்கு இருக்கக் கூடிய இரக்க உணர்வை அறவே அழித்துவிட்டு, அடித்துத் துரத்துகிறார்கள்.

தாம் செய்த அர்ச்சனையும், நேர்த்தியும், உபயமும், ஆலயத்தில் நின்று மற்றவர் காதினிக்கத் தமிழ் மறை பாடியதும் எல்லாமே போலித்தனம். அவற்றை இறைவன் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை; அவைபால் எதனையும் அவன் அருள்வதில்லை என்று இவர்கள் அறியாரோ......?!

ஆண்டவன் எங்கள் ஒவ்வொருவர் இதயங்களிலும் குடிகொள்ள வேண்டுமெனில் அடுத்தவன் மீது அன்பு காட்ட வேண்டும். அதனாலேயே அன்பே சிவம் என்று சைவ சமயம் போதிக்கிறது.

ஆதரவற்றவனுக்கு ஒருவன் தன்னால் இயன்றளவு உதவுவது தான் ஆண்டவனுக்குச் செய்யும் அரும்பெரும் தொண்டு என்று எல்லாப் பெரிய சமயங்களும் சொல்கின்றன.

சமய அனுட்டானங்களும், கிரியைகளும் மட்டும் சமயம் அல்ல. சமயம் ஒரு வாழ்க்கை நெறி. மனித நேயமும், மனிதத் தொண்டும் தான் ஆண்டவனுக்கு அணியப்படும் மாலையும், ஓதப்படும் மந்திரமும் என்பதனை மறந்து விடாதீர்கள்.

''அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார் ..........
அன்பே சிவமாக அமர்ந்திருந்தாரே''

# ஆங்கில மொழி அறிவை உயர்த்த சில முயற்சிகள்

இன்று கல்வி எவ்வளவு அவசியமானதோ அது போன்று அவசியமானது ஆங்கில மொழி அறிவும் என்று கூறின் மறுப்பவர் இருக்க மாட்டார். படிக்காத மக்கள் கூட ''அவரின் B. A இங்கிலிஸிலா? அல்லது தமிழிலா?'' என்று கேட்கும் அளவிற்கு ஆங்கிலத்தின் அவசியம் வேரூன்றி விட்டது. ஆங்கில, மொழியில் சரளமாகப் பேச, வாசிக்க, எழுத ஒருவரால் முடியுமாயின் அவர் தனது எதிர்கால வாழ்க்கைக்குத் தன்னை 75 வீதம் தயார்படுத்திக்கொண்டார் என்று கூறலாம்.

அத்தகைய தயார் நிலையை இன்றைய மாணவர் — இளந்தலைமுறையினர் — அடைய முடியாதிருப்பதையிட்டு எல்லோரும் கவலைப்படுகின்றோம். இதனால் அவர்களுக்கு தொழில் வாய்ப்புக்கள், உழைப்பு என்பன எட்டாது — கிட்டாது — போகின்றதே என்ற ஏக்கம் ஒரு புறம்; விஞ்ஞான தொழில் நுட்பத் துறைகளில் பெருகிவரும் அறிவுக் களஞ்சியமான அமிர்தம் அவர்களுக்கு அப்பாற்பட்டதாகப் போகின்றதே என்ற தவிப்பு மறுபுறம்; பரந்த, விரிந்த, பரோபகார மனப்பாங்கு — நோக்கு — விருத்தியடையாத வாழ்வாக அவர்களின் வாழ்க்கை அமைந்து விடப் போகின்றதே என்ற அச்சம் வேறொருபுறம்; மேலாக இடரிலும் தளர்விலும் ஒப்பற்ற உளத்துணையாகக் கல்வியைக் கொள்ளும் வாய்ப்பினை அவர்கள் இழக்கின்றனரே என்ற வேதனை மற்றொருபுறம். இவைபோன்ற பல இழப்புக்கள் எங்கள் கவலைக்கு மூலவிடங்களாகின்றன.

## நல்ல ஆசானும் அவகாசமும் தேவை

இவ்விழப்புகளைத் தவிர்க்க எண்ணி இன்றைய கல்வித் திட்டத்தின் கீழ் மாணவர்களின் ஆங்கில மொழி அறிவை உயர்த்த ஏதாவது வழியுண்டா என்று கல்விமான்களும் அரசியல்வாதிகளும் தங்கள் பதவிக் காலங்களில் சிந்திக்கின்றார்கள்.

இன்று பாடசாலைகளில் நடைபெறுகின்ற ஆங்கில தினம், ஆங்கில பேச்சுப் போட்டி, ஆங்கில எழுத்துப் போட்டி ஆகியன அச்சிந்தனையில் உதித்தவையே. ஆனால் இந்நிகழ்வுகள் மூலம் எல்லா மாணவரும் ஆங்கில மொழியில் திறமை பெறுவதில்லை. பாடசாலைகள், ஏற்கனவே ஆங்கிலத்தில் ஏதோ வழியில் தேர்ச்சி பெற்ற அல்லது ஆங்கிலப் பின்னணியுள்ள வீடுகளிலிருந்து வரும் பிள்ளைகளைப் பொறுக்கியெடுத்து அவர்களுக்கு மேலும் பயிற்சியளித்து மேடை[illegible]றன. இவை சென்ற பல வருடங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றபோதும் மாணவர்கள் ஆங்கிலத்தில் தேர்ச்சி பெறாதிருப்பது இதனை ஒரு கண்துடைப்பாகக் கருதச் செய்கின்றது.

மற்றையது, திணைக்களங்களில் தள்ளாடி ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களை ஆசிரியர்களாக்கி மாணவரின் ஆங்கிலத்தரம் உயர்த்த எடுக்கப்படும் முயற்சியாகும். ஆனால் அங்ஙனம் நியமிக்கப்படுபவர்கள் அறளை பெயர்ந்த வயதில் வீட்டிலிருந்தால் பிரச்சினை; பள்ளிக்கூடம் சென்றால் கொஞ்சம் காசு வரும் என்று செல்பவர்களேயன்றி கற்பிப்பதற்காகத் தம்மை அர்ப்பணித்தவர்களல்லர்.

> இக் கட்டுரையாளர் தமக்கு 'படியாதவன்' என்ற புனை பெயரைச் சூட்டிக் கொண்டாலும், குடாநாட்டில் முன்மாதிரியான ஒரு கல்வி நிர்வாகியாகவும், ஆசிரிய ஆலோசகராகவும் போற்றப்பட்டவர்.
>
> அவரது கருத்தாழம் அவர் தமக்கு சூட்டிக் கொண்ட புனைபெயர் பொருத்தமற்றது என்பதைப் புலப்படுத்தும். (ஆ-ர்)

இவற்றைவிட அதிகாரம் பெறாத இன்னுமொரு கூட்டத்தினர் Spoken English, அந்த இங்கிலிசு, இந்த இங்கிலிசு என்று கூறி அதுவும் ஒரு மாதத்தில் — 3 மாதங்களில் — ஆங்கிலத்தை ஒருகை பார்க்கச் செய்வோம் என்று கூறி காசு உழைக்கப் பெரும் பாடுபடுகின்றனர்.

## போதனா மொழியில் ஆதிக்கம் ஏற்படும்

என்று ஆங்கிலம் போதனா மொழி யென்ற அந்தஸ்தை இழந்ததோ — என்று அது கட்டாய பாடம் என்ற நிலையை இழந்ததோ — அன்றே மாணவரின் ஆங்கிலத் தரம் குன்ற ஆரம்பித்தது. மீளவும் ஆங்கிலம் முன்னைய ஸ்தானங்களை அடையுமாயின் மாணவரின் ஆங்கிலத்தரம் உயரும் என்பது ஓர் எளிய தருக்கமாகும்.

## முடியாத காரியம்

இன்றைய நிலையில் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆங்கிலம் போதனா மொழியாக்கப்படமாட்டாது. ஆங்கிலத்தைக் கட்டாய பாடமாக்குவதற்குக் கூட பலர் இடங்கொடுக்க மாட்டார்கள். தன்னிச்சை வகுப்பேற்றமும் (Automatic Promotion) அதனை கட்டாய பாடமாக்க G. C. E. (O/L) வரை இடமளிக்காது. சமுதாயப் பெயர்வும், அரசியல் கொள்கைகளும் இவற்றிற்கு முரணாகவே தொழிற்படும். இவ்விக்கட்டான நிலையிலும் ஆங்கிலக் கல்வியின் தலைவிதியை அரசியல்வாதிகளின் கைகளில் ஒப்படைத்துவிட்டு அல்லது தமிழ் — சிங்கள மொழி மூலம் கற்ற இன் [illegible] சுமத்தி விட்டு சும்மாயிருப்பதற்கு ஆங்கிலத்தின் அவசியம் இடங்கொடுக்க மாட்டாது.

## பின்னோக்கிப்பார்ப்பது அவசியம்

இத்தகையநிலையில், அன்று மாணவரின் ஆங்கில மொழி அறிவு மேம்பட ஏதுவாக விருந்த காரணிகளைப் பின்னோக்கிப் பார்க்கத் தூண்டுகின்றது. அத்தகைய பார்வையே மாணவரின் மொழி அறிவை உயர்த்த இன்று நாம் விசுவாசமாக விவேகத்துடன் கையாளக் கூடிய முறைகளைப் புலப்படுத்தும்.

''Inorder intelligently to look forward it is Necessary perceptively to have looked backwards!''
— Sir winston Churchill

அங்ஙனம் புலப்படும் முறைகள் நமக்கு அப்பாற்பட்டவையாகவிருக்கலாம் அல்லது நாம் விரும்பாதவையாக விருக்கலாம். எனினும் அவை தான் சரியான முறைகள் என்பதை அவற்றின் பின்னணியிலுள்ள பட்டறிவு எடுத்துக்காட்டும். அவற்றுள் சில இங்கு முன்வைக்கப்படுகின்றன.

**- படியாதவன் -**

## கட்டாய பாடம்

முதற்கட்டமாக தன்னிச்சை வகுப்பேற்றம் நிறுத்தப்பட்டு G. C. E. (O/L) வரை ஆங்கிலம் கட்டாய பாடமாக்கப்படல் வேண்டும். அப்போதான் ஆசிரியர்களும் மாணவர்களும் முறையே ஆங்கிலம் கற்பிப்பதிலும் கற்பதிலும் அக்கறையும் ஆர்வமும் செலுத்துவார்கள். அன்றேல் மாணவர் G. C. E. (O/L) போன்ற பரீட்சைகளில் அதி கூடிய அதிதிறமைச் சித்திகள் அல்லது திறமைச்சித்திகள் பெறும் நோக்கத்தினால் ஆங்கிலத்தை ஒதுக்கிவிட்டு ஏனைய பாடங்களைப் படிக்கும் எத்தனிப்பையும், இவர்களுக்கு என்ன ஆங்கிலம் என்ற ஆசிரியரின் அலட்சியப் போக்கையும் தவிர்க்க முடியாது.

## பாடசாலையின் பேச்சுப் பாங்கு ஆங்கிலத்தில்

பாடசாலையில் மாணவர் ஆங்கில மொழிச் சூழலில் வளர — வாழ வாய்ப்பளிக்கப்படல் வேண்டும். அதாவது பாடசாலையின் அன்றாட நடவடிக்கைகளும் பேச்சுப் பாங்கும் (School Parlance) கணிசமானளவு ஆங்கிலத்தில் அமையுமாயின் அம்மொழியைப் பற்ற மாணவருக்கு வாய்ப்புக்கள் ஏற்படும். ஆங்கிலம் மட்டான — கீழ் வகுப்பு மாணவர்களுக்குக்கூட அவற்றை விளங்கிக்கொள்வதற்கு அவை கூறப்படும் சந்தர்ப்பங்கள் (Context) சொற்றொடர்களின் தன்மை (Syntactic) ஆகியவை துணுக்குகளாக அமையும்.

இன்றும் விளையாட்டுக்களின் பெயர்களை — வெவ்வேறு விளையாட்டுக்களுடன் தொடர்பான சொற்களை — யாரும் கற்பிக்காமலே ஆங்கிலத்தில் கூறவும் விளங்கவும் மாணவர்களால் முடிகின்றது. விளையாட்டு மைதானத்தின் பேச்சுப் பாங்கு ஆங்கிலத்திலிருப்பதே இதற்குக் காரணமாகும்.

The only way to learn a language is to live it — என்றதின் கருத்தை இது தெளிவாக்குகின்றது. அதனாற்போலும் அன்று வீடுகளில் கூட ஆங்கிலந் தெரிந்த பெற்றார் தங்கள் பிள்ளைகளுடன் ஆங்கிலத்தில் உரையாடினர். English is not taught (anything for that matter) but caught — என்பதை அவர்கள் அறிந்திருந்தார்கள்.

## முன்னைய கற்பித்தல் நுட்பங்கள்

வாசிப்பு, எழுத்து, பேச்சு, சொல்வதெழுதல், மனப்பாடம், ஒப்புவித்தல் (Recitation) ஆகியவை மீளவும் ஆங்கிலம் கற்பித்தலில் அனுசரிக்கப்படல் வேண்டும். சொற்களைச் சரியாக உச்சரிப்பதற்கு உரத்து வாசிக்கச் செய்து உச்சரிப்புத் திருத்தப்படல் வேண்டும்.

ஆங்கிலம் அசை அழுத்தங்கள் (Accent Stress) நிறைந்த மொழி. பேசும்போது அசையழுத்தம் உன்னிப்பாகக் கவனிக்கப்பட வேண்டிய பல்லாயிரக்கணக்கான சொற்கள் ஆங்கிலத்தில் உள.

சொற்களை உச்சரிப்பதில் நாவும் உதடுகளும் மட்டுமன்றி, முகத்தில் — கழுத்தில் — உள்ள பல தசைகளும் ஈடுபடுகின்றன. பேசும்போது வாய்க்குழி, நாசிவழி ஆகிய பரிவுப் (Resonance) பகுதிகளைச் சீர்செய்ய தலையின் — கழுத்தின் பொருத்தமான அசைவுகள் அவசியமாகும். இவை நாளடைவில் தெறிவினைகளாக (Reflex actions) மாறுவதற்கு இளம்வயதிலிருந்தே மாணவர்கள் ஆங்கிலச் சொற்களைச் சரியாக உச்சரிக்கப் பயிற்றப்படல் வேண்டும்.

## இரு மொழிப்பாவனை

வெவ்வேறு பாடங்களை

(XII ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீதன மோதிரம்

வாழ்க்கைப் புத்தகத்தின்
வாயில் திறப்பு விழா
ஆத்ம ஊசலின்
அலைவு காலமது
சொர்க்கத்தைப் பூமியிலே
தக்கவைக்கும் தருணமது.

★ ★ ★

''தம்பி தங்கக் கம்பி;
தண்ணி, புகை இல்லை,
நம்பிப் பெண்ணைக் குடுக்கலாம்.
நல்லாகப் படிச்ச பிள்ளை;
உலகம் அறிஞ்ச பிள்ளை;
உத்தியோகம்; பெரிய இடம்;
பட்டதாரி மட்டுமில்லை,
சட்டம்பியார் சரவணையும்,
உடையார் முகத்தாரும்
உறவு ரத்தமெல்லே......!

மூண்டு தலை முறைக்கும்
சேர்த்து வைச்ச சொத்துக்கு
தம்பிதானே ஒரேபிள்ளை,
தனி ஆம்பிளைப்பிள்ளை.

மெத்தக் கனக்க ஒண்டும்
எதிர் பார்க்க மாட்டினம்.
தனிவீடு, காணி,
தங்கநகை பத்துப் பவுண்,
'வெஸ்பா' ஒண்டு
வேலைக்குப் போய்வர.

பிள்ளை கிளிப்பிள்ளை!
அள்ளி ஒண்டும் குடுக்க வேண்டாம்
'அஞ்சை' விடக் குறையாது......!

மணவறையில் வைத்து
மாப்பிளைக்குத் தோழன்
வைரக்கல்லு மோதிரம்
போடவேணும் சபையறிய......!

வேறை ஒண்டும் வேண்டாம்.
'பஸ்' சிலவு 'கார்' சிலவு
உங்களோடை!......
சரியோ?...சாதகத்தை தாங்கோ''

★ ★ ★

மணவறை சோடனையில்
மாப்பிள்ளையும் பெண்ணும்.
மந்திரம் சீர்வரிசை
மங்கள வாத்தியங்கள்
தாலிகூறைத் தட்டுக்கு
ஆசீர்வாத அமர்க்களங்கள்.
முகூர்த்த நேரம்
முடிய இன்னும் பத்தே நிமிஷம்தான்.

''கூறைகட்ட நேரமில்லை
போர்த்திக் கொண்டு கட்டலாமே''
ஐயரின் வார்தைக்குள்
அடங்கியது அந்த சபை.
அர்ச்சதை சிந்தியது;
கெட்டி மேளம் கொட்டியது.

''ஐயா பொறுங்கோ—இப்ப
தாலி கட்டவேண்டாம்''
ஆண் வீட்டார் கட்டளையால்
மங்கள வாத்தியம்
மௌனித்து நின்றது......!

''வைரக்கல் மோதிரம்
வந்துதோ பாருங்கோ......?''

பெண்வீட்டார் பேதலித்தார்;
மணப்பெண் மண்பார்த்தாள்,
சருகை வேட்டிகள்
சமரசத்துக் கோடின,
பெண் வீட்டார் வார்த்தையெல்லாம்
மண்ணாய் மாறியது.

''ரண்டே நிமிஷம் தான்
முகூர்த்தம் முடிந்து விடும்''
நிமிஷங்கள் செத்தால்
வருஷங்கள் வாழ்விழக்கும்......!

''இந்தா பிடிதம்பி
இதைப்போடு மாப்பிளைக்கு......!''

ஐயரின் கைவிரலின்
வைரக்கல் மோதிரம்
மாப்பிளையின் கையிலே
சுடர்விட்டு மின்னியது.
பெண்ணவளின் மார்பை
பொன் தாலி தடவியது.
முன்னிருந்த அம்மியைப்போல்
அவள்
உள்ளமெலாம் இறுகியது......!

★ ★ ★

சந்திரனில் கல்லெடுத்து
செவ்வாயில் கோயில் கட்ட
முந்திவிட்ட குலத்தினிலே
வந்துதித்த
[illegible]னிதர் இவர்!

- ''இராகன்'' -

# வண்ண மலர்கள் நாம் அன்றோ?

மனிதப் பிறவி நன்றெனவே
மண்ணிற் கூறும் மனிதர்காள்!
புனிதப்பிறவி எம்மதுபோல்
புவியில் வேறும் உளதாமோ?

ஆண்டு நூறு நீர் வாழ்ந்தும்
அவனி மீதில் என்கண்டீர்?
ஈண்டோர் நாளே வாழ்ந்தாலும்
இறைவன் பாதம் சேர்கின்றோம்.

மதுவை நாங்கள் கொடுத்தறிவோம்.
மதுவை நாங்கள் குடித்தறியோம்.
புதுமை பழமை இரண்டையுமே
புவியில் விரும்ப நாம்செய்வோம்.

எங்கள் நிறங்கள் எத்தனையோ
எங்கள் வடிவம் எத்தனையோ
எங்கள் வாசம் எத்தனையோ
எனினும் சாதி பேதமிலோம்.

தனித்து மலராய் அழகு செய்வோம்.
சேர்ந்தே மாலை வடிவுகொள்வோம்.
இனித்த தேனைத் தந்துலகோர்
இடர்செய் நோய்கள் நீக்கிடுவோம்.

- புலவர் ம. பார்வதிநாதசிவம்.

## கவிதை முற்றம்

# பாரதிக்குப் பின் சாரதி யார்?

கல்லான்றிச் சிற்பிகளின் கையுளிகள் சிறப்பதிலும்
வில்லான்றும் மன்னர்களின் வீர முரசதிலும்
சொல்லான்றி வளர்ந்த சுவைமிகுந்த தமிழ் வயலில்
புல்லான்றிப் போச்சுதின்று...... ! பொலிவிழந்து கிடக்கிறது.

ஆழங்கடந்த அகத்தியத்துப் பாற்கடலா இன்று
பாழுங் கிணறாகப் பாழ்பட்டு நிற்கிறது?
யாரங்கே ...... சைகையிட யாழொலிக்கும் திருநாட்டைப்
பாரிங்கே! சாவுப் பறைதான் ஒலிக்கிறது.
அமுது மொழியென்று அரவணைத்த மக்களின்று
தமது மொழிபேசத் தயங்குகின்ற தோர்நிலையா ......?

கல்லெடுத்துச் சேரன் காத்துவைத்த மொழிபேசப்
பல்லிடுக்கில் கூச்சமென்ன பறைந்திடுங்கள்?
''ஷெல்லிக்கு,'' ''ஷேக்ஸ்பியருக்''கெவ்விதத்தில்
சோடையெங்கள்
வில்லியென்று கூறுதற்கேன் விரும்பவில்லை நீங்களின்று?
கலிங்கத்துப் பரணியிலே காணாத எச்சுவையோ
''இலியட் ஒடிசியிலே'' இனிக்கிறது உங்களுக்கு?

பிச்சையிடும் வீடுகளில் 'பிளீஸென்று'' கையேந்த
'டொச்சும்' 'ஆங்கிலமும்' ஜோராகக் கற்பவன் நீ!
கொச்சைத் தமிழ்பேச்சே கொழும்பு 'பஷனென்ற'
பச்சோந்தியே கேள் பகருகிறேன் — பாட்டுகளுள்
முச்சீரால் மட்டும் முடிகின்ற வெண்பாப் போல்
எச்சீர் அளித்தாலும் எமது மொழி சாவதனை
மெச்சோம் நாம் தமிழின் மெருகொழிய அனுமதியோம்.

கள்ளவத்தை ஏறிக் கண்டம் கடப்பவனே
வள்ளுவத்தை அறியாதுன் வாழ்வைக் கடப்பாயோ?
சிம்பனியின் இசைலயத்தில் சிலையாகிக் கிடப்பவனே
கம்பன் கவிச்சுழலுன் காதுரசித் திருக்கிறதா?

கூன்விழுந்த அவ்வைகொண்ட குனியாத தமிழ்ச் செருக்கு
ஏன் விழுந்துபோனதெங்கள் இளைய தமிழருக்கு?
கோட்டை அமைத்துக் கொலுவிருந்த சிங்கங்கள்
'கோர்ட்','டை' அணிந்திங்கேன் குறட்டை விடுகின்றார்?

சிந்தடிப் பாச்சூட்டி சிறப்பித்த தமிழ்ப்பெண்ணை
சிந்தடி எனவிட்டோமே, சிந்துகிறாள் விழிநீரை
பாரதியார் பின்னே பழந்தமிழின் தேர்நடத்தச்
சாரதி யார்? ஏனெவரும் சாட்டை எடுக்கவில்லை?

உண்டு உறங்கி உலகிலின்று தமிழா நீ
கண்டதென்னவோ ...? வீட்டுக் கழிப்பறைக்குச் சொத்துத்தான்.

-ச. முகுந்தன்-

# நம் திருநாட்டு மான்மியம்!

கடல்கொஞ்சி மகிழ்கின்ற திருநாடு — இன்று
கரியோடு சதைநாறும் இடுகாடு
கடன்வாங்கிப் பலிவாங்கும் கறை வீடு — கொண்ட
கவலைக்கு முடிவென்று வரும் கூறு?

சடலங்கள் மலிவான கடையாகும் — இங்கு
சமதர்மம் விலையான பொருளாகும்.
விடம்தானே பலர்க்கிங்கு பரிசாகும் — என்றால்
விழுகின்ற எமக்கேது எதிர்காலம்?

வெடிகுண்டு பசியாற உணவுண்டு! — தீர்ப்பை
வழங்காதோர் விளையாடத் தலையுண்டு!
குடிபேர்ந்து குடிபேர்ந்து இடியுண்டு — மாளும்
குலத்[illegible]

- அருணன் -

# ''அழிந்துபோன எங்கள் அழகான வாழ்வு....''

சின்ன வயது!
துயரம் தெரியாத பருவம்.
எங்களூரில் அப்போது எல்லாம் இருந்தது.
அந்திப் பொழுதில்,
அப்பா, கடலுக்குப்போக ஆயத்தமாவார்.
கரைவரைக்கும், நானும் அம்மாவும்
துணையாகப் போவோம்.
எம்மை வாழவைக்கும் கடல் தாயின்
பாதம் தொட்டு அப்பா படகேறுவார்.
'சின்னத்தம்பி' மாமாவும் கூடப்போவார்.
விடியும் வரைக்கும் அம்மாவின்
விழிகள் மூடா.
படகுகள் திரும்பியதும்
உறவுகள் எல்லோரும் கரையில் கூடுவர்.
அள்ளி வந்த மீன்கள்
நாளைய வாழ்விற்கு நம்பிக்கையூட்டும்.
வருடத்தில் ஒரு நாள்
''வெள்ளலை நாயகிக்கு'' விழாவெடுப்போம்.
'சோமர்' வீட்டு ஒலி பெருக்கி பாடலிசைக்கும்.
தேவலோகத் திருவிழாப்போல்
'நாகமுத்து ஐயா' தான் முன்னின்று
நடத்திவைப்பார்.
சோகங்கள் மறந்து சொந்தங்கள் எல்லாம்
கூடிமகிழ்வர்.
'சின்னவன்' விற்கும் சீனி முறுக்கு
தின்னவென்றே ஒருபடை திரளும்.
பின்னலிட்ட இளசுகளின்
பின்னாலும் ஒரு படை நகரும்.
அப்பா தந்த பத்து ரூபாயில்
'ரங்கன்' கடையில் 'ஐஸ்கிறீம்' வாங்கி
நண்பர்களுக்கு கொடுத்து நானும் குடிப்பேன்.
இப்படித்தான்,
அன்று எங்கள் வாழ்க்கை அழகாய் இருந்தது.
ஒரு நாள் ......
கடலுக்குப்போன 'கந்தப்பு' திரும்பவில்லை.
உருக்குலைந்த உடலைத்தான்
அடுத்த நாள்
அலை கொண்டு வந்து கரைசேர்த்தது.
அன்று ... எங்களூர் அதிர்ந்தது.
அதன் பின்,
கந்தப்புவைப்போல கண்ணனும்
அந்தோனியப்புவும்
கடலில், காணாமல் போயினர்.
ஊர் திரண்டு ஓலமிட்டது.
பின் ... ஓய்ந்துபோனது.
எங்கள் கடல் எமக்கு
சொந்த மின்றிப் போனபோது
எல்லா வீட்டிலும் 'வறுமை' சொல்லாமல்
புகுந்தது.
வயிற்றுப்பசிக்கு படகெடுத்துப் போனால்
உயிரின்றித்தான் எமது உடல்
கரையொதுங்கும்.
அப்பா கடலுக்குப் போய் இன்று
எத்தனையோ வருடங்கள்.
ஏழு வருடத்திற்குமுன், நாங்கள்
ஏறிவிளையாடிய கடல்மடி
யாருமற்று இன்று தனிமையில் தவிக்கிறது.
மீளுமா இனி அந்த வாழ்வு?
இன்று ......
சோகம் எமக்கு சொந்தமாகிப் போனது
சாகும் வரைக்கும்.

- சுளிபுரம் வானவராயன் -

# ஓ... மானிட சமுதாயமே!

ஓ...மானிட சமுதாயமே!
உன்னைத் தான் கேட்கின்றேன்!!
ஒருகணம் சிந்திக்க மாட்டாயா?
உளுத்துப் போன மரபுகளை ஏன்
பிடித்துக் கொண்டிருக்கிறாய்?
கருத்தில்லாத வற்றுக்கு ஏன்
காரணம் சொல்லுகின்றாய்?
நன்றல்லாதவற்றை ஏன்
நலமெனப் போற்றுகின்றாய்?
உண்மை யில்லாத வற்றுக்கு ஏன்
உளம் மகிழுகின்றாய்?
போலியானவற்றுக்கு ஏன்
வர்ணம் பூசுகின்றாய்?
வேலியாய் இருக்கவேண்டிய நீ ஏன்
வெள்ளாடாய் மாறுகின்றாய்?
தடுக்கி விழுந்தவனை ஏன்
எழும்ப விடாது தடுக்கின்றாய்?
அடுக்கி யடுக்கி அவன்மேல் ஏன்
அபாண்டம் சுமத்து கின்றாய்?
கொடுக்கவேண்டும் தண்டனை
என்று ஏன்
கொலைக் குற்றம் சுமத்துகின்றாய்?
குற்றம் செய்வதற்கு காரணம் அவன் மட்டுமா?
சுற்றம் நாற்றத்தில் மிதக்கையிலே
சுத்தம் பேசுவதில் அர்த்தமில்லை!
மற்றவன் மேல் குற்றம் சுமத்தும் நீ
நித்தம் நல்லவை நினைத்தா லென்ன?
சித்தஞ் செயலினில் பதித்தா லென்ன?
புத்தம் புதியவை புனைந்தா லென்ன?
யுத்தம் மறைந்திட உழைத்தா லென்ன?
அத்தனையும் நீ உணர்ந்தா லென்ன?
அமைதிக்கு வழிவந்து பிறக்காதோ?

- அபிர்ராஜன் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு புரட்சியாளனின் இலட்சியப் பயணம்!



சே குவரா

லத்தீன் அமெரிக்க நாடுகளில் புரட்சிக்கு வித்திட்ட புகழ்பெற்ற கெரில்லாத் தலைவரும், கெரில்லா யுத்த தந்திரோபாயத்தின் சிருஷ்டி கர்த்தா என் வர்ணிக்கப் படுபவருமான ஏர்னெஸ்ரோ சே குவராவின் (Ernesto che Guevara) கதையின் கடைசி அத்தியாயத்துக்கு ஒருவாறு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கிறது.

கிட்டத்தட்ட கடந்த 30 ஆண்டு காலமாக வெறும் ஊகங்களாகவும், கட்டுக் கதைகளாகவும் பேசப்பட்டு வந்த அவரது மரணம் தொடர்பான உண்மை தற்போது வெளிச்சத்துக்கு வந்துவிட்டது.



ஆர்ஜென்ரீனா உடற் கூற்றியல் சட்ட வைத்தியநிபுணர் பற்ரீஷியா பேர்னாட்டியும் கியூபாவின் தொல்பொருளியலாளர் ரோபேர்ட்டோ ரொட்ரிகியாஸும் சே குவராவின் எலும்புக் கூட்டை ஆய்வு செய்கின்றனர்.

1967 ஆம் ஆண்டின் பிற்பகுதிகளில் பொலீவியாவில் கெரில்லா யுத்தத்தில் ஈடுபட்டிருந்த சமயம் பொலீவிய இராணுவத்தினராலும், அமெரிக்காவின் சீ. ஐ. ஏ. ஏஜெண்டுகளினாலும் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற் போயிருந்த சே குவராவின் எலும்புக் கூட்டுத் தொகுதியை நிபுணர்கள் கண்டுபிடித்து நிரூபித்துள்ளனர்.

பொலீவிய அரச படைகளால் சே குவரா கொல்லப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டிருந்த போதும் அவரது சடலம் என்னவாயிற்று என்பது குறித்துக் கடந்த 30 ஆண்டு காலமாக மர்மம் நிலவி வந்தது. ஆனால் கியூபா மற்றும் ஆர்ஜென்ரீனா நாட்டு உடற்கூற்றியல் நிபுணர்களும், தொல்பொருள் ஆய்வாளர்களும் கடந்த மாதம் அதனை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்துள்ளனர்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியிலும் சே குவராவின் நினைவுகளை மீண்டும் கிளறி விட்டுள்ள இந்தப் பரபரப்பான கண்டுபிடிப்பு எவ்வாறு சாத்தியமானது?

பொலீவியப் படையினரிடம் சிக்கிப் பின்னர் கொலை செய்யப்பட்டதாக நம்பப்பட்ட சே குவராவின் உடலைத் தேடிக் கண்டு பிடிக்கும் முயற்சிகளைக் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னரே நிபுணர்கள் ஆரம்பித்துவிட்டனர்.

ஆனால் அவரது சடலம் பொலீவியாவில் எங்கே புதைக்கப்பட்டது என்ற கேள்விக்குத் தெளிவான விடை கிடைக்கவில்லை.

1995 நவம்பர் மாதத்தில் ஒரு நாள் ஓய்வுபெற்ற பொலீவிய இராணுவ ஜெனரல் ஒருவர் அமெரிக்க உயிரியல் நிபுணர் ஒருவரிடம் திடுக்கிடும் தகவல் ஒன்றைத் தெரிவித்தார்.

கொலை செய்யப்பட்ட சே குவராவினதும் வேறு ஆறு கெரில்லாக்களினதும் சடலங்கள் வெல்லகிறன்டி (Vallegrande) என்ற நகரின் அருகே உள்ள கைவிடப்பட்ட விமானத் தளம் ஒன்றின் அருகாமையில் ஓர் கல்லறையில் புதைக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இராணுவ ஜெனரல் கூறிய இத்தகவலை சடலங்களைப் புதைக்க உதவியவர்களில் ஒருவரான புல்டோசர் இயக்குநர் ஒருவரும் பின்னர் உறுதி செய்தார். இந்தத் தகவல்கள் சே குவராவின் சடலத்தைத் தேடும் முயற்சியில் ஈடுபட்ட நிபுணர்களை உஷார்படுத்தின.

அரச படையினரின் நடவடிக்கைகளின் போது இறந்த கெரில்லாக்களின் உறவினர்கள் தொடர்ந்து கொடுத்து வந்த அழுத்தத்தின் காரணமாக இது தொடர்பாக விசாரணைகளை ஆரம்பிக்குமாறு பொலீவிய அரசு உத்தரவிட்டது.



குண்டுகளால் துளைக்கப்பட்ட சே குவராவின் உடல்.

இதனையடுத்து வெல்ல கிறன்டி நகரின் அருகே குறிப்பிட்ட பகுதியில் தேடுதல் நடத்திய நிபுணர் குழுவினர் நான்கு எலும்புக்கூடுகளை மீட்டனர். ஆனால் அவற்றில் சே குவராவின் எலும்புக்கூடு கிடைக்கவில்லை.

மீண்டும் கடந்த ஆண்டு கியூபா நாட்டு நிபுணர்கள் அப் பகுதியில் தங்கள் தேடுதலை ஆரம்பித்தனர். இந்த முறை தேடுதல் நடவடிக்கை மிக விரிவாக நடத்தப்பட்டது.

குறிப்பிட்ட பகுதியைச் சேர்ந்த கிராம வாசிகளிடம் இருந்தும், 1967 ஆம் ஆண்டு சே குவரா கொல்லப்பட்ட சமயம் வெல்ல கிறன்டியில் நிலைகொண்டிருந்த படைப் பிரிவைச் சேர்ந்தவர்களிடம் இருந்தும் மேலும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

குறிப்பிட்ட பகுதியில் பூகோள நிபுணர்களின் உதவியுடன் 10 ஆயிரம் சதுர மீற்றர் பிரதேச நிலம் புல்டோசர்களின் உதவியுடன் தோண்டப்பட்டது. தரைக்குக் கீழே ஆய்வுகள் நடத்தப்பட்டன.

இந்தத் தேடுதல் முயற்சி ஆரம்பிக்கப்பட்ட அடுத்த இருமாத காலப் பகுதியில் அப் பகுதி மக்கள் தெரிவித்த ஆட்சேபம் காரணமாக அது இடைநிறுத்தப் பட்டது.

**-நல்லூர் தாஸ்-**

சே குவராவின் நினைவுகளை இழப்பதற்குத் தாங்கள் விரும்பவில்லை என அப் பகுதி கிராம வாசிகள் கூறினர். வெல்ல கிரன்டி நகரை அண்டி" மலையடிவாரமாக அமைந்த அப்பகுதியில் சுமார் 5 ஆயிரம் பேர் வசிக்கின்றனர்.

1967 ஆம் ஆண்டு அங்குள்ள இராணுவத் தளம் ஒன்றுக்கு இரத்தம் சொட்டிய நிலையில் எடுத்து வரப்பட்ட கெரில்லா வீரன் ஒருவனின் சடலம் குறித்து இக் கிராம வாசிகளிடையே பலவித ஊகங்களும் நம்பிக்கைகளும் நிலவிவந்தன.

இரத்தம் தோய்ந்த அரைகுறை ஆடையுடன் கொண்டு வரப்பட்ட அவனின் சடலத்தை 'யேசு நாதரின் சடலம்' என்று அவர்களில் பலர் கூறிவந்தனர். சிலர் அவனை வழிபடவும் செய்தனர்.

கிராம வாசிகளின் எதிர்ப்பினால் இடைநிறுத்தப்பட்ட தேடுதல் பணிகளை நிபுணர்கள் குழுவினர் பின்னர் மீண்டும் ஆரம்பித்தனர். மேலும் சில எலும்புக் கூடுகளும் தடயப் பொருள்களும் சிக்கின.

மொத்தமாக மீட்கப்பட்ட ஏழு எலும்புக் கூடுகளையும் தூய்மைப்படுத்தி வடிவமைத்து அவற்றுடன் காணப்பட்ட தடயப் பொருள்களையும் தனித்தனியே இணைத்து அவற்றுக்கு இலக்கமிடப்பட்டது.

பின்னர் அவற்றைப் பொது மக்களின் பார்வைக்கு வைத்தபோதுதான் ஆச்சரியமானதும், முக்கியமானதுமான துப்பு ஒன்று நிபுணர்களுக்குத் தெரியவந்தது.

''இலக்கம் —2'' எனக் குறிப்பிடப்பட்டிருந்த எலும்புக் கூட்டில் காணப்பட்ட கறுப்பு நிறத் தோலினால் ஆன இடுப்புப்பட்டியை அவதானித்த நெஸ்ரலி ஒஸினாகா என்ற நபர் அதிர்ச்சியில் உறைந்து போனார்.

அவரது நினைவுகள் 1967 ஆம் ஆண்டின் ஒக்ரோபர் மாதத்து மாலைப் பொழுது ஒன்றை நோக்கிச் சென்றன. அன்று மாலை வெல்ல [illegible] இராணுவத்தினர் சிலர்

(XI ஆம் பக்கம் பார்க்க)

## இளம் மருத்துவ நிபுணன் கெரில்லா வீரனான கதை

1928 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 14 ஆம் திகதி ஆர்ஜென்ரீனாவில் உள்ள றொசாரியோ நகரில் பிறந்த சே குவரா சிறுவயதிலேயே அபூர்வ குணங்களைக் கொண்டிருந்தான்.

சிறுவயதில் ''அஸ்மா'' நோயினால் பீடிக்கப் பட்டதால் ஏனைய குழந்தைகளைப் போல உரிய பராயத்தில் அவனால் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை.

இரண்டு வருடங்கள் தாமதித்துப் பள்ளியில் சேர்ந்த அவனுக்கு தாயார் வீட்டில் வைத்தே எழுத்துக்களை எழுதப் பழக்கவேண்டியதாயிற்று.

அவனது இயற்பெயர் ஏர்னெஸ்ரோ குவாரர என்பதுதான். ஆனால் சிறுவயதில் அவனை எல்லோருமே அன்பாக 'சே' என்று அழைத்தனர். சிறுவயதில் அன்பாக அழைக்கப்பட்ட 'சே' என்ற பெயர் பிற்காலத்தில் உலக சரித்திரத்தில் இடம் பிடித்துவிட்டது.

சுற்றுலா செய்வதில் ஆர்வம் கொண்டவன் சே. ஆர்ஜென்ரீனாவின் 12 மாநிலங்களையும் சுற்றிவரும் சைக்கிள் ஓட்டப்போட்டி ஒன்றில் சிறுவன் சேயும் பங்குபற்றினான்.

1946 — 1953 ஆம் ஆண்டு காலகட்டதில் புவனர்ஸ் அயர்ஸ் தேசியப் பல்கலைக்கழகத்தில் மருத்துவ மாணவனாக இருந்த காலகட்டத்திலும் சுற்றுலாவே அவனது பொழுது போக்காக இருந்தது.

அவனது மருத்துவப் படிப்பின் இறுதி ஆண்டு காலத்தில் லத்தீன் அமெரிக்க நாடுகளில் பரவிய தொற்று நோய்கள் அவனது கவனத்தை ஈர்த்தன.

பிரபல மருத்துவர் அல்பர்ட்டோ கிறனேடாவுடன் இணைந்து தொற்று நோய்கள் குறித்து ஆய்வு செய்ய மோட்டார் சைக்கிள் சுற்றுப் பயணத்தை ஆரம்பித்தான் சே.



பிடல் கஸ்ட்ரோவுடன்

சிலி, பெரு கொலம்பியா, வெனிசுவெலா எனப் பல நாடுகளுக்கு அவனது பயணம் நீண்டது.

1953 ஆம் ஆண்டு ஒரு சத்திர சிகிச்சை நிபுணனாகவும், தொழுநோய்ச் சிகிச்சை நிபுணனாகவும் சே குவரா மருத்துவக் கல்லூரியில் இருந்து வெளியேறினான், அதன் பின்னர் லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கான அவனது இரண்டாவது பயணம் ஆரம்பமானது.

இந்தப் பயணத்தின் போது மருத்துவ ஆய்வுகளை விடவும் பல்வேறுபட்ட இன சமூகங்களின் பொதுப் பிரச்சினைகளில் அவனது கவனம் திரும்பியது.

சமூகப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பொது அமைப்புகள், தனி மனிதர்களை அடையாளம் காணுதல், கலந்துரையாடல்கள், கருத்துப் பரிமாற்றங்கள் மூலம் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் போன்ற விடயங்களில் சே குவரா தன்னை அர்ப்பணித்தான்.

அரசியல் அடக்கு முறைகள், இனப் பாகுபாடுகளை லத்தீன் அமெரிக்கா முழுவதும் அவன் தரிசித்தான்,

கௌதமாலாவில் ஜனாதிபதி அபென்சின் ஆட்சியைக் காப்பாற்றுவதற்காக நடந்த கிளர்ச்சியில் சே குவரா பங்கு கொண்டான். அந்தக் கிளர்ச்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து மெக்ஸிக்கோ திரும்பிய அவன் அங்குள்ள இருதய மருத்துவமனை ஒன்றில் டாக்டராகப் பணியாற்றினான்.

இந்தக் காலம்தான் சே குவராவின் வாழ்வின் திருப்பு முனையாக அமைந்தது.

தற்போதைய கியூபா அதிபரும் கம்யூனிஸ கெரில்லாத் தலைவருமான பிடல் காஸ்ட்ரோவை அங்குதான் முதன் முறையாக சே சந்தித்தான். நட்பு மலர்ந்தது. கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. லத்தீன் அமெரிக்க நாடுகளில் உருவான வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த போராட்டங்களுக்கு அவையே வித்தாக அமைந்தன.

பிடல் காஸ்ட்ரோவின் புரட்சிகர இயக்கத்தில் சேர்ந்த சே குவரா 'கிரான்மா' தாக்குதலுக்கான ஏற்பாடுகளைச் செய்வதில் அவருக்கு உதவினான். இச்சந்தர்ப்பத்தில் அவனும், பிடல் கஸ்ட்ரோவும் அவரது குழுவினரும் மெக்ஸிக்கோ பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர். 57 நாள் சிறைவாசத்தின் பின் சே குவரா விடுதலை பெற்றான்.

1956 ஆம் ஆண்டு மெக்ஸிக்கோவின் டுக்ஸ்வான் துறைமுகத்தில் இருந்து புறப்பட்ட பிடல் காஸ்ட்ரோ தலைமையிலான 81பேர் கொண்ட கெரில்லாகுழுவில் ஒருவனாக சே குவராவும் இடம் பெற்றான். அந்தப் புரட்சிக் குழுவின் தலைவர் பிடல் கஸ்ட்ரோவுக்கு அடுத்த நிலையில் அவரது சகோதரர் ராவுல் காட்ஸ்ரோவும், மூன்றாவது நிலையில் சே குவராவும் இருந்தனர்.

லத்தீன் அமெரிக்க நாடுகளில் பிற்காலத்தில் சே குவரா மேற்கொண்ட புரட்சிகர கெரில்லா யுத்தத்தின் பயணம் இங்கேதான் ஆரம்பமானது.

கியூபப் புரட்சிகர யுத்தத்தின் வெற்றியில் பிரிக்க முடியாத பங்காளியான சே குவராவின் பெயர் வரலாற்றில் பொறிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நோயைக் கண்டறிவதற்கு 'மண் குளியல் சிகிச்சை'!

ஆயுர்வேத சிகிச்சை முறை இந்தியாவின் தொன்மையான சிகிச்சை முறையாகும்.

நவீன மருத்துவத் துறையில் உடலின் நோய்களைக் கண்டுபிடிப்பதற்கான பல்வேறு 'ஸ்கேன்' கருவிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்னரே, ஆயுர் வேத மருத்துவ முறையில் நோய்களைக் கண்டறிவதற்காக உடலை அங்கம் அங்கமாகப் பரிசோதிக்கும் ஒரு 'ஸ்கேன்' முறை வழக்கத்தில் இருந்துள்ளது

அதுவே மண் குளியல் முறை

உடலின் எந்தப் பாகத்தில் நோய் உள்ளது என்பதைக் கண்டுபிடிப்பதற்கு இந்த மண் குளியல் முறை மிகவும் உதவுகிறதாம்.

தோல் வியாதியைக் குணப்படுத்தவும், உடலுக்குக் குளிர்ச்சியை ஏற்படுத்தவும் கூட இது பயன்படுகின்றது.

பல்வேறு காரணங்களால் வழக்கொழிந்து போயிருந்த இந்த முறையை கேரளாவில் உள்ள தனியார் வைத்திய நிலையம் ஒன்று மீண்டும் புதுப்பித்து செயற்படுத்தத் தொடங்கியுள்ளது.

கேரளம் பாலக்காடு



மாவட்டத்தில் இயற்கைச் சூழலில் தங்கும் வசதிகளோடு இந்த மருத்துவமனை அமைந்துள்ளது.

இங்கே, கிடைப்பதற்கு அரிதான எறும்புப் புற்று மணலைப் பசையாக்கி, அதனை நோயாளியின் உடல் முழுவதும் தடவி வெயிலில் ஒரு மணி நேரம் உட்கார வைப்பார்கள். பிறகு அவரை நீரில் குளிப்பாட்டுவார்கள். நோயாளியின் எந்த உடல் உறுப்பு சரியாகச் செயல்படவில்லையோ அங்கு தோலின் நிறம் வித்தியாசமாக இருக்கும். இந்த நிறமாற்றம் எந்த இடத்தில் எந்த அளவு வீரியமாக ஏற்பட்டுள்ளது என்பதைப் பரிசோதித்து நோயைக் கண்டறிவார்கள்.

''நவீன உலகின் 'ஸ்கேன்' முறையால் நோயாளியின் உடலில் அந்தச் சமயத்தில் இருக்கும் கோளாறுகளை மட்டுமே கண்டறிய முடியும். ஆனால் மண் குளியல் முறையினால் கடந்த காலத்தில் ஏற்பட்டிருந்த நோயின் பாதிப்பைக்கூட கண்டு பிடித்து விடலாம்'' என்கிறார் இந்த மருத்துவ முறைக்குப் பொறுப்பான மருத்துவர்.

## இரத்தத்துக்குப் பதிலாக மாற்று ஏற்பாடு!

தற்போது அறுவை சிகிச்சை செய்யும் டாக்டர்கள் எதிர் நோக்கும் முக்கிய பிரச்சினை மாற்று இரத்தம்.

பல மணித்தியாலங்கள் — நீண்ட நேரம் — நடைபெறும் அறுவை சிகிச்சைகளின் போது பைந்த் கணக்கில் வீணாகும் இரத்தத்துக்குப் பதிலாக புதிய இரத்தத்தை ஏற்ற வேண்டிய கட்டாயத்தில் டாக்டர்கள் உள்ளனர்.

இதற்கான மாற்று இரத்தத்தைத் தேடிப்பிடித்து ஏற்பாடு செய்வதில்தான் சிக்கல்.

மாற்று இரத்தம் கிடைப்பதென்பது தற்போது குதிரைக்கொம்பாகிவிட்டது. யாராவது கொடுக்க முன்வந்தாலும் 'எய்ட்ஸ்' பயம்வேறு. இந்த விடயத்தால் உறவினர்களையும் நம்பமுடியாதளவுக்கு காலம் கெட்டுக்கிடக்கின்றது.

எனவே, மனித இரத்தத்திற்குப் பதிலாக— மாற்று வழி ஒன்றை அறுவைச்சிகிச்சைக்குப் பயன்படுத்தினால் என்ன என்ற கேள்வி பிரிட்டன் விஞ்ஞானிகள் மத்தியில் எழுந்துள்ளது.

நாம் அன்றாடம் பயன்படுத்தும் பசுப்பாலில் மனித இரத்தத்திலிருக்கும் 'பிளாஸ்மா' என்ற பொருள் அதிகமாக இருப்பதால் பாலின் மூலக்கூறுகளை தீவிரமாக ஆராய்ந்து வருகின்றனர் அந்த பிரிட்டன் விஞ்ஞானிகள்.

இந்த ஆராய்ச்சியின் விளைவாக கிடைக்கின்ற பொருளை மாற்று இரத்தத்துக்குப் பதிலாகப் பயன்படுத்த முடியும் என்றும்—

எல்லா வகை அறுவைச்சிகிச்சைகளுக்கும் இதனைப் பயன்படுத்த முடியும் என்றும்—

நம்பிக்கையோடு கூறுகின்றார்கள் அவர்கள். பொறுத்திருந்துதான் பார்ப்போமே!

## மூளைக் கூர்மை மதுவால் குறையாது!

நிறைய மது அருந்துவதால் மனித மூளையின் கூர்மைத்தனம் குறைந்து வருகின்றது என்றே நம்மில் பலர் நினைக்கின்றனர்.

ஆனால் ஆஸ்திரேலியாவின் பல்கலைக்கழகம் ஒன்றின் ஆய்வறிக்கை ஒன்று இக்கருத்துக்கு முரணாக உள்ளது.

இதற்காக 209 பேரைத் தனது ஆய்வுக்குப் பயன்படுத்தியது ஆஸ்திரேலியப் பல்கலைக்கழகம். இந்த 209 பேரும் யார் தெரியுமா? இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது 'மகா குடிகாரர்கள்' ஆக இருந்து தற்போதும் அதனைத் தொடர்ந்து கொண்டிருக்கின்ற வயோதிபப் போர் வீரர்களே அவர்கள்.

இந்த ஆய்வின் முடிவாக நிறைய மதுபானம் அருந்துவதனால் மனித மூளையின் கூர்மைத்தனம் குறைந்து வருகின்றது என்ற கருத்து எவ்வித ஆதாரமும் இல்லாதது என்று கூறப்படுகின்றது.

எது எப்படியோ இதனால் சந்தோஷப்படப்போவது நம்மூர் 'பெருங்குடி' மக்களே!

ஆனால் மதுவின் அற்ககோலின் அளவு குருதியில் 0.05 வீதம் ஆகும் போது ஞாபகமறதி, உளத்தளர்ச்சி, நடுக்கம், சமநிலையின்மை, மனக்குழப்பம் என்பன ஏற்படும் என்றும் —

அது 0·25 வீதம் ஆகும் போது சமுதாயப் பழக்க வழக்கங்கள் அற்றுப்போகும் என்றும் —

அது 0.35 வீதம் ஆகும் போது மயக்க நிலையும், 0.45 வீதம் ஆகும்போது உணர்வின்மையும் ஏற்பட்டு இறுதியில் அதனளவு 0.55 வீதம் ஆகும்போது மரணமும் சம்பவிக்கும் என்றும் —

எச்சரிக்கின்றார் யாழ்ப்பாணத்து இரசாயனவியல் ஆசிரியர் ஒருவர்.

## கொலராவுக்கு 'வைன்' மருந்து

கொலரா மற்றும் வயிற்றுடன் தொடர்புடைய நோய்களை உருவாக்கும் நுண்கிருமிகளை அழிப்பதற்கு 'வைன்' குடிவகைகள் நல்ல மருந்து என்று ஹொனலுலுவில் உள்ள இராணுவ மருத்துவ நிலைய டாக்டர்கள் கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

## முழு வீச்சில் நடக்கும் போலி மருந்து விற்பனை!

உலகெங்கும் போலி மருந்துகளின் விற்பனை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

ஆண்டொன்றுக்கு ஆயிரத்து 600 கோடி டொலர் (சுமார் 13. ஆயிரம் கோடி ரூபா) பெறுமதியான போலி மருந்துகள் சந்தையில் விற்பனையாவதாக 'லெமேண்ட்' என்ற பாரீஸ் பத்திரிகை சமீபத்தில் தெரிவித்திருக்கின்றது.

உலகம் முழுவதும் ஓராண்டில் விற்பனையாகும் மருந்துப் பொருள்களில் குறைந்தது ஏழு சதவீதமானவை போலி மருந்துகளே என்று உலக சுகாதார ஸ்தாபனமும் தனது ஆய்வுகளின் பின்னர் தெரிவித்திருக்கின்றது.

நைஜீரியா நாட்டில் மூளைக்காய்ச்சல் நோய்க்காக ஆயிரக் கணக்கான குழந்தைகளுக்கு தடுப்பு மருந்து போடப்பட்டது. ஆனால் அந்த மருந்து முழுவதும் வெறும் தண்ணீர் ('டிஸ்டில் வார்ட்டர்') என்பது பின்னர்தான் தெரிய வந்தது.

நைஜீரியப் பிள்ளைகளுக்குக் கொடுத்த 'சிரப்' ஒன்றில் 'ஆன்டி ப்ரீஸ்' என்ற உறைதல் தடுப்புக் கலவை கலந்திருந்ததால் 199 குழந்தைகள் பரிதாபமாக இறந்ததாகவும் பாரீஸ் பத்திரிகை தெரிவித்தது.

## வாய்வழியாக இன்சுலின் உட்கொள்ளலாம்!

முற்றிய நீரிழிவு நோய் உடையவர்களுக்கு ஒரு தொல்லை. அவர்கள் அடிக்கடி இன்சுலின் ஊசி போட வேண்டியிருக்கும்.

ஈரலில் உள்ள இலங்ககான் சிறு தீவுகளில் சுரக்கப்படும் இன்சுலின் என்ற ஓமோனே இரத்தத்தில் வெல்லத்தின் அளவைக் கட்டுப்படுத்துகின்றது என்பதும் —

அந்த இன்சுலின் சுரப்புப் பாதிக்கப்படும் போது அல்லது குறையும் போது இரத்தத்திலும், சிறு நீரிலும் வெல்லத்தின் அளவு கூடி நீரிழிவு நோய் ஏற்படுகின்றது என்பதும் —

நமக்குத் தெரிந்தவையே.

இந்த இன்சுலின் ஓமோனை வாய் மூலம் உட்கொண்டால் அது இரத்தத்தில் போய்ச் சேராது. உணவுக் கால் வாயில் சுரக்கப்படும் நொதியங்களால் இன்சுலின் தாக்கப்பட்டு சமிபாடடைந்து விடும்.

இதனாலேயே முற்றிய நிலையில் நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு இன்சுலின் ஊசி மூலம் செலுத்தப்படுகின்றது. அத்தகைய நோயாளிகளுக்கு இப்போது ஆறுதலான ஒரு செய்தி.

இன்சுலினை வாய்வழியாகவும் உட்கொள்ளக் கூடிய ஒரு வழிவகையை மருத்துவ உலகம் கண்டுபிடித் திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இது தொடர்பான ஆய்வுகள் முடிந்து விட்டன. இது ஒரு பெரும் மருத்துவ சாதனை.

சமிபாட்டுக்கு உதவும் நொதியங்களால் இன்சுலின் அழியாமல் இருக்கும் புதிய முறை ஒன்றே கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.




தயாரிப்பு: ராம்

## தாய் வயிற்றில் குழந்தை கேட்கின்ற சத்தங்கள்!

பாண்டவர்களுள் ஒருவரான அருச்சுனனுக்கும் மனைவி சுபத்திரைக்கும் மகனாகப் பிறந்தவன் அபிமன்யு.

சுபத்திரையின் வயிற்றுக்குள் கருவில் இருக்கும்போதே வெளியில் உபதேசிக்கப்பட்ட யுத்த தந்திரோபாயங்களைக் கேட்டுப் புரிந்துகொண்டவன் அபிமன்யு என்ற சாரப்பட மகாபாரதக் கதை ஒன்று உண்டு.



கருவுக்குள் இருக்கும் குழந்தைக்கு வெளியில் நடக்கும் உரையாடல் கேட்குமா என்பது சரியான கேள்விதான்.

ஆனால் கருவில் இருக்கும் குழந்தை சத்தங்களை உணர்ந்து கொண்டுதான் இருக்கின்றது என்பது மட்டும் உண்மை.

கருவில் இருக்கும் குழந்தை சாதாரணமாக 85 முதல் 95 'டெசிபல்' அளவுடைய சத்தத்தை எந்நேரமும் உணர்ந்து கொண்டிருக்கின்றது என்பது மருத்துவ ஆய்வுகளில் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த 85 முதல் 90 டெசிபல் சத்த அளவு என்பது சாதாரண 'டிஸ்கோ' இசை கேட்கும் அளவாகும்.

தொப்புள் கொடி ஊடான இரத்த ஓட்டம், தாயின் சுவாசம், தாயின் இருதயத் துடிப்பு ஆகியவையே இத்தகைய அளவு சத்தமாக குழந்தைக்குக் கேட்ட வண்ணம் இருக்கின்றன.

காலம் முந்திப் பிறக்கும் (Premature Baby) குழந்தைகள் இத்தகைய ஒலிகள் திடீரெனக் கேட்காமல் நின்று போவதால் குழம்புகின்றன என்றும் —

அக்குழந்தைகளுக்கு மெல்லிய இசை மூலம் இத்தகைய அளவு சத்தத்தைக் கேட்க வாய்ப்பளிக்கும் போது அவை அமைதியாக, நீண்ட நேரம் தூங்குகின்றன என்றும் —

இவ்விடயம் பற்றி ஆராய்ந்த நிபுணர்கள் கூறுகின்றனர்.

குறைப் பிரசவக் குழந்தைகளுக்குத் தருவதற்கெனப் பதிவு செய்யப்பட்ட விசேட இசைக் கஸெட்டுகளை மருத்துவ உலகு தயாரித்து வருகின்றது.

இந்தக் கஸெட்டுகளை மெல்லிய சத்தத்தில் போட்டு விட்டால் குழந்தைகள் குதூகலமாகத் தூங்குகின்றனவாம்.

## இரத்த அழுத்தத்தாலும் மறதி வரும்!

முதுமை மட்டுமல்ல; உயர் இரத்த அழுத்தமும் மறதிக்கு முக்கிய காரணம்.

அமெரிக்க உடல் நல ஆராய்ச்சி மையம் ஒன்று வயோதிபர்களை வைத்து நடத்திய ஆய்வு ஒன்றில் இருந்து இந்த உண்மை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

## பக்கவாதத்துக்கு அஸ்பிரின்!

திடீரென பக்கவாதத்தால் கை, கால் விழுந்து விட்டால் அவசர சிகிச்சைக்காக 'அஸ்பிரின்' கொடுக்கலாம் என்பதை எடின்பரோ மருத்துவர் டாக்டர் பீற்றர் சாண்டர்காக் தெரிவித்துள்ளார். இதற்காக 36 நாடுகளில் உள்ள பக்கவாத நோயாளிகளை அவர் சோதித்தார்.

பக்கவாதம் ஏற்பட்டுமுதல் 48 மணி நேரத்துக்குள் அஸ்பிரின் கொடுப்பதோடு 14 நாள்களுக்கு இதைத் தொடர்ந்து கொடுத்து வந்தால் முன்னேற்றம் தெரிவதோடு, பத்து சதவீத இறப்பு விகிதத்தையும் கட்டுப்படுத்த முடியும் என்கிறார் அவர்.

## மாசு கட்டுப்படுத்தும் பக்டீரியா!

மின்கோட்டா பல்கலைக் கழக விஞ்ஞானிகள் உருவாக்கியிருக்கும் ஒரு வகை பக்டீரியாக்கள் குளிரூட்டிகள் மற்றும் அதுபோன்ற பொருள்களில் இருந்து வெளிவரும் குளோரோ — புளோரோ— காபன்களைக் சிதைவடையச் செய்து மாசுபடுவதைத் தடுக்கின்றது.

Pseudomonan Putida என்பதே அந்த பக்டீரியாவாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் அத்தியாயம்

இவனது நண்பன் ஒரு கோழை. கடலிலே போய் சாகவா என அவன் மனைவி கேட்டாளாம். தாய் பதறினாளாம். அவனது நண்பர்களும் உற்சாகப் படுத்தாமல் ஏதேதோ சொல்லி அவனை அஞ்சவைத்துவிட்டார்கள். திட்டம் தவிடுபொடி.

விளைவு — கடற் பயணம் கைவிடப்பட்டது. ஏரியிலே படகு விடத்தான் அவன் லாயக்கு எனத் திட்டினான். தான் என்ன செய்யலாம் என எண்ணினான். அவனது 25 அடிப் படகினை வாங்கிக்கொண்டால் தனித்தே போய்விடலாமா? ஆனால் அதற்குரிய நிதிவளம் இவனிடம் இல்லை.

வருவது வரட்டும்; தனித்தே போவோம்; எனது சிறிய படகிலே தான் போவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டான். யாருக்கும் தெரிந்தால் தன் மனைவி மக்களையும் குழப்பியடித்து விடுவார்கள் என்று திட்டத்தை இரகசியமாக வைத்துக் கொண்டான். மனைவியிடமும், குழந்தைகளிடமும் மட்டும் ஒப்புதல் வாங்கிக் கொண்டான். ஆயத்தங்கள் துரிதமாக நடந்தன.

அந்தப் படகு புது மெருகு பெற்றது. கடலில் எதையும் சமாளிக்கும் வகையில் அது வடிவமைக்கப்பட்டது. வெளிகள் நீர் கோலப்படாத வகையில் அடைக்கப்பட்டு சிறிய அறை (Cabin) ஒன்றும் அமைக்கப்பட்டு விட்டது. கப்பலின் உட்புற வெளிகளில் தேவையான அனைத்துப் பொருள்களையும் ஒழுங்குபடுத்தி வைக்க அவன் சிரமப்பட்டான்.

60 முதல் 75 நாள்கள் வரை எடுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட அந்தப் பயணத்திற்கு ஒரு முன்னெச்சரிக்கையாக 90 நாள்களுக்குத் தேவையான உலர் உணவுகள், சமைத்த ரின் உணவுகள், பதப்படுத்தப்பட்ட உணவு வகைகள், குளிர் பானங்கள், 150 லீற்றர் குடிநீர் என்பன அவனது ஏற்பாடுகளில் சில. இவற்றை விடக் கடல் உணவுகளை பெற்றுப் பதப்படுத்தவும், கடல் நீரை நன்னீர் ஆக்கவும் தேவையான சாதனங்கள், ஆபத்து சமிக்ஞைகளைத் தரவல்ல வானொலி சாதனங்கள், படகில் ஏற்படும் எந்தச் சேதத்தையும் சரிசெய்யத் தேவையான பொருள்கள் என்று பட்டியல் நீண்டு கொண்டே போனது. காற்றினை நம்பிய பயணத்தில் எரிபொருளுக்கோ இயந்திரங்களுக்கோ இடம் இருக்கவில்லை.

மூன்றே மூன்று மாதங்களுக்கு, ஒரு தனிமனிதனுக்குத் தேவையான பொருள்களின் பட்டியலைப் பார்த்தால் மலைப்பாக இருக்கிறதே. வாழ்க்கை முழுவதற்கும் தேவையான எல்லாம் சேகரித்து வைக்கவேண்டி வந்தால் ஒவ்வொருவருக்கும் ஒரு பெரிய களஞ்சியமே தேவைப்படும் போல் இருக்கிறது.

தனக்குத் தேவைப்படும் அனைத்தும் ஒழுங்கு செய்யப்பட்டு விட்டதா என அவன் மீண்டும் மீண்டும் சரிபார்த்துக்கொண்டான். வானிலை எச்சரிக்கைகள் பற்றி எல்லாம் விசாரித்துக் கொண்டான். எனினும் 90 நாள்களுக்கு தெளிவாக எதையும் எதிர்வு கூறல் கடினமே.

சராசரியாக நாள் ஒன்றுக்கு 45 மைல்கள் காற்றை நம்பிய பயணம். சில வேளைகளில் காற்று மௌனம் சாதிக்கும். சில நாள்களில் சுழன்று அடிக்கும். ஆழ் கடலில் சுழியோ, சூறாவளியோ சந்திக்காமலா போகும்? எதையும் தனித்து நின்று எதிர்கொள்ளும் மனோ தைரியம் மட்டும் அவனிடம் வாய்த்துவிட்டது. படகோ மிகச் சிறியது. பாதையோ மிகக் கடினமானது. பாதை வகுத்த பின்னே பயந்தென்ன லாபம்?

அறையில் ஆடியன்றோ அம்பலத்தில் ஆடவேண்டும். பரீட்சார்த்தமாக 200 மைல் தொடர்ச்சியான பயணம் ஒன்றை அவன் ஈரி ஏரியிலே மேற்கொண்டான். தனது 10 வயதுப் புதல்வனையும் அந்த ஏரிப் பயணத்திலே இணைத்துக் கொண்டான். பெரிய அலைகளையும் கடும் காற்றையும் எப்படி வெட்டி ஆடலாம் என்றெல்லாம் அங்கே கற்க முடிந்தது. அந்தப் படகும் எந்தச் சூழ்நிலைக்கும் தாக்குப்பிடிக்கும் என்ற எண்ணம் ஏற்பட்டது. எனினும் அத்திலாந்திக் சமுத்திரத்துடன் இவ் ஏரியை ஒப்பிட்டு முடிவு காணல் இயலுமா என்பதே கேள்வி.



ஒரு சிறிய பாய் மரப்படகில் அமெரிக்காவிலிருந்து அத்திலாந்திக் சமுத்திரத்துக்குக் குறுக்கே 3 ஆயிரத்து 200 மைல் தூரத்தை தனியாக கடக்க முயன்ற ஓர் அதிசய மனிதனின் உண்மைக் கதை இது. அவன் வெற்றி பெற்றானா? உயிர் தப்பினானா?

விறுவிறுப்பான இந்தச் சம்பவத் தொடரின் இறுதியில் அதற்குப் பதில் கிட்டும்.

1965 ஜூன் மாதம் முதலாம் திகதி அவன் புறப்படுவதான ஏற்பாடுகள் தடல்புடலாக நடந்துகோண்டிருந்தன. இப்போதுவிடயம் பலருக்குப் புரியத் தொடங்கிவிட்டது. தனது இங்கிலாந்துக்கான கடவுச்சீட்டு (Passport), 'விஸா' என்பவற்றைப் பெற்றுக்கொண்டான். அவனது பத்திரிகை அலுவலகமும் ஒரு நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தது.

ஐக்கிய அமெரிக்காவின் கிழக்குக் கரையோர மாஸ் (Mass) மாநிலத்தில் உள்ள பல்மவுத் (Falmouth) துறைமுகத்தில் அவனது படகு மே மாதம் 26 ஆம் திகதியன்று கடலில் இறக்கப்பட்டது. வாழ்க்கையில் இன்றுதான் அது கடலைச் சுவைத்திருக்கும். தான் முன்னெடுக்கப் போகும் வரலாற்றுச் சாதனை பற்றிய பெருமையில் அலைகளின் மீது துள்ளிக் குதித்து ஆட்டம் போடத் தொடங்கியது அது.

மூச்சைப் பிடித்தபடி அவனது தாயும் சகோதரியும் வாழ்த்து அனுப்பி இருந்தார்கள். எந்தச் சக்தியாலும் அவன் எண்ணங்களையும், செயல்களையும் தடுத்துவிடல் இயலாது எனக் கருதிய தாய் வேறு வழியின்றி வாழ்த்தி இருப்பாள். அவனது மனைவியும் குழந்தைகளும் பல்மவுத் ஹோட்டல் விடுதியொன்றில் அன்றிரவு மிகுந்த சோகத்துடன் பிரியாவிடை கொடுக்க வந்திருந்தார்கள்.

அங்கு சந்தித்த பலரும் இவனின் முயற்சியைப் பற்றிக் கேள்விப்பட்டு பரிதாபப் பட்டும், ஆச்சரியம் அடைந்தும், வாழ்த்துக்கள் கூறியும் தமது மனநிலைகளை வெளிப்படுத்தினார்கள். மறுநாள் காலை அவனது குடும்பம் கண்ணீர் மல்க விடை பெற்றுக்கொண்டு இங்கிலாண்ட் திரும்பிவிட்டது.

இறுதி ஏற்பாடுகளில் மிகவும் பரபரப்பாகக் காணப்பட்டான் அவன். இனிக் குடும்பத்தைச் சந்திக்க செப்டெம்பர் மாதம் வரை காத்திருக்க வேண்டுமோ? சந்திக்க வாழ்வில் சந்தர்ப்பம் கிட்டுமோ? என்றெல்லாம் எண்ணினான். அன்பு மனைவியின், ஆசைக் குழந்தைகளின் கொஞ்சலும், கெஞ்சலும் மனதில் நிழலாடாமலா போகும்?

மிகவும் அவஸ்தையுடன் இரண்டொரு நாள்கள் கரையிலே கழிந்தன. இரவு உறக்கம் வருவதில்லை. எனினும் அவன் கொடுத்து வைத்தவன். துணிவுடன் வழியனுப்பி வைக்க இப்படியோர் துணை கிடைத்தாளே என்று மனம் துள்ளிக் குதிக்கும். அலைகள் போல அடிக்கடி மனநிலை மாறும்.

முதல் நாள் இரவினை அவன் படகிலே கழித்தான். படகின் தாலாட்டும் அவனை உறங்க விடவில்லை. இன்று கழிந்தால் இனி உறக்கம் என்பது நிம்மதியாகக் கிடைக்காது என அவன் அறிவான். எனினும் ஏனோ இறுதிச் சந்தர்ப்பத்தைக் கோட்டைவிட்டு விட்டான். குடும்பத்தினருக்கும், நண்பர்களுக்கும், பத்திரிகைக்கும் தனது இறுதிநேரக் கடிதங்களை விடிந்ததும் அனுப்பி வைத்தான்.

அழகாக விடிந்த அந்த ஜூன் முதலாம் திகதியின் இளங்காலையில் துறைமுகம் மிகவும் பரபரப்பாக இருந்தது. காற்று இதமாக இருந்தது. வானம் கருநீலமாகத் தெரிந்தது. பாயை இழுத்து உயர்த்தினான். கட்டுக்களை தளரவிட்டு துறைமுக மேடையுடனான பிணைப்பினை விடுத்தான்.

இதமான காற்று பாயைத் தடவிக் கொடுக்கப் படகு மெதுவாகப் புறப்படத் தொடங்கியது. படகு அசைவது தெரியவில்லை. அது தாளம் போட்டபடி மிதப்பதாகவும் கரை மெது மெதுவாக நழுவிக்கொண்டிருப்பதாகவும் உணர்ந்தான் அவன்.

கிட்டத்தட்ட 10 கடல் மைல் (Knots) வேகத்தை படகு எட்டி இருந்தது. எதிரே தெரிகின்ற கடல் இனிவரும் நாள்கள் அவ்வளவு சுலபமானவை அல்ல என்பதை சொல்லாமல் சொல்லிக் கொண்டிருந்தது. சிறுசிறு தீவுகளான வைன்யார்ட், நொப்ஸ்கா முனை என்பவற்றை கடந்து மாலையானதும் படகு சமுத்திரத்தில் பிரவேசித்தது.

சங்கிலித் தொடர் போல பிரதான அலைகள் படகுடன் மோதும். படகு தாளம் போடும். சங்கீதம் பிறக்கும். காலாட்டில் உறக்கம் போலும் மயக்கம் பிறக்கும். சுக்கானைப் பிடித்தபடி சரியான பாதையில் படகைச் செலுத்தத் தொடங்கினான் அவன்.

உலகம் அவன் கண்களில் இருந்து மெது மெதுவாக விடைபெற்றுக்கொண்டிருந்தது. இருளும் போதாதென்று மெல்லக் கௌவி அணைக்கத் தொடங்கியது. காற்றும் குளிரும் கடலுமே இனி அவன் நண்பர்கள். தரை தென்படாத தொலைவில் அலைகளோடு அலையும் இந்த வாழ்வைத்தானே அவன் கனவு கண்டான்? அனுபவங்கள் இனித்தாலும் கசந்தாலும் உடனடியாகப் பகிர எவருமில்லை. ஒரு பத்திரிகையாளனின் மனம் இதை எப்படிப் பொறுக்கும்? கண்டதும், கேட்டதும், அனுபவித்ததும் உடனே சூடாக எழுதிவிட வேண்டாமா?

கிளாலியில் நூற்றுக்கணக்கான படகுகள் நிற்கும். ஆயிரக்கணக்கில் கூட்டம் மோதும். ஒன்றன்பின் ஒன்றாக படகுகள் புறப்படும். உள்ளே 'பம்பல்' இருக்கும். வழியில் படகுகள் சந்திக்கும். எதிர்த் திசையில் இருந்தும் சேதிகள் கிட்டும். குறுக்கே சங்கிலித் தொடராக சாமான் 'போட்' அணிவரும். இக்கரை வெளிச்சம் மறைய மறுகரை வெளிச்சம் தென்படும். ஆனால் இவன் நிலை......?

இரவில் 'டோர்ச்' அடித்து கூச்சல் போட்டு, ஏனைய படகுகளுடன் மோதாமல் விலகிப் போகும் கிளாலிப் பயணங்கள் இதனுடன் ஒப்பிடக் கூடியவையா?

## இது ஓர் உண்மைச் சம்பவம்

இவன் போகும் பாதை பாரிய கப்பல்களின் போக்குவரத்துப்பாதை என்பது மிகச் சிக்கலான விடயம். இருந்த இடம் தெரியாமல் இவனை இரவில் முட்டி மோதிச் சென்றுவிடுவார்கள். காற்றை நம்பிச் செலுத்தும் இவன் படகு அவர்களின் வேகத்துக்கு ஈடு கொடுத்து விலகி ஓடிச் செல்லல் வேண்டும். கப்பல்களின் பிரதான பாதையைக் கடக்கும்வரை கண் அயராது கவனிக்க வேண்டிய கட்டாயம். விடியும் வரை ஓடினாலும் நியூயோர்க் — லண்டன் கப்பற் பாதையினைக் குறுக்கே கடந்துவிடலாமா என்பது சந்தேகமே. போதாதென்று சென்ற இரவும் அவன் சரிவரத் தூங்கவில்லை. இமைகள்மூடத் துடிக்கும். நிதானம் தடுத்து நிறுத்தும்.

இருளைக் கிழித்துக் கொண்டு கண்கள் எதையோ தேடும். கப்பல்கள் தென்படாத திசையில் படகு பயணம் செய்யும். கடல் நீர் அள்ளிச் சொரியும். கூடவே மின்மினி வைரங்கள் போல நீரில் மிதக்கும் புள்ளிகள் — கடற் பிளாங்ரன் (plankton) உயிரிகள் வழிந்து ஓடும். வாழ்க்கையில் இன்றுதான் இவற்றை இவன் கண்டான். மின்னிடும் வைரங்கள் பதித்த விரிப்பினை கிழித்துக் கொண்டு படகு செல்வது போல இருக்கும்.

விடியல் 2 ஆம் திகதியை எட்டியது. நாற்திசையும் கடல் சூழத் தரையே தென்படாத புதிய உலகில் அவன் பயணம் தொடர்கிறது. எவரும் எதுவும் கண்ணில் படுவதாக இல்லை. மதியம் நெருங்கிக் கொண்டிருந்த போது காற்றுத் தணியத் தொடங்கியது. படகு மிக மந்தமாக அசைந்து நின்றே விட்டது.

இதுதான் சமயம் என்று அவன் 'கபினுக்குள்' புகுந்து உறங்கிப் போகிறான். அலைகள் மெல்லத் தாலாட்ட உலகினை மறந்த உறக்கம் என்ன சுகமோ?

நெருங்கி விலகும் கப்பல்களின் ஓசை கேட்டுத் திடுக்கிட்டு விழித்தான் அவன். நேரமோ 8.30 ஐக் காட்டியது. ஓரிரு மணித்தியாலங்களுக்குமேல் தூங்க முடியாததை இட்டுக் கவலைப்பட்டுக் கொண்டான். வெளியே வந்தபோது கண்ணில் எதுவும் தெரியவில்லை, மூடுபனி எங்கும் வியாபித்து இருந்தது. அருகே செல்லும் கப்பல்களின் ஓசை காதில் விழுந்தாலும் கப்பல்கள் கண்ணில் படுவதாக இல்லை. இன்னும் தான் பிரதான கப்பற் பாதைகளுக்கு அப்பாற் செல்லவில்லை என்பதனையும் ஆபத்தான — அடிக்கடி விபத்துக்கள் நடக்கும்— பிரதேசத்தில் தான் நிலைகொண்டிருப்பதையும் உணர்ந்தான்.

இன்னும் காற்று வீசுவதாக இல்லை. தண்டு வலித்து ஆயினும் நெருங்கி வரும் கப்பல்களில் இருந்து விலகிட வேண்டும் என்ற எண்ணத்தில் துடுப்புகளை எடுத்து ஆயத்தமாக வைத்துக்கொண்டான். சிலமணித்தியாலங்கள் கழிந்து மெல்லக் காற்று வீசத் தொடங்கவும் இருள் கவியத் தொடங்கியது.

'சோ' வென்ற பெரு மழையுடன் மணிக்கு 40 மைல் வேகத்தில் காற்று வீசத் தொடங்கியது. அலைகள் சுமார் 10 அடிவரை எழும்புவது தெரிகிறது. அலைகளில் மிதந்தும் பதிந்தும் படகு பேயாட்டம் போடத் தொடங்கியது. நாளை என்பது நிச்சயம் அற்றது என்ற நிலையில் அன்றன்றே அவ்வப்போதே தனது அனுபவங்களையும் எதிர்கொண்ட விடயங்களையும் தனது டயரியில் குறித்துக்கொண்டான். யாருடைய கையிலாவது இது கிடைக்காமலா போகும்? அப்போது தனது பயணக்கதை எழுதப்படும் என்ற நம்பிக்கை.

நல்ல வேளையாக பாய் மரத்தில் உச்சியில் ஓர் இடிதாங்கியை பொருத்தி அதனிடமிருந்து கனமான செப்புக் கம்பியொன்றினைப் பெற்று படகின் அடியிலே ஒரு தகட்டுடன் இணைத்திருந்தான் அவன். ஆனால் அது எத்தனை கிலோ வோல்ற் மின்சாரத்தை தாங்கும்? அதற்கும் மேலாக இடி இடித்தால் சமுத்திரத்

### மு. சிவநேசன்

தோடு சங்கமம் ஆவதுதான் வழி போலும் என்றெல்லாம் இப்போது மனது எண்ணத் துணிகிறது. கால நிலை அவ்வளவுக்கு சீரற்று இருப்பினும் தனது டயரி மட்டும் மனைவி, மக்கள் மற்றும் பத்திரிகையாளர் கைகளில் கிடைத்துவிடல் வேண்டும் என்ற ஏக்கமே அவனிடம் குடி கொண்டது.

தனது நீண்ட பயணத்தின் ஆரம்பத்திலேயே — இரண்டாவது நாளிலேயே — இத்தனை தடங்கல்கள் ஏற்படலாம் என அவன் நினைக்கவில்லை. இக்கரை ஆரம்பமே இவ்வளவு அவலம் என்றால் நடுவிலே நிலைமை எப்படி ஆகுமோ என்ற எண்ணம் இல்லாமலா போகும்? தனக்கு இக் கடலிலே முடிவு ஏற்படினும் அது பயணம் பாதி வழி கடந்த பின்னே ஏற்படட்டும். இன்றேல் முடிவினிலே ஏற்படட்டும். அதற்கிடையில் நிறைய அனுபவங்களைப் பெற்று எழுதிவிடல் வேண்டும் என்றெல்லாம் அவன் மனம் துடித்திருக்கும்.

மூன்றாம், நான்காம் திகதிகள் ஒரு குழப்பமான பயண அனுபவத்தையே கொடுத்தன, நிலைமைகள் உற்சாகம் தருவனவாக இல்லை, உறக்கத்தை தவிர்க்க வேண்டிய கட்டாயம் எழும்போதெல்லாம் மாத்திரைகளைப் பாவித்து மயக்கத்தோடு களைப்போடும் போரா

(X ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிகரெட் உற்பத்தியாளர்களும், ஏன் புகை பிடிப்பவர்களும்கூட 1997 பிறக்கும்போது யார் முகத்தில் முழித்தார்களோ தெரியாது. ஆனால் 1997 அவர்களுக்கெல்லாம் ஒரு பேரிடியான ஆண்டாகிவிட்டது.

இன்னும் என்னவெல்லாம் நடக்கப்போகிறதோ இவர்களுக்கு எனப் புகைக்காதவர்களே பரிதாபப்படும் அளவுக்கு நிலைமைகள் மோசமடையப் போகின்றன.

உற்பத்தியாளர்களுடன் தொடர்ச்சியான பல பேச்சுவார்த்தைகளையும் — சூடான விவாதங்களையும் — நடத்திவரும் புகைத்தலுக்கு எதிரான அமெரிக்க அரச சட்டத்தரணிகள், வரலாறு காணாத மாபெரும் வெற்றி ஒன்றைப் பெற்றிருக்கின்றார்கள்.

கடந்த மாதம் வாஷிங்டனில் பேச்சுவார்த்தைகள் நடந்துகொண்டிருந்த ஹோட்டலில் எவருக்குமே புகைக்கத் துணிவு வரவில்லை. பிரபல அமெரிக்க கொம்பனிகளின் சார்பில் கலந்து கொண்டவர்களின் முகத்தில் ஈயாடவில்லை; சட்டத்தரணிகளின் வாதங்களை இவர்களால் உடைக்க முடியவில்லை.

முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடிக்க விவாதத்தை ஆரம்பித்த உற்பத்தியாளர்கள் ஈற்றில் சிகரெட்டினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களுக்கான மருத்துவச் செலவுகளுக்கென 36 ஆயிரத்து 800 கோடி அமெரிக்க டொலர்களை ஒதுக்கித் தருவதற்கு உடன்பட்டிருக்கிறார்கள்.

அத்துடன் விட்டார்களா சட்டத்தரணிகள்? இனிமேல் சிகரெட்டுக்களுக்கு உற்பத்தியாளர்கள் பெருமெடுப்பிலான விளம்பரங்களைச் செய்ய இயலாது; படங்கள் எதனையும் பயன்படுத்த முடியாது; விளையாட்டு நிகழ்ச்சிகள் — போட்டிகளை — 'ஸ்பொன்சர்' செய்ய முடியாது — என்றெல்லாம் பலத்த கட்டுப்பாடுகளுக்கு ஒப்புதல் வாங்கிவிட்டார்கள்.

இனிமேல் அமெரிக்காவில் நாணயத்தைப் புகுத்தி சிகரெட்டை இழுத்து எடுக்க — தானியங்கு இயந்திரங்கள் இருக்கா. சிகரெட் பெட்டிகளில் படங்களுக்குப் பதிலாக கொட்டை எழுத்துக்களில் எச்சரிக்கைகள் தான் புலப்படும். புகைத்தலுக்கு எதிரான பிரசுரங்களுக்குப் பெருமளவு நிதியை இவ்வுற்பத்தியாளர்கள் செலவிட வேண்டி இருக்கும். இவர்களின் உற்பத்திகள் 2007 ஆம் ஆண்டளவில் 60 வீதம் வீழ்ச்சி கண்டிடல் வேண்டும்.

## புகைத்தலை கண்டிப்பதற்கும் எதிர்ப்பு

அமெரிக்காவால் இந்தக் கட்டுப்பாடுகளைச் சீரணிக்க இயலுமா?

புகைத்தல் பற்றிய கட்டுரையொன்று எழுதியதற்காகவே நண்பர்கள் பலரிடமும் செமத்தியாக வாங்கிக் கட்டிய அனுபவமும் உண்டு.

''இதை மனுசி வாசித்து விட்டால் இனி வீட்டுப்பக்கம் சிகரெட்டை நினைக்கவே முடியாது. ஏனடா குடும்பத்தைப் பிரிக்கிற வேலை உனக்கு?''

''இதிலை நாங்கள் உழைக்கிற இருபத்தைந்து சத யாவாரத்தை ஏன் கெடுக்க நினைக்கிறியள்?''

''இவர் என்ன பெரிய சுத்தமா எழுதுறார். முன் அனுபவம் எழுத்திலை தெரியுது''

''என்ர பிள்ளையடை வருத்தத்துக்குக் காரணம் இப்பதான் புரியுது. இனி இவர் வரட்டும்''

''வெத்திலை போடுறதுக்கும் இப்படியொரு கட்டுரை எழுதுங்கோ''

— இப்படிப் பல,

கொஞ்சம் வரவேற்புகள், உற்சாகங்களுக்கும் குறைவில்லை. இம்முறை இவர்களின் வசைகளும், வாழ்த்துக்களும் அமெரிக்க அரச சட்டத்தரணிகளுக்கே சமர்ப்பணம்.

பேச்சுவார்த்தைகளின் ஆரம்ப கட்டங்களில் இவர்களால் வெற்றிகளைப் பெரிதாக எட்ட முடியவில்லை. இந்த வருடம் மார்ச் மாதத்தில் நடைபெற்ற பேச்சுக்கள் கூட பெரிதாகப் பலன் அளிக்கவில்லை. ஆனால் ஜூன் மாதம் பேச்சுக்களில் திருப்பம் தென்படத் தொடங்கியதும் — நிலை எடுத்துக்கொண்டு திரும்பத் திரும்பத் தாக்கி வெற்றி மேல் வெற்றிகளைக் குவித்துக் கொண்டனர் சட்டத்தரணிகள்.

சிகரெட் விற்பனை வரிகளால் கிடைக்கும் வருமானத்தைத் தோற்கடிக்கும் வகையில் மருத்துவ உதவித் தொகைகளைப் பெருமளவில் வாரி வழங்க வேண்டிய நிலையில் உற்பத்தியாளர்கள் தவிக்கும்போது — விளம்பரத்துறை, மொடல் அழகன் — அழகிகள், ஓவியர்கள் மட்டுமா; விளையாட்டுத் துறைகளும் கூடத் தவிக்கத்தான் போகின்றன.

சிறுவர்களுக்கு எட்டாத வகையில் விலைகளை உயர்த்திவிடும் திட்டங்களும் இதற்குள் அடக்கம் என்றால் மற்றவர்களுக்கு இதன் உயரம் எட்டுமா? என்பதே கேள்வி.

## பணம் ஒரு பொருட்டல்ல

ஒரு சுவாரசியமான கதை......

ஒரு ரயிலில் ஜன்னலருகே இருந்தபடி ஒருவர் ஓயாமல் புகைத்தபடியே பயணிக்கிறார். அருகில் இருந்தவர் மிகப்பாவம். எண்ணிக் கொண்டேவருகிறார். தாங்காமல் கேட்டுவிட்டார்.

''ஒரு நாளைக்குஎத்தனை 'பக்கெட்' புகைப்பீர்கள்? எத்தனை வருடமாகப் புகைக்கிறீர்கள்?''

கணக்குப் பார்க்கிறது மனம். ஜன்னல் வழியே வெளியே தெரிகிற ஒரு பல மாடிக் கட்டடத்தை காட்டி ''இந்தப் பணத்துக்கு அப்படி ஒன்றை வாங்கி இருக்கலாமே? ஏன் வீணடிக்கிறீர்கள்?'' — என்றார் அந்த அப்பாவி.

''அது என்னோடை கட்டடந்தான்'' — என்று பதிலளித்தார் புகைப்பவர்.

இவர் பரிதாபமாகப் பார்த்தார்.

ஆம்! புகைப்பவர்கள் எங்கே பணத்தைப் புரட்டுகிறார்களோ என அதிசயித்தால்— அதைவிட அதிசயம் புகைக்காதவர்கள் அவ்வளவு மிச்சம் பிடித்தும் ஏன் வறுமையில் தவிக்கிறார்கள் என்பது தான்.

இன்று நேற்றல்ல. சில நூற்றாண்டுகளாவே இந்தப் புகைக்கும் பழக்கம் வளர்ச்சி கண்டு வந்திருக்கிறது. இது ஒரு போலியான மனத்தெம்பை தரவல்லது. அத்துடன் இன்றைய விளம்பர உத்திகள் உச்சம் அடைந்த நிலையில் புகைப்பது ஒரு சமூக அந்தஸ்து என்ற மாயை பலரின் மனதிலும் உருவாகி வருகிறது.

புகைப்பவரின் குரல் கரகரப்பாக இருப்பது பலரையும் கவர்ந்து இழுக்கிறது. உதடுகளில் சிகரெட்டை கவ்வியபடி கதைக்கும் போது அவர் 'மல்பரோ' மனிதர் ஆகிவிடுகிறார். சுருள் சுருளாகப் புறப்பட்டுக் கலையும் புகையின் அழகுக் கோலங்கள் பலரையும் கவர்கின்றன.

ரஜனி 'ஸ்டைலில்' சிகரெட்டை வீசி வாயால் கௌவிப் பிடிப்பதும் அழகு தான். ஆனால் புகைப்பவரின் இருமலோ கத்தி போல வந்து காதைத் துளைக்கிறது, இதயத்தை கருக்குக் கொண்டு அறுக்கிறது. இதைப் பற்றி எல்லாம் அடுத்தவர்கள் தான் கவலைப் படுகிறார்கள்.

## அரசுகளுக்கு கைகொடுக்கும் சிகரெட்

காலத்துக்கு காலம் அரசுகள் நிதிநெருக்கடியை சந்திக்கும் போதெல்லாம் இந்த சிகரெட்டுகளே கைகொடுத்து வந்திருக்கின்றன. இதன் விலை ஏறஏற புகைப்பவரின் வீதம் சற்றேனும் குறையாமல் வருமானம் அவ்வேற்றத்துக்கு ஏற்பவே அதிகரித்து வந்திருக்கின்றது.



உயிரை எரிக்கும் சிகரெட்.

ஆனால் புகைத்தலின் நீண்டகால விளைவுகளால் — முற்பகல் செய்த பாவங்களை பிற்பகல் தன்னில் அனுபவிக்கும் நிலையில் — சமாளிக்க முடியாத அளவுக்கு மருத்துவச் செலவுகள் வளர்ந்து விட்டதை அரசுகள் உணரத்தொடங்கி விட்டன.

புகைத்தலையும் புகையிலையினையும் உலகுக்கு அறிமுகப் படுத்திய பாவத்தில் கணிசமான பங்கு அமெரிக்க மண்ணையே சாரும். புகைப்பழக்கத்தில் இன்று உலகம் படுகின்ற அவஸ்தை கொஞ்ச நஞ்சமல்ல.

ஆனால் இன்று அமெரிக்கா எடுத்திருக்கும் முன்மாதிரியான நடவடிக்கைகள் நாளை ஏனைய நாடுகளிலும் எடுபடத் தான் போகிறது. இது ஒரு பிராயச்சித்தமா?

தற்போது அமெரிக்காவில் நிறைவேற்றப்படும் சட்டங்கள் உள்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டாலும், நாட்டுக்கு வெளியே இக் கம்பனிகளைக் கட்டுப்படுத்த அவை உதவா.எனவே ஏனைய நாடுகளில் விளம்பரங்களுக்கும், கவர்ச்சிக்கும் குறைவு ஏற்படப் போவதில்லை. இனி எத்தனை நாடுகள் அமெரிக்காவை பின்பற்றி இத்துறை மீது கடுமையான சுமைகளைத் தரப்போகின்றன என்பதே அடுத்த கேள்வி.

இவ்வளவு காலமும் புகைத்தலை எதிர்ப்பவர்கள் எல்லாம் தனித்தே நின்று போராடி இருக்கிறார்கள். இவர்களுக்கு வீட்டிலும் சரி, கோட்டிலும் சரி நியாயம் கிடைக்கவில்லை.

புகைத்தலினால் பாதிக்கப்பட்ட பலரும் அந்தக் கம்பனிகள் மீது பல லட்சம் டொலர்கள் நஷ்ட ஈடு கேட்டு வழக்குகளை தாக்கல் செய்யத் தொடங்கியதும் சட்டம் விழித்துக் கொண்டது.

## போட்டி போடும் கம்பனிகள்

ஓர் உணவுப் பொதியில், உள்ளே உள்ள உணவில் பயன்படுத்தப்படும் மூலப் பொருள்கள் பற்றிய தகவல்கள் பெட்டியிலே தரப்படல் வேண்டும் என எதிர் பார்க்கும் சட்டத்துறை, ஏன் இவ்வளவு காலமும் சிகரெட் பெட்டிகளின்மேல் [illegible] றிய தகவல்களை எதிர் பார்க்கவில்லை?

இதன் விளைவு......

புகைப்பவர்களைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் ஒன்றோடு ஒன்று போட்டி போட்டுக்கொண்டு உற்பத்தியாளர் பலவித தீங்கு விளைக்கும் பதார்த்தங்களை சிகரெட்டில் சேர்த்துக் கொண்டார்கள். இவர்கள் சேர்த்துக் கொண்ட பொருள்களின் பட்டியலைப் பார்த்தால் ஆராய்ச்சியாளர்களுக்கே மயக்கம் வருகிறது.

கம்பனிகள் தனித்து புகையிலையுடன் மட்டும் நின்று விடாமல் புகையின் மணம், தரம், காரம் என்பவற்றை அதிகரிக்கும் நோக்குடன் கரமல், இன்வேட் சுகர், கியூஜினோல், குவாக்கோல், லிக்கோறைஸ், கொக்கோ போன்ற பல பொருள்களையும் போதை அலகுகளையும் சிகரெட்டில் பயன்படுத்தத் தொடங்கிவிட்டன.

இவை எரியும் போது புகையின் தரம் அதிகரித்தாலும் கருகி எரியாத இவற்றின் பாகங்கள் சுவாசப் பையினுள் சென்று படிந்து விடுகின்றன. இந்த நிரந்தரப் படிவுகள் வாழ்க்கைப் போராட்டத்துக்கே வழி கோலும்.

பதினாறாம் நூற்றாண்டின் ஆரம்பத்திலே அமெரிக்காவுக்குள் வந்த அந்நியர்களை அங்கிருந்த புகையிலையும் சுங்கான் புகைக்கும் வழக்கமும் கவர்ந்து கொண்டன. 1558இல் இந்தப் புகையிலையைச் செடி (Nicotiana Tobaccum) இங்கிலாந்துக்குக் கொண்டு வரப்பட்டது. இது மருத்துவ தேவைகளுக்கும் பயன்படுத்தப்பட்டது.

சுங்கானைத் தவிர மூக்குத் தூள் வடிவத்திலும் புகையிலை பயன்படுத்தத் தொடங்கப்பட்டது.1650ஐ அண்டிய காலப்பகுதியில் ஸ்பெயினில்தான் முதன் முதலில் சிகரெட்டுக்கள் தயாரிக்கப்பட்டன. இலங்கையிலும் டச்சுக்காரர்ஆட்சிக்காலத்தில் புகையிலை புகுத்தப்பட்டு ஆங்கிலேயர் ஆட்சியில் அந்த வியாபாரம் விருத்தி கண்டது.

புகையிலை உற்பத்தியும் வியாபாரமும் பீடி, சுருட்டு உற்பத்தி போன்ற கிராமிய மட்டக் கைத்தொழில்களும் மிகவும் இலாபகரமாகஇருந்ததால் இங்கும் அவை விருத்திகண்டன. காலப் போக்கில் நுட்பங்கள் செறிந்த சிகரெட்டுக்கள் புகுத்தப்பட்ட போது சுருட்டு, பீடி, சுங்கான் போன்றவை சற்றுப் பின்னடைவைச் சந்திக்கத் தொடங்கின.

## நச்சுத் தன்மை குறித்து ஆய்வு

கம்பனிகள் சிகரெட்டுக்களை உற்பத்தியாக்கிக்

சிறப்புக் கட்டுரை

கொண்டிருக்கும் போதெல்லாம் மருத்துவ இரசாயன ஆய்வு கூடங்கள் அவற்றின் புகையில் காணப்பட்ட நச்சுத்தன்மைகளை ஆராய்ந்து வந்திருக்கின்றன.

புகைத்தலில் மூலம் ஒரு சிறு நன்மைகூட உடலுக்குக் கிடைப்பதில்லை. ஒரு முறை உள் இழுப்பதே உயிருக்கு உலைவைக்க அத்திவாரம் இட்டு விடலாமென மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள்.

புகைத்தலுக்கு எதிரான கருத்துக்கள்கவர்ச்சியற்ற— சுவாரசியமில்லாத— முறையில் வெறும் போதனைகளாக மட்டுமேவெளிவந்தமையே அவை எடுபடாமற் போனமைக்குரிய முக்கிய காரணம் எனலாம்.

புகைப்பவரின் கோணத்தில் நின்று பார்த்தால் புகைத்தலைத் தூண்டும் விளம்பரக் கவர்ச்சி,புகைத்தல் மனப்பான்மை, புகை இன்பம் எல்லாம் எவ்வளவோ மேலானதாகவே தெரிகின்றன. மேலும் கம்பனிகள் பணபலம், அரசியல் பக்கபலம், அரசுகளுக்கு அவர்கள் ஈட்டித் தரும் வருமானம், உலகளாவிய ரீதியில் அவர்கள் நடத்தும் உலகக்கிண்ண விளையாட்டுப் போட்டிகள், விளம்பரங்களில் பயன்படுத்தும் உலக மாடல்கள் என்பன மருத்துவ ஆய்வாளர்களின் உண்மைக் கருத்துக்களைத் தலையெடுக்க விடுவதில்லை.

## பற்றிப் பிடிக்கும் பழக்கம்

பலவிதமான கவர்ச்சி அம்சங்களின் தாக்கத்தாலோ—அடுத்தவர்புகைப்பதை ரசித்த பழக்கத்தாலோ — முதன் முதலில் சிகரெட்டை ஒளித்துப்பிடிப்பவர் இந்தப் புகைபழக்கப் படாமல் இருப்பதனால் திணறுகிறார் கச்சல், கடதாசி எரியும் மணம், சுவை, தொண்டைகட்டி புரக்கேறி மூச்சுத்திணறி இருமல் எடுக்கும் தன்மை எல்லாம் வெறுக்க வைக்கும்.

ஓர் இழுப்புடன் போதும் என்றாகி, வீச நினைப்பவர், வீணாகிவிடும் என்று மீண்டும் ஒரு முறை இழுத்துப்பார்ப்பார். இம் முறை சற்றுச் சுலபமாக சுவாசத்




தொகுதி வழிவிடும். இப்படியே பழகி சுடுகாடுவரை தொடரும் சிகரெட் இறுதியில் கொள்ளிவைக்க வழி கோலும்.

புகையிலையில் நிக்கொட்டீன் என்ற அல்க்கலோயிட் (Alkaloid) போதை அலகுகள்காணப்படுகின்றன. இது $C_{10}H_{14}N_2$என்ற இரசாயனக் குறியீடு கொண்ட ஒரு முதல் தர நஞ்சு எனலாம். தனித்துப் பிரித்து எடுக்கப்பட்ட ஒருதுளி நிக்கொட்டீனை பிறபோதைப்பொருள்களைப்போல் ஊசியால் உடலில் ஏற்றினால் அவ்விடத்திலேயே ஆள் காலி. சயனைட் உண்டவர் போல் இவர் துடித்து மடிவார்.

சாதாரணமாக ஒருவரின் உடற்சக்தி மட்டம்சீராகவே இருக்கும். புகைக்கும் போது நிக்கொட்டீன் சுவாசத்தொகுதியின்ஊடாக குருதியுடன் சங்கமித்து விடுகிறது. மறுகணமே இது ஓர் இரசாயன அதிர்வை உடலில் ஏற்படுத்தி, நரம்புகளை தூண்டிவிடும். உடனே பிறக்கும் தெம்பு ஒரு மனத்திருப்தியைத் தரும்.

பானையிலே இருப்பது தான் அகப்பையிலே வருவது போல — உடலிலிருந்த சத்தி வெளிப்பட்டு ஆள் ஓய்ந்தபின் உடல் சோரத் தானே செய்யும்? மீண்டும் மீண்டும் புகைத்தால் உடலில் சக்தி மட்டம் மேலும் மேலும் குறையும். புகைக்காதபோது சோர்வும் அதிகரிக்கும். வழமையான செயல்களுக்கே கையில் சிகரெட் வேண்டும் என்ற அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்து விடும்.

காலில் ஒரு முள்ளுத்தைத்தால், கண்ணில் ஒரு தூசி துணிக்கை பட்டுவிட்டால் வேதனைதான் இல்லாத போதும் அதை எடுக்

காமல் திரிய ...
தருவதில்லை....
இழந்துதவித்த...
ஆனால் சிக...
புகைத்து இர...
சாயனங்களை...
வேடிக்கை பா...
தயக்கம் வருவ...

## இருமலும் ...

சுவாசப்பை...
ணிய நுரை...
லாயிரம் கா...
ளைக் கொண்...
யுள்ள ஈரவி...
கள் ஊடாக...
ஒட்சிசனைப்...
கொள்கிறது.
றுடன் புகும்...
கைகளையே ...
சத்தொருதி...
கிறது. இதனா...
மல், தும்மல்,...
பன இயற்...
படுகின்றன. ...
செயற்பாடுகள்...
எவு துப்பு...
சுவாசப்பையி...
காரணமாகப்...
றும் தூசிகள்,...
அல்லது தார்,...
அரைகுறையா...
பதார்த்தங்கள்...
சுமையைத்...
எனவே இரும...
கிறார் புகைப்...
இந்த மேலதி...
பலு காரணம...
(wheezing) ஏ...

வறண்டு த...
வாய்ப்புகள் உ...
கடுமையாகப்...
சுவாசப்பையின்...
றுக்கு 50 கிரா...
றப்படாமல் வி...
இதனால் த...
மிதக்கும் கரித்...
பையை ...
போலாக்கி...
இருமல் வலுக...
விளக்குச் சி...
பிடிக்கப் பிடிக்...
வதுபோல ச...



உடல...

இவை பயுவற...
சிசன் பரிமாற்...
படுகிறது. உட...
திற்கு தேவை...
சனை வழங்க...
சுவாசப்பை ...
போது புகையி...
நிக்கொட்டீன்,...
ஒட்சைட், ...
சைட், ஐதரச...
என்பன இலகு...
றுத்து இரத்தத்...
விடுகின்றன. ...
இரத்தத்தம் ...
கிறது.

இதயத் ...
இரத்தை வழங்...
யில் தசைச் ...
ஏற்படுத்த வ...
கொட்டீன்.உட...
கும் இரத்தத...
ணும் இதயத்...
கும் இரத்த...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னம் இடம்
தோ நிம்மதி
விடுகிறோம்.
ரட்டைப்
த்தத்தில் இர
கலக்கவிட்டு
ர்க்க மட்டும்
தில்லை.

## இழுப்பும்

யா மிக நுண்
பான்ற பல்
ற்றுப் பைக
டது. இங்கே
ப்பான சுவர்
வே இரத்தம்
பெற்றுக்
தினமும் காற்
தூசி துணிக்
அகற்ற சுவா
திண்டாடு
லேதான் தடி
இருமல் என்
கயாக ஏற்
இவ்வியற்கைச்
மூலம் ஒர
வாக்கப்படும்
புகைத்தல்
போய் படிவு
கரி, காபன்
மேலும் பல
க எரிந்த
மேலதிக
தருகின்றன.
த் தொடங்கு
பவர்.
திக வேலைப்
ாக இழுப்பு
ற்படவும் சளி

இதனால் மட்டுப்படுத்தப் படுகிறது என்றால்நிலைமை என்னாகும்?

## புற்றுநோய்

இதனால் இரத்த அழுத்தம், மாரடைப்பு, சுவாசச் சிக்கல்கள் காரணமான Emphysema போன்ற பல நோய்கள் ஏற்படுகின்றன. தவிர, ஆண்டுதோறும் சுமார் 15லட்சம் பேர் நுரையீரல் புற்று நோய்க்கு ஆளாவது கண்டுபிடிக்கப் படுகிறது இத்தொகை 2000 ஆம் ஆண்டளவில் 20 லட்சத்தை எட்டிவிடும்.

உலகெங்கும் சுமார் 25 கோடிக்கும் குறையாத எண்ணிக்கையினர் கடுமையான சிகரெட் பாவனையில் சிக்கித் தவிக்கிறார்கள். ஆண்டு ஒன்றுக்கு ஆகக் குறைந்தது பத்து லட்சம் பேர் இதனால் மரணத்தைத் தழுவுகிறார்கள். மணிக்கு ஒரு பயணிகள் விமான விபத்து இடம் பெறுதலுக்கு இதனை ஒப்பிடலாம்.

## உயிர்கொல்லி யுத்தம்

இயற்கையின் சீற்றத்தாலும் யுத்தத்தின் கொடூரத்தாலும் பெருமளவு மக்கள் கொல்லப்படும்போது எழும் அனுதாப அலை — அரசியல் கூச்சல்கள் — கொஞ்சநஞ்சமல்ல. அதை தஸ்துக் கருதிச் சிகரெட்டையே புகைக்கிறார்கள். இதனால் இவர்களுக்கு இளமை எட்டுவது போன்ற பிரமை கிடைக்கிறது.

சிகரெட்டில்அதன் பில்டர்கள் புகைய வடித்து விட்டாலும் — அவை ஆழ்ந்து இழுக்க வைக்கின்றன. இதைப்போல பீடி, சுருட்டு புகைகளை ஆழ இழுக்க இயலுவதில்லை. தவிர சிகரெட்டில் பயன்படுத்தப் படும் செயற்கை வாசனைகள் அதிகமாக பீடி சுருட்டில் புகுத்தப்படுவதில்லை. எனவே அங்கு வெறும் நிக்கொட்டீன் மாத்திரமே பாதகமான விளைவுகளை தடுக்கிறது.

## பில்டரும் பயனும்

பலவகை பில்டர்கள் (Filter) புகைப்பவரை பாதுகாக்கும் நோக்கத்துடன் அறிமுகம் செய்யப்பட்டாலும் அவற்றின் செயற்பாடுகள் புகை இன்பத்தை குறைத்து விடுகின்றன எனப் பலரும் குறை கூறுகிறார்கள். எனவே திருப்திப்படுத்தும் தன்மை கொண்ட பில்டர்களையே — சிகரெட் வகைகளையே— பலரும் நாடுகிறார்கள்.

பில்டர்கள் புகைப்பவர்களையே பாதுகாக்க முனைகின்றன. அருகில் இருப்பவர்களின் மூக்கிலே பில்டர்

# ...கைத்தலுக்கு ...வுமணி!

டிப்படையவும்
உருவாகின்றன.
புகைப்பவரின்
ல் ஆண்டொன்
ாம் கரி அகற்
விடப்படுகிறது.
தடித்த சளியில்
த்துள் சுவாசப்
சாக்கடை
விடுகிறது;
க்கிறது.
சிமினியில் கரிப்
க்க ஒளி மங்கு
சுவாசப்பையில்

விடப் பெருமெடுப்பில்தான் நிக்கொட்டீன் உயிர்களை காவு கொண்டு வருகிறது. உலகளாவிய ரீதியில் அரசுகளுக்கு ஆதாயம் தரும் வகையில் அங்கீகரிக்கப்பட்ட ஓர் உயிர்கொல்லி யுத்தமே இது.

இதன் தாக்கத்தால் இறப்பவர்களின் பலவியாதிகள் கண்டுபிடிக்கப்படுவதே இல்லை; உரிய சிகிச்சைகள் எல்லா இடங்களிலும் வாய்ப்பதும் இல்லை; இறப்



...லையும் சேர்த்து எரிக்கும் சிகரெட்

படிவுற ஒட்
ற்றம் தடைப்
டல் இயக்கத்
யான ஒட்சி
க முடியாமல்
திண்டாடும்
பில் இருக்கும்
, காபனோர்
நதரசன் ஒட்
சன் சயனைட்
குவாக ஊட
த்தில் கலந்து
சளியுடன்
வெளிப்படு

தசைகளுக்கு
ங்கும் நாடி
சுருக்கத்தை
வல்லது நிக்
டல் முழுவதற்
த 'பம்' பண்
துக்கு கிடைக்
விநியோகம்

பினதும் நோயினதும் விவரங்கள் சரிவரக் கிடைப்பதும் இல்லை. எனவே சத்தமின்றிக் கொல்லும் நிக்கொட்டீன் யுத்தத்தின் கொடூரத்தை விளக்க உலகளாவிய ரீதியில் சரியான புள்ளி விவரங்களைப் பெறுதல் மிகக் கடினமே.

பராயமடையும் வயதில்— எதையும் சாதிக்கத் துடிப்பவர்களின் கையில் சிகரெட்டை புகுத்தி விடுகின்றன நவீன விளம்பரங்கள். இதனால் ஒரு முதிர்ச்சியும் — வளர்ச்சியும் — கவர்ச்சியும் ஏற்பட்டு விடுவதாக அவர்கள் கற்பனை செய்கிறார்கள். வயதானவர்கள் கூட இதற்கு விதி விலக்கு அல்ல. வீட்டில் பீடியோ சுருட்டோ பற்றுகிறவர்கள் கூட பலர் முன்பாக அந்

கிடையாது என்ற உண்மை புகைப்பவர்களின் மூளையில் உறைப்பதில்லை. அவர்களின் கையில் இருக்கும் சிகரெட்டில் இருந்து கிளம்பும் புகையினை நேரடியாகச் சுவாசிப்பவர்கள் அவர்களைவிட அதிகம் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள்.

இவ்வாறான பாதிப்புகளுக்கு அதிகம் உள்ளாகுபவர்கள் யார்? புகைப்பவர்களுடன் அதிக நேரம் அருகில் இருந்து பழகும் அவர்களின் அன்புக்குரியவர்களுக்கே இந்தப் பாக்கியம் கிடைக்கிறது.

புகைக்கும் கணவன் தன் மனைவிக்கும், குழந்தைகளுக்கும், மனைவியின் கருவில் இருக்கும் சிசுவுக்கும் பில்டரால் வடிகட்டப்படாத புகையைக்கொடுத்து மாபெரும் துரோகம் செய்கிறான். உடல்நிலைக்கேற்ப ஒரு சிறு அளவு புகையே நோயைத் தூண்டிவிடக் கூடிய சிலருக்கு தொடர்ந்து இந்தப் புகை வாசம் கிட்டுகிறதே! இப்படிச் செய்பவர்கள் தாமும் பில்டரை பிடுங்கிவிட்டுப் புகைத்தால் — தன்னைப் போல் மற்றவர்களையும் நேசித்தவர்கள் ஆவார்கள்.

தொழில் இடங்களில் தொடர்ந்து புகைப்பவர்களுக்கு அருகில் இருந்து நீண்டகாலம் கடமை புரிபவர்களும் துர் அதிர்ஷ்டசாலிகளே, யாரோ இன்பம் அனுபவிக்க யாரோ நோயை வாங்கும் இத் தன்மையை Passive Smoking என்று மருத்துவ உலகம் விவரித்துக்கொண்டிருக்கிறது. இதுதான் அயலவருக்குச்செய்யும் துரோகம்.

மூடப்பட்ட [illegible], திரை அரங்[illegible] ஙங்களில் புகைப்பவர்கள் அடுத்தவர்களை மிகவும்

எரிச்சல் ஊட்டுகிறார்கள். இவர்கள் மீறும் மனித உரிமைகள் பற்றி எவருமே கவலைப்படுவதில்லை. தனது பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு பூட்டிய ஜன்னல்களின் உள்ளே காரில் புகைக்கும் வழக்கமுடைய மேற்குத்தேச தாயும் தகப்பனும் செய்த துரோகம்



'டீன் - ஏஜ்' பருவத்திலேயே சிகரெட் பற்றி விடுகின்றது.

பற்றி புற்றுநோயால் மடிந்துகொண்டிருக்கும் ஒரு பிள்ளை, கண்ணீர் மல்க எழுதிய வரலாறு உலகில் பலரது கவனத்தையும் ஈர்த்து இருந்தது. தூரத்து வரலாறுகள் துக்கமானவை தான். கண்முன்னே எதுவுமே ஸீரியசாகத் தெரிவதில்லை.

அமெரிக்காவில் ஆரம்பித்த புகைத்தல் அங்கேயே முடிவுக்கு வரலாம். அதற்குப் பல ஆண்டுகள் பிடிக்கலாம். அதற்கிடையில் விளம்பரம் அற்ற — கவர்ச்சி அற்ற — பிரசாரங்களுக்கு எதிரான — ஒரு சந்தைப்படுத்தல் உத்தியை அக் கம்பனிகள் மக்களிடையே பிரபல்யம் ஆக்கிவிடும்; போதைப் பொருள்கள் போலக் களவாக என்றாலும் சிகரெட் புறப்பட்டுவிடும்.

அமெரிக்கச் சட்டங்கள் உலகின் சட்டங்கள் ஆகா. எனவே ஏனைய நாடுகளில் அமெரிக்க கம்பனிகளே இவ்வியாபாரத்தை முடுக்கி விடலாம். உலக அரசுகள் தமது பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தோடு போராடும் போதெல்லாம் கைகொடுக்கும் சிகரெட் வரி வருமானத்தைக் கைவிடத் தயாரில்லை. சிகரெட்டைக் கட்டுப்படுத்து

**- மு. சிவநேசன் -**

வதால் மருத்துவச் செலவினங்களைக் குறைக்கலாம், என்றாலும் கூட அதற்கு அதிக காலம்பிடிக்கும். அதுவரைபட்ஜெட்டைசமாளிக்க வேண்டுமே!

## அரசுகளை நம்பி பயனில்லை!

எனவே இப்பிரச்சினைகளை சுமாளிக்க அரசுகளை நம்பியிருப்பது பயன் தாரது. அதிர்ஷ்டவசமாக எமது பிரதேசங்களில் பெண்கள், சிறுவர்கள் புகைப்பது மிகவும் குறைவு. எனவே இவர்கள் சமானவழி முறைகளையோ மனமாற்றம் ஏற்படுத்தும் போக்குகளையோ பயன்படுத்தித் தமது சூழலில் புகைப்பவர்களை மாற்றி விடலாம்.

புகைத்தல் ஒரு சமூதாயச் சீர்கேடு என்ற பிரசாரம் தலையெடுக்குமானால் — புகைப்பவர் மனதில் இத்தகவல்உறைக்குமானால் — அவர் மனச்சாட்சி அடுத்தவரை நேசிக்குமானால் — அவர் மெல்ல இதிலிருந்து ஒதுங்கவே நினைப்பார்.

திடீரென புகைத்தலை கைவிட இயலாது. அது சுலபமான காரியம் அல்ல. அந்த மனோபக்குவம் வருமளவுக்கு எல்லோரும் ஞானிகள் அல்லர். எனவே புகைக்கும் சிகரெட்டின் நீளத்தைத் துண்டித்தோ, புகைக்கும் [illegible] [illegible]தோ [illegible] இதனைத் தவிர்க்கப் பழகிக் கொள்ளலாம்.

புகைப்பவர்களின் மீது சமுதாயத்தின் பார்வை கடுமையாகவும், கண்டிப்பாகவும் இருந்தால் இவர்களைத் திருத்திவிடலாம் அல்லது ஒதுக்கி விடலாம் எனவும் ஒரு சாரார் வாதிட்டு வருகிறார்கள். ஆனால் புகைத்தலைத் தடுக்கும் அறிவுறுத்தல்களைத் தொங்க விடுதலும், மென் போக்குகள் மூலம் அவர்களை மாற்ற முயலுதலுமே சிறந்தது எனவும் கருதப்படுகிறது.

''மனிதர்கள் தவிர ஏனையோர் (விலங்குகள்) இங்கு புகைக்கலாம்'' என்ற ஓர் வாசகம் புகைப்பவர்கள் பலரையும் சங்கடத்துக்குள்ளாக்கியதாகவும் —

அவ்விடத்தில் எவரும் புகைக்க வில்லை எனவும்— எங்கோ வாசித்த ஞாபகம்.

ஒரு வீட்டிற்கு வந்த விருந்தினர் ஒருவர் பேசிக் கொண்டிருந்தார். அவர் கையில் சிகரெட் புகைந்து கொண்டிருந்ததும் இடைக்கிடை அதை அவர் வாயில் வைத்து இழுப்பதும் அந்த வீட்டுக் குழந்தைக்கு வேடிக்கையாக இருந்து.

தொடர்ந்து கதை நீளவே குழந்தைக்கு போரடித்ததும் ''மாமா அதை ... அதை... வாயில வச்சிட்டு கதையுங்கோ'' என்று அந்தரப்பட்டது குழந்தை.

வந்தவர் திகைத்துப் போனார். யாரும் கவலைப்படாத சம்பவம் குழந்தையின் மனதில் பதிந்து விட்டதே. பின்பு அந்தக் குழந்தை அடுக்களையில் கடதாசிச் சுருளை பற்ற வைக்க முற்பட்டு தீக்காயங்களுக்கு ஆளானதாகக் கேள்வி.

## விபத்துக்கள்

புகைப்பவர்களின் கவனக் குறைவால் ஏற்படும் தீ விபத்துக்கள் ஆகக் குறைந்தது ஆண்டுக்கு இரண்டாயிரம் பேரைப் பலிகொண்டு வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அலுவலகங்களில் குப்பைக்கூடைக்குள் போடப்படும் பில்டர்களும் வீசப்படும் மெழுகு பூசப்பட்ட தீக்குச்சிகளும் அலுவலகங்கள் பூட்டப்பட்ட பின்னரே பெரும் தீயாக வளர்ந்து பேரழிவுகளை ஏற்படுத்திவந்திருக்கின்றன.

புகைத்தல் பழக்கம் பல சிறந்த நண்பர்களை உருவாக்கும் எனப்பலரும் கருதிவிடுகிறார்கள். அடுத்தவர்களுக்கு உதவி செய்தலில் பின் நிற்பவர்கள் கூட சிகரெட் பக்கெட்டை எடுத்து நீட்டும் போது வள்ளலாக தெரிகிறார்கள். இதற்கு இவர்கள் செலவுக்கணக்குப் பார்ப்பதில்லை.

புகையிலைப் பயிர்ச் செய்கையில் இருந்து புகைப் பொருள் விற்பனை வரையிலும் பெருலாபம் ஈட்டும் இத் தொழிற்துறை வீழ்ச்சி கண்டால் அது உலக பொருளாதாரச் சமநிலையை சீர்குலைத்து விடலாம் என்ற அச்சம்—தியாக உணர்வு—புகைப்பவர் மனதில் இருந்து மறையும்வரை, புகைத்தலை அவர் தொடரலாம். இதனால் கிடைக்கும் வரியை விட பலமடங்கு நிதியை எதிர் பார்த்து வைத்தியத்துறை தமது அரசுகளிடம் கையேந்தி நிற்கும் என்பது மட்டும் உண்மை.

சமூகத்தைச் சீரழிக்கும் புகைத்தலை ஒழிப்பதற்கு சட்டங்களை நம்பியிருப்பதில் பயனில்லை. சமூக ரீதியில் திட்டமிடப்பட்டபொது முயற்சிகளை நாடுவதே சிறந்தது. அத்தகைய முயற்சிகள் அவசரமாக — அவசியமாகத் தேவைப்படுகின்றன.

அவற்றை முன்னெடுப்பதற்கு ஒன்றிணைந்து செயற்படும் அமைப்புகளும் அவசியமாகுகின்றன.

சமூக ரீதியில் — நாடுகள் மட்டத்தில் — பிரதேச அடிப்படையில் — சர்வதேச அளவில் இத்தகைய அமைப்புக்களை உருவாக்க வேண்டும். ★

## வழி

இரட்டைப் பின்னலிட்டு
இருவிழியில் மைதடவி
முற்றத்து மல்லிகையில்
மொட்டெடுத்து முடிசூட்டி
மிச்சத்தைச் செவ்வாயில்
முத்தாகவே அடுக்கி
முகமறியாக் காதலனை
முழுதாக மனமெண்ணிக்
களித்திருக்கக் காலிரண்டும்
கடுகதியாய் மிதியுழக்க
'வெளிவழியே' வந்திட்ட
வெண்புறாவே!
நீயந்த
வல்லூறின் வாய்ப்பட்டது
எவ்வாறு?
வழித்துணைக் காற்றுக்கு
வாயேது?
அருகுள்ள,
சேற்றுச் சுவர்நிலமா
செயலற்ற சேதி சொல்லும்?
பெண்ணொருத்தி ஆணுடன்
பெரிதாகப் பேசிவிடின்
பாதகமாய் எண்ணிவிடும்
பண்பற்ற நம்மினத்தின்
பழிச்சொல்லுக்கஞ்சாமல்
பதில் கேட்டெழுந்தவளே!
உன்துணிவை
வியக்கின்றோம்!
ஆனால் ..
அநீதியைக் கண்டு
ஆர்த்தெழுந்த உன்குரல்
அமுங்கிப் போனதேன்?
நாய் வாலை நிமிர்த்தல்
நடவாது.
நறுக்கிடலே நாளும்
நல்லவழி!
பேச்சுக்களால் உனக்குப்
பயனில்லை.
பெண்ணினமே!
ஆடவர்க்கே பேனா
உரித்தல்ல.
இனியுந்தன் எழுச்சிதனை
எழுத்திலேற்று!
அதற்கு நிகர்
ஏதுமில்லை!

-உடுவில் அரவிந்தன்

## காதல்

மௌன உணர்விலே
மனதின் நிலையிலே
உயிர்கள் சேர்வது
உண்மையானது காதல்.

நெஞ்சின் சுமைகளை
நெஞ்சம் தன்னிலே
உணர்த்தி வைப்பது
உறுதியானது காதல்.

இதய இலையிலே
இளைய வடிவிலே
பிணைந்து நிற்பது
பிரிவு அற்றது காதல்.

வீணை இழையதன்
நாதம் போலவே
மீட்டும் விரல்களால்
மீண்டு வாழ்வது காதல்.

உடம்பு தன்னிலே
உதிரம் போலவே
உள்ளுணர்விலே
ஊற்றெடுப்பது காதல்.

தேனின் சுவை தனில்
இனிமை போலவே
இரு மனங்களும்
இணைந்து வாழ்வது காதல்.

மேகம் தன்னிலே
நீலம் போலவே
கலந்து நிற்பது
களவு அற்றது காதல்.

புனித மனங்களின்
புரிந்த உணர்வினால்
பூமி தன்னிலே
பூத்து நிற்பது காதல்.

நீரின் துணையிலே
மீனைப் போலவே
ஒன்றில் ஒன்றதாய்
ஒட்டி வாழ்வது காதல்.

தமிழின் பொருளிலே
கள்ளின் இனிமை போல்
கனிவு நிறைந்தது
களங்க மற்றது காதல்.

என் மனதிலே
அவளைப் போலவே
ஆழி முத்ததாய்
ஆழ்ந்து நிற்பது காதல்.

உலகம் பிரிக்கலாம்;
உணர்வை மறைக்கலாம்;
உடல்கள் பிரியலாம்;
உயிர்கள் சேர்வதே காதல்

- தி. திருக்குமரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறள் வெள்ளம்

கவலை இல்லாத மனிதன் ஒருவன் உலகினிலே இருக்கிறானா? எப்போதும் கலகலப்பாக இருப்பவன் மனத்திலும் ஏதோ ஒன்று உறுத்திக் கொண்டு தான் இருக்கும்.

ஒன்று கிடைத்தால் மற்றொன்றை நினைத்து ஏங்கும் மனது. பெற்ற புகழ் போதாது என்று அது தவிக்கும். எல்லையின்றி விரியும் விந்தைகள் சூழ் உலகில் மனிதத் தேவைகளும் ஏராளம்.

கூழுக்கு உப்பில்லை என்றொருவன் கவலைப்பட்டால் பாலுக்குச் சர்க்கரை இல்லை என்று அதைவிடத் துடிக்கிறான் அடுத்தவன். நீயாகப்பட்டுக் கொள்வது தான் திருப்தி. நீயாகத் தேடுவது தான் நிம்மதி. தன்னைத் திருப்திப்படுத்த — அடுத்தவனுக்கு வழிகாட்ட — என்றெல்லாம் அனைவரினும் உயர்ந்த குணங்கள் கொண்ட ஒரு சக்தியை — ஓர் இலக்கை — இறைவனாகக் கண்டவன் மனிதன்.

அந்த இறைவன் தனக்குவமை இல்லாதவன்; முழு மனிதனையும் விஞ்சியவன். யாரைப் போன்றவன்? என்ன நிறம்? என்ன தன்மை? என விளக்கிவிடல் இயலுமா?

இல்லவே இல்லை. உவமை கூற வென ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவன் அவன். அவன் தாள்-தனை நீ சேர்ந்துவிடு. அதாவது அவனின் சிறந்த குணங்களைத் தேர்ந்து விடு.

அப்படிச் செய்தால் உன் மனக் கவலை ஆதவனைக் கண்ட பனிபோல மறையும்.

ஏனையோரின் மனக் கவலைகளை மாற்றும் சக்தி இறைவன் இடத்தும் இல்லையே.

தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது.

என்றார் வள்ளுவர்.

—0007

(கடவுள் வாழ்த்து)

- அம்பிகைபாகன்

# இந்த வார இராசி பலன்

## (02 - 08 - 1997 முதல் 08 - 08 - 1997 வரை)

| | | | |
|---|---|---|---|
| சனி | | | |
| கே | இராசிச் சக்கரம் | | *ஆ சந் |
| வி | | | வெ பு ரா |
| | | | செ |

மாற்றம்

3- 8- 1997 இல் துலாம், செவ்வாய்.

இந்திய அரசியலில் கலகலப்பு ஏற்படும். அரசியல் குத்துக்கரணங்கள் சர்வசாதாரணமாகநடக்கும். இலங்கையின் அரசியலில் பேச்சுவார்த்தைகளும் கருத்து மாற்றங்களும் ஏற்படும். இருபகுதியினர்களுக்கும் மேற்கு உலக அழுத்தங்கள் ஏற்படும். ஐ.நா.தலையீடு புதிய திருப்பத்தை ஏற்படுத்தும்.

**மேடம்:** உலகில் தைரியத்துடன் போராடி வெற்றி பெறும் நீங்கள் தொழில் ஸ்தானத்தில் முன்னேறி வருவீர்கள். உங்களிடம் சகோதரங்களும், நண்பர்களும் பொருள்களை வாங்குவார்களே தவிர நீங்கள் கஷ்டப்படும் பொழுது கண்டும் காணாதவர்களாக இருப்பார்கள். போலிக் கண்ணீர் விடும் உலகில் எதையும் நிரந்தரமென நம்பிவிடாதீர்கள். கை, கால் உளைவு, நாரி நோ வரும் பொழுது தைலங்களை வாங்கிப் பூசுங்கள் 1வீட்டில் அதிக செலவுகள் வரும். அதை ஓரளவு நிதானப்படுத்திச் செய்யுங்கள். முருகப்பெருமானை வழிபட்டு வாருங்கள். உங்கள் கவலைகள் குறைந்து கொண்டு போகும்.

**இடபம்:** உலகில் யார் தான் சட்டதிட்டங்களின் படி வாழ்கின்றார்கள்? ஏதோ முயற்சியால் முன்னேறத் துடிக்கும் உங்களைப் போன்றவர்களுக்கு நன்மைகள் நிச்சயம் கிடைக்கும். பெற்றோர் வழி உறவினரால் உதவிகளும், ஆதரவுகளும் கிடைக்கும். எதிர்ப்பாலருடன் அவதானமாக இருக்க வேண்டும்; அல்லது அவமானப் படவேண்டும். காசைப் பெரிதாக எண்ணாத நீங்கள் கொஞ்சம் நிதானமாகச் செலவு செய்யாமல் விட்டால் கட்டு மீறிய செலவுகளால் கடன் படும் நிலைகள் ஏற்படும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்கள் உதவிகளால் நன்மைகள் ஏற்படும்.

**மிதுனம்:** உங்கள் செல்வாக்கும், சொல்வாக்கும் உங்களுக்கு நன்றாக வேலை செய்யும். வீட்டுச் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் ஏட்டிக்குப் போட்டிகளும் வேலைப்பளுவும் ஏற்பட இடமுண்டு. அதிக பொருளுக்கு ஆசைப்பட்டு களவுவேலை செய்தோ அல்லது களவு சாமான்களை விற்றோ மற்றவர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளாக விரும்பாத உங்களின் பிடிவாதமான செயற்பாடுகளால் உங்கள் குடும்பத்தவர்கள், சகோதரங்கள், பிள்ளைகள் நன்மை அடைவார்கள். வைத்தியச் செலவுகளைக் கட்டுப்படுத்துங்கள்.

**கடகம்:** எதிர்ப்புக்களுக்கு மத்தியில் வளர்ந்து கரையேறும் உங்களை எவரும் அறிய மாட்டார்கள். உங்களை அலட்சியப்படுத்தும் நண்பர்கள் இனஜனங்கள் உங்கள் உதவிகள் நாடி ஓடிவருவர். காணி பூமியால் செலவுகள் அதிகரிக்கும். தொழில் ஸ்தானத்தில் பலநன்மைகள் ஏற்படு . குடும்பத்தில் படபடப்பும், சுபமங்களப் பேச்சுக்களும் மாறி மாறி வரும். வெளிப்படையான பேச்சுக்களால் எதிர்ப்புக்கள் இடைக்கிடை வரச் செய்யும். தெய்வபக்தி நன்மை தரும்.

## சோதிட சஞ்சீவி

**சிங்கம்:** நீங்கள் எதையும் வெளிப்படையாகப் பேசுவதனால் தொழில் செய்யும் இடத்தில் எதிர்ப்புக்களும், மறைமுகப் புகைச்சலும் ஏற்படத்தான் செய்யும்; முயற்சியால் வெற்றிப்பாதையை நோக்கி முன்னேறியபடி இருப்பீர்கள். இராகு, கேது மாற்றங்களால் மனச்சலனமும், இழப்புக்களும் சிலருக்குக் கொடுக்கும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் வரும். தூரதேசப் பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும். கொடுக்கல், வாங்கலில் அவதானமாக இருந்து கொள்ளுங்கள்.

**கன்னி:** நீங்கள் அடிக்கடி கோபிப்பதனால் எவ்விதமான பிரயோசனமும் இல்லை. சட்டதிட்டத்தின்படி யார்தான் வாழுகின்றார்கள்? இவ்வுலகில் பிழைகள் விடாத எவரும் இல்லை. புத்திரரால் செலவுகள் தொடரும். உங்கள் புத்தியால் சமாளிக்க உங்களால் முடியும். கைகால் தாக்கம் கொடுக்கும். போக்குவரத்திலும் வாகனங்களிலும் அவதானமாக இருக்கவும். கொஞ்சம் நிதானமாக எக்காரியங்களையும் செயற்படுத்தி வெற்றி பெறுங்கள். உற்றாரும் பெற்றாரும் உடன் பிறந்தோரும் உதவி செய்வரென எதிர்பார்க்க வேண்டாம். தொழில் ஸ்தாபனத்தில் அவதானமாக இருக்கவும்.

**துலாம்:** நீதி, நியாயம், தர்மம் எனப் பேசிப் பேசிக் காலத்தை போக்காட்டிக் கொண்டு இருப்பீர்கள். ... கிரமனப் போக்குடைய நீங்கள் சம்சார வாழ்க்கையால் சலிப்படையலாமா? உலகம் என்பது சுழல் சக்கரம் தானே? கொஞ்சம் பொறுமையாக வீட்டிலும் சரி, தொழில் ஸ்தானத்திலும் சரி நடந்து உங்கள் அலுவல்களைச் செய்யுங்கள். தூரதேசத்திலிருந்து நற் செய்திகளை எதிர்பார்க்க முடியாது. பிரயாணங்களைத் தவிர்த்துக் கொள்ளவும்.

**விருச்சிகம்:** படபடப்பும், எதிலும் கண்ணும் கருத்துமாக இருக்கும் நீங்கள் காரியங்களில் வெற்றிச் செயற்பாட்டை நாடிஓடுங்கள். எதற்கும் தயார் நிலை உங்களுக்கு வெற்றிதரும். சகோதரங்களும், குடும்பத்தினரும் குறை சொல்வார்கள். மாற்றங்கள் சகஜமாகும். தொழில் ஸ்தானத்தில் குறைகேட்க நேரிடும். செல்வாக்கும், உங்கள் சொல்வாக்கும் தக்கசமயம் உங்களைப் காப்பாற்றும். பொருள்கள் களவு போகலாம். நிதானமாக, கவனமாக இருக்கவும்.

**தனுசு:** நிதானமான செயற்பாடு அவசியம்; ஆயுதபலம், அலைச்சல், தடை தாமதங்கள், சகோதரங்களின் சுபகாரியங்களில் மந்தநிலைமை ஏற்படும். பணக்கைமாறலில் அவதானம்; ஏமாற்றங்கள் சிலருக்குக் கொடுக்கும். பெற்றோருடன் அல்லது பெற்றோர் வழி இனஜனங்களுடன் பகைக்க நேரிடும். தொழில் ஸ்தானத்தில் பெரியவர்களுடன் பக்குவமாகநடந்து கொள்ளவும். மேற்குத் திசையில் இருக்கும் ஆலயத்திற்கு திருப்பணி செய்து வர நன்மைகள் கொடுக்கும்.

**மகரம்:** நீங்கள் எந்த விஷயங்களிலும் எதிர்நீச்சல் போட்டு முன்னேறுவீர்கள்.

## மகாதேவா ஜோதிடம்


நீங்கள் பிறருக்கு உதவி, ஒத்தாசை செய்வதாக எண்ணிச் செயற்படுவீர்கள். ஆனால் மற்றவர்கள் நீங்கள் சுயநலத்துடன் செயற்படுவதாகக் கருதி குறை கூறுவார்கள். காணி; பூமி சம்பந்தமான பேச்சுக்கள், புத்திரரால் அலைச்சலும் செலவுகள் என்பனவும் ஏற்படும். குடும்பத்தில் எதிர்ப்பாலருக்கு விஷபீடைகள் ஏற்பட்டு செலவுகள் ஏற்படும். காரணமின்றி அடிக்கடி கோபித்துக் கலங்குவீர்கள். பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**கும்பம்:** நீங்கள் எந்த விஷயங்களையும் நேரகாமல் செய்து வெற்றிபெறும் இயல்புடையவர். எல்லோரும் உங்களை வெளிப்படையாக மதித்தாலும் ... 

(X ஆம் பக்கம் பார்க்க)

# சொற்சிலம்பம்

## புதிர்ப் போட்டி இல.09



சொற்சிலம்பம் இல. 09
சஞ்சீவி,
361, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் : ..........................................

விலாசம் : ..........................................

..........................................

—— இங்கே வெட்டுக ——

### முடிவு திகதி: 08 - 08 - 1997

### இடமிருந்து வலம்

1. பாண்டவர்களில் ஒருவன். 5. பார்வதி. 7. செல்வம். 8. சூரியன். 9 ஒரு நட்சத்திரம். 11. ஓர் அசைச் சொல். 12. ஓர் ஊர்தி. 13. நீர் நிலை. 15. ஆங்கிலத்தில் ஓடு. 16. பொருத்தமற்றது. 17. படுக்கைக்கு உதவும். 18. இசையுடன் தொடர்புடையது. 19. திருமணம். 21. ஓர் இனம். 23. பஞ்சாங்கஉறுப்பில் ஒன்று. 24. நியாயம். 25. மழை, வெயில் இரண்டுக்கும் உதவும்.

### மேலிருந்து கீழ்

1. தெரு. 2. மகளை மணந்தவன். 3. கணவன். 4. வெட்டும். ஒரு செடியும் கூட; 5. அழித்தல். 6. உண். 8. சம்மதத்தின் வெளிப்பாடு. 10. வியாபார ஸ்தலம். 12. கலைமகள். 13. ஒரே தலைவன். 14. பாலில் கிடைப்பது. 16. மரம். 17. பாவனை செய்தல். 18. ருசி. 20. வணங்கு. 22. நிலைக்குத்துக்கு மாறானது.

### சொற்சிலம்பம் இல. 07 - விடைகள்

**இடமிருந்து வலம்**

1. சிகிச்சை. 4. ஆகுதி. 6. வழி. 7. வசதி. 9. அம்மா. 10. வேலை. 11. புதுமை. 13. திகதி. 15. குருதி. 17. லயம். 18. தீ. 19. மாரீசன் 21. நாகரிகம். 24. பள்ளி. 25. ஆழி.

**மேலிருந்து கீழ்**

1. சிவப்பு. 2. கிழி. 3. சைவம். 4. ஆதி. 5. தில்லை. 8. சமாதி. 9. அமைதி. 10. வேதியன். 12. குரு. 14. கலசம். 16. குமாரி. 20. ரீகன். 21. நாள். 22. கவி. 23. கோழி.

பல நூற்றுக்கணக்கான வாசக நேயர்கள் இப்போட்டியில் ஆர்வத்துடன் பங்குபற்றி சரியான விடைகளை எழுதி அனுப்பியுள்ளனர். அவர்களில் அதிர்ஷ்டச் சீட்டிழுப்பு மூலம் தெரிவு செய்யப்பட்ட முதல் மூன்று அதிர்ஷ்டசாலிகளின் விவரம் வருமாறு:-

★ முதலாம் பரிசு :- கனகசபை ஐங்கரன்,
127/ 1, கோயில் வீதி,
யாழ்ப்பாணம்.

★ இரண்டாம்பரிசு :- றொபினா உதயந்தி கந்தவனம்,
27/ 36, புங்கன்குளம் வீதி,
யாழ்ப்பாணம்.

★ மூன்றாம் பரிசு :- கா. பிரசாத்,
ஆண்டு 8 C, யாழ். இந்துக் கல்லூரி.

இவர்கள் மூவருக்கும், சரியான விடைகளை எழுதிய ஏனைய சகல வாசக நேயர்களுக்கும் எமது பாராட்டுகள்.

புதிர்ப் போட்டிக்கு விடைகளை அனுப்பும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டியின் இலக்கத்தைத் தவறாமல் குறிப்பிடவும்.

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.

முதற் பரிசு :- ரூபா. 150. 00
இரண்டாம் பரிசு :- ரூபா. 100. 00
மூன்றாம் பரிசு :- ரூபா. 50. 00

★ புதிர்ப்போட்டி இலக்கம். 08 இன் முடிவுகள் அடுத்த வார சஞ்சீவியில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே சமயத்தில் எல்லாப் புறமும் படம் பிடிக்கும் வீடியோ கமரா!

ஒரே சமயத்தில் எல்லாப் பக்கமும் பார்த்துப் படம் பிடிக்கக்கூடிய அதி நவீன வீடியோ கமராவை கொலம்பியா நாட்டைச் சேர்ந்த கம்பியூட்டர் அறிவியல் துறைப் பேராசிரியர் ஸ்ரீநய்யார் கண்டு பிடித்திருப்பதாக விஞ்ஞான இதழ் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

அது வெளியிட்ட தகவல்கள் வருமாறு:-

ஸ்ரீநய்யார் ஒரு நவீன சிறிய வீடியோ கமராவையும், சிறப்பு 'சாப்ட்வேர்' ஒன்றையும் உருவாக்கியுள்ளார்.

இந்தக் கமராவின் மூலம் ஒரே சமயத்தில், இருந்த இடத்தில் இருந்தே பல்வேறு திசைகளையும் படம் பிடிக்க முடியும். இதன் மையப் பகுதியில் சரியான கோணத்தில் சிறப்புக் 'கண்ணாடி ஒன்று பொருத்தப்பட்டிருக்கிறது.

ஒரு சிறு நுண்பட அடுக்கு வீடியோ கமரா சிறப்புக் கண்ணாடிக்கு நேர் பின் பின்புறம் பொருத்தப்பட்டுள்ளது. ஒன்றன்பின் ஒன்றாக வைக்கப்பட்டுள்ள நுண்பட கமராக்களின் மூலம் 360 பாகையில் முழு காட்சிகளையும் காண முடிகிறது.

இந்தக் கமரா விஞ்ஞான உலகின் அருட் கொடை என்று அறிவியல் வல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். புகைப்பட வல்லுநர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதமாகும்.

# இங்கிலாந்து அரசியின் திருமணப் பொன்விழா

இங்கிலாந்து அரசி எலிஸபெத்— பிலிப் கோமகன் ஆகியோர் திருமணம் செய்து கடந்த 15ஆம் திகதியுடன் ஐம்பது ஆண்டுகள் கழிந்துள்ளன.

மகாராணியின் திருமணப் பொன்விழா நிகழ்வு அரசியின் சொந்தக் குதிரைப் பந்தய மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்றது.

மகாராணிக்கும் கோமகனுக்கும் ஆனி என்ற மகளும், சார்ள்ஸ், ஆண்ட்ரூ என்ற இரு மகன்மாரும் உள்ளனர் என்பது தெரிந்ததே.

மகாராணியும் கோமகனும் திருமணமாகி ஐம்பது வருடங்களைச் சந்தோஷமாகக் கழித்து, திருமணப் பொன்விழாவைக் கொண்டாடியும் விட்டனர்.

ஆனால் அவர்களின் பிள்ளைகளான பட்டத்து இளவரசன் சார்ள்ஸ் மற்றும் அவரின் சகோதரர் ஆன்ட்ரூ ஆகியோர் இளவயதிலேயே திருமணம் செய்து கொண்டு, விவாகரத்தும் வாங்கி விட்டார்கள்.

# தங்கத்தை விட பெறுமதியில் மதிப்புக்கூடிய பாம்பு விஷம்!

உலக சந்தையில் விலை மதிப்பு அதிகம் உள்ளது எது? தங்கமா? பிளாட்டினமா? போதைப் பொருளான கொக்கெயினா? இவை எதுவும் இல்லை. பாம்பின் கொடிய விஷமே!

ஓர் அவுன்ஸ் பாம்பின் விஷம் ஆறாயிரத்து 500 ரூபாவில் இருந்து ஒரு லட்சம் ரூபா வரை பிரேசில் நாட்டில் விற்கிறது.

பாம்பு விஷமானது பெரும்பாலும் மருத்துவ ஆராய்ச்சி நிறுவனங்களினால் வாங்கப்படுகிறது.

இந்த பாம்பு விஷஉற்பத்தி அரசாங்கத்தின் கட்டுப்பாட்டில் மிகக் குறைந்த அளவே தயாரிக்கப்படுகின்றது. சிலர் இதை திருட்டுத்தனமாகவும் தயாரிக்கின்றனர்.

பிரேசில் நாட்டில் பாம்பின் விஷத்தில் இருந்து தயாரிக்கப்படும் 'சீரம்' (நினநீர்) பாம்பு கடித்தவர்களுக்கு எதிர் மருந்தாக பயன்படுத்தப் படுகிறது. இதற்கென 60 ஆயிரம் பாம்புகள் பயன்படுத்தப்படுகிறது.

இந்த விஷதயாரிப்பு மனித உயிரைப் பணயம் வைத்தே மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

சிலர் காசுக்காக காட்டிற்கு சென்று கொடிய விஷபாம்புகளை பிடித்து அவற்றின விஷத்தைத் திருட்டுத் தனமாக விற்று வருகிறார்கள். இவற்றின் அளவு மிக்க குறைவாக இருந்தாலும் சில மருத்துவ நிறுவனங்கள் திருட்டுத்தனமாக அவற்றை வாங்கி வைத்து கொள்கின்றன. பிரேசில் நாட்டில் அரசு அனுமதி இல்லாமல் பாம்பின் விஷம் தயாரித்தால் 5 ஆண்டுகள் வரை ஜெயில் தண்டனை அளிக்கப்படுகிறது.

பிரேசில் நாட்டைபோன்று சுவிஸ் நாட்டு மருத்துவ நிறுவனம் ஒன்று கொடிய விஷ தன்மை உடைய 10 ஆயிரம் பாம்புகளை விஷதயாரிப்பிற்கென வளர்த்து வருகிறது. இங்கு தயாரிக்கப்படும் 1 கிராம் விஷம் 6 ஆயிரம் ரூபாவுக்கு மேல் விற்கப்படுகிறது.

சில தனியார் நிறுவனங்கள் பாம்பு விஷத்தை பொடி பொடியாக்கி விற்பனை செய்து வருகின்றன. இந்த வியாபாரத்தில் தங்கம் மற்றும் போதை பொருள் விற்பனையில் கிடைக்கும் லாபத்தை விட அதிக அளவில் லாபம் கிடைக்கிறது.

கள்ளச் சந்தையில் ஒரு கிராம் விஷம் ஒரு லட்சம் ரூபா வரை விற்கப்படுகிறது. மருந்து உபயோகத்திற்கு மிக அரிய பாம்பான 'அர்ட்டு' வகை பயன் படுத்தப்படுகிறது.

பிரேசில் நாட்டில் தயாரிக்கப்படும் விஷம் மற்ற நாட்டில் 10 மடங்கு அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது.

பிரேசில் நாட்டில் திருட்டு தனமாக தயாரிக்கப்படும் விஷம், ஐரோப்பா, அமெரிக்கா போன்ற நாடுகளில் கள்ளச்சந்தையில் தாராளமாக விற்பனையாகுகின்றது.

பிரேசில் நாட்டில் மட்டும் ஆண்டிற்கு 19 ஆயிரம் பேர் பாம்புகடிக்கு ஆளாகிறார்கள்.

## பஞ்சாமிர்தம் பலரச அமிர்தம்

# தென்னாபிரிக்க ரி.வி. மீது சாயி பக்தர்கள் வழக்கு!

சாயிபாபாவை அவதூறு செய்யும் தொடர் நிகழ்ச்சியை ஒளிபரப்பியதற்காக தென்னாபிரிக்க தேசிய தொலைக்காட்சி மீது வழக்குத் தொடர முடிவு செய்துள்ளனர் சாயி பாபா பக்தர்கள்.

தென்னாபிரிக்க ஒளிபரப்பு நிறுவனத் தொலைக்காட்சி 'குரு பஸ்டர்ஸ்' என்ற பெயரில் தொடர் நிகழ்ச்சியை ஒளிபரப்பியது.

சாயிபாபா உள்ளிட்ட மதக் குருமார் மோசடி செய்பவர்கள் என்பதுபோல் இந்தத் தொடர் நிகழ்ச்சியில் சித்திரிக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் கருணாநிதிக்கு சாயிபாபா ஒரு கோப்பையையும் தங்கச் சங்கிலியையும் பரிசளிப்பதுபோல் ஒரு காட்சி வருகிறது. அக் கோப்பையும் தங்கச் சங்கிலியும் திடீரெனத் தோற்றுவது போலவும் அதைச் சாயிபாபா பரிசளிப்பது போலவும் உள்ளது.

அந்த கோப்பையையும் தங்கச் சங்கிலியையும் அவர் முன்னதாகவே தனது கையில் மறைத்து வைத்திருந்து அதைச் சாமர்த்தியமாக எடுப்பதாகக் காட்டப்படுகிறது.

இந் நிகழ்ச்சி சாயிபாபாவை மோசடிகாரர் போல் சித்திரிக்கிறது என்று கூறி தென்னாபிரிக்காவில் உள்ள சாயி பாபா பக்தர்கள் வழக்கு தொடர உள்ளனர்.

''எங்களின் கருத்துக்களை அறியாமல் தென்னாப்பிரிக்க ஒளிபரப்பு நிறுவனம் அந்த நிகழ்ச்சியை ஒளிபரப்பிவிட்டது. நிகழ்ச்சி அவதூறு செய்யும் வகையில் உள்ளது. எனவே அதை ஒளிபரப்ப வேண்டாம் என்று வழக்கறிஞர் மூலம் தெரிவித்தோம். ஆனால் அதைத் தொலைக்காட்சி நிறுவனம் கேட்பதாக இல்லை. எனவே வழக்கு தொடர உள்ளோம். — என்று சாயிபாபா அமைப்பின் துணைத் தலைவர் ரஞ்சனா கூப்பன் தெரிவித்தார்.

# பத்திரிகைச் செய்தியால் மாட்டிய டாக்டர்!

தண்டனையிலிருந்துதப்பிய ஒரு டாக்டர் நண்பர்களுக்கு அளித்த மதுபான விருந்தால் சிக்கிக் கொண்டார். அவரது மதுபான விருந்தை புகைப்படம் எடுத்து பத்திரிகைகள் பிரசுரித்ததால் அவர் மீதான குற்றச்சாட்டு உண்மைதான் என்று பிறகு தெரியவந்தது.

லண்டனில் ரெஜினால்ட்டு மின்ட் (வயது 54) என்ற டாக்டர் தங்களிடம் முறைகேடாக நடந்துகொண்டதாக 1994, 1995 ஆகிய ஆண்டுகளில் இரு பெண்கள் பொலீஸில் புகார் செய்தனர். அவர் மீதான விசாரணையில் போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

எனவே அவரை நீதிமன்றம் வழக்கிலிருந்து விடுவித்தது. இதைக் கொண்டாட நண்பர்களுக்கு அவர் 'ஷாம்பேன்' விருந்து கொடுத்தார். அந்த விருந்தை நிருபர்கள், பத்திரிகை புகைப்படக்காரர்கள் முன்னிலையிலேயே அவர் அளித்தார்.

செய்தியுடன் அவரது விருந்து பற்றிய புகைப்படத்தையும் பத்திரிகைகள் பிரசுரித்தன. அதைப்பார்த்து விட்டு மேலும் 5 பெண்கள் பொலீஸாரை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டனர்.

''அவரைத் தப்ப விடாதீர்கள். என்னிடமும் அவர் அப்படித்தான் நடந்து கொண்டார்'' — என்று ஒவ்வொருவராக 5 பெண்கள் முறைப்பாடு செய்தனர்.

அதன் பிறகு பொலீஸார் அவரைக் கைது செய்து வழக்குத் தொடுத்தனர். 9 மாதம் சிறைத்தண்டனை அவருக்கு விதிக்கப்பட்டது. டாக்டர்கள் பட்டியலில் இருந்து அவரது பெயரை பிரிட்டிஷ் மருத்துவர்கள் கவுன்சில் நீக்கிவிடும் என்று தெரிகிறது.

ரெஜினால்டு மின்ட் மியான்மரில் (பர்மாவில்) பிறந்தவர்.

# ராவ் எழுதும் புத்தகம்

முன்னாள் இந்தியப் பிரதமரும் சர்ச்சைக்குரிய பிரமுகருமான நரசிம்மராவ் எழுதிய நூல் ஒன்று விரைவில் வெளிவரவிருக்கின்றது.

அந்நூல் பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நாவலைப் பதிப்பதற்குக் கொடுப்பதற்கு முன்னர் அதன் 'ஸ்கிரிப்டை' தன்னுடைய கம்பியூட்டரில் கொடுத்து அதன் மூலம் அதை ஒரு முறை படித்துப் பார்த்து வருகின்றார் நரசிம்ராவ்.

# லண்டனின் 'பிக்பென்'

லண்டனில் நாடாளுமன்றக் கட்டடத்தில் உள்ள 'பிக் பென்' கடிகாரம் உலகப் புகழ்பெற்றது.

கடிகாரத்தையும் 'பிக் பென்'என்றுசொல்கிறார்கள். கடிகாரம் உள்ள கோபுரத்தையும் 'பிக் பென்' என்று சொல்கிறார்கள். ஆனால் உண்மையில் கோபுரத்தில் வைக்கப்பட்டுள்ள 'காண்டா மணி'க்குத் தான் 'பிக் பென்' என்று பெயர். இதுதான் மணிக்கு ஒருமுறை பயங்கரமாக ஒலி எழுப்புகிறது.

'பிக் பென்' என்ற பெயர் எப்படி வந்தது?

1855-58 இல் [illegible] பணித்துறை [illegible] ராகப் பணிபுரிந்தவர் சர் பென்சமின் ஹால். அவரது பதவிக் காலத்தில் தான் கோபுரத்தில் உள்ள இராட்சத மணி வடிவமைக்கப்பட்டது. அதனால்தான் 'பெரிய' (பிக்) மணிக்கு அவரது பெயர் (பென்) சூட்டப்பட்டது.

இந்த மணி வார்த்தெடுக்கப்பட்ட தேதி 1858 ஏப்ரல் 10.

இதன் எடை 13.5 தொன். அந்தக் காலத்தில், பிரிட்டனிலேயே அதிக எடையுள்ள மணி இதுதான். இதன் உயரம் ஏழரை அடி. விட்டம் 9 அடி.

1959 ஜூலை 11 முதல் 'பிக் பென்' கடிகாரம் செயற் [illegible] காரத்தில் உள்ள இயந்திரப் பொருள்களின் எடை மட்டும் 5 தொன்.

# ஏழைகளின் எண்ணிக்கை செல்வந்த நாடுகளில் உயர்வு

அமெரிக்கா, ஜேர்மனி நோர்வே போன்ற செல்வந்த நாடுகளில் ஏழைகளின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

ஏழு செல்வந்த நாடுகளின் (ஜி — 7) உச்சிமாநாட்டில், ஐ.நா. வளர்ச்சித்திட்ட துணை நிர்வாகி ரிச்சார்ட் ஜோலி சமர்ப்பித்த அறிக்கை ஒன்றில் இத் தகவல் வெளியிடப் பட்டிருக்கின்றது.

அந்த அறிக்கையில் உள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

செல்வந்த நாடுகளில் ஏழைகளே இல்லை என்பது தவறான கருத்தாகும். நாளுக்கு நாள் இங்கு ஏழைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்பதே உண்மை.

ஆஸ்திரேலியா, பெல்ஜியம், பின்லாந்து, பிரிட்டன், நெதர்லாந்து போன்ற இதர பணக்கார நாடுகளில் கூட ஏழைகளின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் முதியவர்களில் ஐந்தில் ஒருவர் வறுமையில் வாடும் நிலை காணப்படுகிறது. செல்வந்த நாடுகள் பொருளாதார ரீதியில் பலமான நிலையில் இருந்துவந்த போதிலும், தங்களது குடிமக்களுக்குத் தேவையான சுகாதார வசதிகள், சுற்றுச்சூழல் வசதிகள் போன்றவற்றைப் போதுமான அளவில் செய்து தரவில்லை. கனடா, டென்மார்க், பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் இத்தகைய குறைபாடுகள் நிலவுகின்றன.

## இடைவெளி அதிகரிப்பு

செல்வந்த நாடுகளில் ஏழை மக்களுக்கும் பணக்காரர்களுக்கும் இடையே நிலவிவரும் இடைவெளி அதிகரித்து வருகிறது. ஏழைகளின் அடிப்படை வசதிகள் குறைந்து வருகின்றன. அமெரிக்காவில் 1 லட்சம் பேரில் குறைந்த பட்சம் 15 பேருக்கு எய்ட்ஸ் நோய் பரவியுள்ளது. ஸ்பெயின், பஹாமா போன்ற நாடுகளில் இந்த எண்ணிக்கை 142 என்ற அளவில் உள்ளது.

அமெரிக்காவில் தனிநபர் வருமானத்தின் அளவு உலகிலேயே அதிக பட்ச அளவாக 26 ஆயிரத்து 397 டொலர்கள் என்ற அளவில் இருந்து வருகிறது. ஆனால் அங்கு தனிநபர் பிரச்சினைகளும் வெகுவாக அதிகரித்து வருகின்றன. சுமார் 4.7 கோடி பேருக்கு காப்புறுதி வசதிகள் இல்லை. நியூயோர்க் நகரில் மட்டும் 2.5 லட்சம் பேர் வீடு வசதியின்றி அல்லற்பட்டு வருகின்றனர். ஒரு லட்சம் கர்ப்பிணிகளில் 12 பேர் பிரசவ காலத்தில் மரணமடைகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட புள்ளி விவரங்களிலிருந்து இந்த விவரம் தெரியவந்துள்ளது.

லண்டன் நகரில் வீடு வசதியின்றி இருந்து வருவோரின் எண்ணிக்கை சுமார் 4 லட்சம் எனத்தெரிய வந்துள்ளது. பிரானஸில் இந்த எண்ணிக்கை 6 லட்சமாகும். மாஸ்கோவில் அநாதைச் சிறுவர்களின் எண்ணிக்கை 60 ஆயிரம்.

தெற்காசியா மற்றும் ஆபிரிக்க நாடுகளில் வறுமையில் வாடுவோரின் எண்ணிக்கை மிக அதிகமாகும். மொத்த மக்கள் தொகையில் சுமார் 40 சதவீதம் பேர் வறுமையில் வாடுகின்றனர். கல்வி வசதி, அடிப்படை வசதி போன்றவை இன்றி அவர்கள் அல்லற்பட்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குரங்காரும் முட்டாள் முதலையும்

ஒரு காட்டின் நடுவே பெரிய குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தில் ஒரு முதலை வாழ்ந்து வந்தது.

குளக்கரையிலே நாவல் மரங்கள் பல நின்றன. அங்கே ஒரு குரங்கு அடிக்கடி வந்து நாவல் பழம் தின்று போவது வழக்கம்.

முதலைக்கும் அதன் பெண் சோடி முதலைக்கும் குரங்கைப் பிடித்துத்தின்ன வேண்டும் என்று மிகவும் ஆசை. ஆனால் அது எப்படி முடியும்? வெகு நாளைய விருப்பத்தைப் பூர்த்தி செய்ய முடியாமல் தவியாய்த் தவித்தன. அதனால் முதலை ஓர் உபாயம் செய்தது. முதலை குரங்குடன் சிநேகிதம் போலப் பழகிவிட்டு பின்பு ஒரு நாளைக்கு அதன் வாழ்வையே முடித்து விடலாம் என்று மனப்பால் குடித்தது.

ஒருநாள் குரங்கு நாவல் மரத்தில் பழங்களைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தது. கரைக்கு வந்த முதலை ''குரங்காரே! எனக்கும் நாவல் பழம் தின்ன ஆசையாக இருக்கிறது. கொஞ்சம் தருவீரா?'' என்று ஆவலுடன் கேட்டது. அது கேட்ட குரங்கு முதலையை முறைத்துப் பார்த்தது. பின்பு இரக்கப்பட்டுக் கொஞ்சம் நாவல் பழங்களைப் பறித்து அந்த முதலையின் வாயில் போட்டது. முதலைதானும் தின்று விட்டு கொஞ்ச நாவற்பழங்களை எடுத்துச் சென்று தன் மனைவிக்கும் கொடுத்தது.

நாவற் பழத்தை ருசித்துச் சாப்பிட்ட பெண் முதலைக்கு அடிமனதில் ஒரு கெட்ட எண்ணம் உதயமாயிற்று. ''இவ்வளவு இனிமையான நாவற்பழத்தைச் சாப்பிடும் குரங்கின் ஈரல் எவ்வளவு ருசியாயிருக்கும்? நினைக்கும் போதே நாக்கில் எச்சில் ஊறுகின்றதே!'' என்று எண்ணி ஏங்கியது தன் ஆசையை இனியும் காலதாமதம் செய்யாது நிறைவேற்றி வைக்கும்படி ஆண் முதலையிடம் கூறியது.

அன்று முதல் முதலை தக்க தருணம் பார்த்துக் காத்திருந்தது. ஒரு நாள் குரங்கைப்பார்த்து ''குரங்கு நண்பரே! நீர் இந்தக் குளத்தைச் சுற்றிப் பார்க்கவில்லையா? வாரும் வந்து எனது முதுகின் மேல் ஏற்றிக் கொள்ளும். நான் அப்படியே மெதுவாக தண்ணீரின் மேல் நீந்திச்சென்று சுற்றிக் காண்பிக்கிறேன்!'' — என்றது.

வெள்ளை உள்ளம் படைத்த குரங்கு முதலையின் வஞ்சக எண்ணத்தைப் புரியாமல் குளத்தைச் சுற்றிப் பார்க்கும் ஆசையில் கொஞ்சமும் யோசிக்காமல் முதலையின் முதுகில் பாய்ந்து ஏறிக்கொண்டது.

''நண்பரே! எப்படி தண்ணீர் மேல் சவாரி நன்றாக இருக்கிறதா?'' — என்று கூறிக்கொண்டே தண்ணீரில் நீந்திச் சென்றது முதலை. குளத்தின் நடுவில் போனதும் 'இனி எப்படிக்குரங்கு தப்ப முடியும்? இன்று நமக்கு வேட்டைதான்' என்ற மகிழ்ச்சியில் திளைத்தது முதலை.

உடனே குரங்கைப் பார்த்து, ''ஏ, குரங்கே! உன் இஷ்ட தெய்வத்தை வணங்கிக் கொள். இப்போது நான் உன்னைக் கொன்று தின்னப் போகிறேன்'' — என்றது முதலை.

இதைச் சற்றும் எதிர்பார்க்காத குரங்கு ஒருவாறு தன்னைச் சுதாகரித்துக் கொண்டு ''எதற்காக என்னைக் கொல்லப் போகிறாய்? நான் செய்த குற்றம்தான் என்ன?''— என்று கவலையோடு கேட்டது.

அதற்கு முதலை, ''ஹஹ்ஹா! அதுவா? சொல்கிறேன். இனிய நாவலபழம் தின்று வளர்ந்த உனது ஈரலைத் தின்ன எனது மனைவி ஆசைப்படுகிறாள். அவ்வளவுதான்'' — என்றது.

அது கேட்ட குரங்கு சற்றும் தன் பயத்தை வெளிக்காட்டாமல்''அடடா! இதை முன்னமேயே சொல்லியிருக்கக் கூடாதா முதலையாரே? தண்ணீரில் சவாரி போகும்போது விழுந்து விடுமே என்று நான் என் ஈரலை நாவல் மரத்தில் அல்லவா வைத்துவிட்டு வந்து விட்டேன்!''—என்று கூறியது.

அதனைக்கேட்டதும் முதலைக்குத் தூக்



கிவாரிப்போட்டது. ''ஓ! அதுவும் அப்படியா? இப்போது என்ன செய்யலாம்?'' என்று கூறி யோசித்தது.

முதலையை யோசிக்கவிடாமல், ''முதலையாரே! விரைவில் கரைக்கு நீந்திச் செல்லும். நான் கரைக்குப்போனதும் மரத்தில் வைத்திருக்கும் ஈரலை எடுத்து உம்மிடம் தந்து விடுகிறேன்''—என்றது குரங்கு.

புத்திகெட்ட—மூர்க்ககுணம் கொண்ட—முதலை குரங்கின் பேச்சைநம்பி மறுபடியும் கரையை நோக்கிவந்தது. குரங்கோ முதலையின் அறியாமையை எண்ணி மனதுக்குள் சிரித்துக் கொண்டது. எப்படியும் அதனிட

## நீதிக்கதை

மிருந்து தப்புவதிலேயே குறியாக இருந்தது. வேகமாக நீந்திய முதலை கரையை அண்மித்ததும், முதலையின் முதுகில் இருந்த குரங்கு தாவிப்பாய்ந்து மரத்தின்மேல் ஏறிக் கொண்டது.


''ம்! சீக்கிரம் நான் போகவேண்டும், ஈரலை எடுத்துக்கொடு''—என்று உறுக்கியது முதலை.

குரங்கு மரத்தில் இருந்தபடியே''ஏ! மூட முதலையே! யாராவது எங்காவது ஈரலை வேறாக எடுத்து வைப்பார்களா? நான் உன்னிடமிருந்து தப்புவதற்காக அல்லவா அவ்வாறு சொன்னேன். நீயும் நம்பி விட்டாய். உன்னுடைய முட்டாள் தனத்தை என்னென்பது?''—என்று சொல்லி நகைத்தது.

முதலை அவமானம் தாங்க முடியாமல் தண்ணீருக்குள் ஓடி மறைந்தது.

(இக்கதையிலிருந்து நீங்கள் என்ன அறிந்து கொண்டீர்கள் என்பதை உங்கள் ஆசிரியரிடம் தெரிவியுங்கள்.)

- ஸ்ரீ. குவலயா -




## நொடிப் பொழுது

1. திறந்து திறந்து மூடினாலும் சிறிதும் ஓசை கேட்காது. அது என்ன?
2. எப்போதும் வயிறு உப்பியே இருப்பாள். அவள் யார்?
3. உனக்குச் சொந்தமானது. ஆனால் உன்னை விட மற்றவர்கள் அதிகமாய் உபயோகிப்பார். அது என்ன?
4. ஆயிரம் பேர் அணி வகுப்பார். ஆனாலும் தூசி கிளம்பாது, அவர்கள் யார்?
5. அங்குல மாட்டுக்கு அரை மைல் வால். அது என்ன?
6. கனலை ஏற்றியதும் கண்ணீர் வடிப்பாள். கண்ணீர் வடித்ததும் கரைந்து போவாள். அவள் யார்?
7. மூன்று கால் உள்ளது; முக்காலியல்ல, முறுக்கு போன்றது; தின் பண்டமல்ல. முதுகிலே விழுவது; அடியும் அல்ல. அது என்ன?
8. கருமை நிறம் உடையது. காகம் அல்ல. இனிய குரல் உடையது; குயிலும் அல்ல. பெட்டியிலே அடங்கிவிடும்; பாம்பும் அல்ல. அது என்ன?

- ப. ரமேஸ்சுதன்

விடைகள்

1. கண் இமை. 2. பானை. 3. பெயர். 4. எறும்புக் கூட்டம் 5. ஊசியும் நூலும். 6. மெழுகுவர்த்தி. 7. தலைப்பின்னல். 8. இசைத்தட்டு.

## ஊஞ்சல்

ஊஞ்சல் ஒன்றைக் கட்டவே
உயர் மரத்தில் ஏறினேன்.
மாமரத்தின் கிளை ஒன்று
மண்ணை நோக்கி நின்றது.
மன மகிழ்ந்து நானுமே
கிளையில் கயிற்றைக்
கட்டினேன்.
ஊஞ்சல் மீது ஆடவே
ஓடி வந்தாள் தங்கையும்
உவகையுடன் ஆடவே.
அந்த ஊஞ்சல் மீது ஏறி
விண்ணை நோக்கித் தாவினாள்.
பறவை போலப் பறந்தனள்
பாட்டும் ஒன்று பாடினாள்.
ஆனந்தங் கொண்டு நானும்
அவளை ஊன்றித் தள்ளினேன்.
அண்ணா வேண்டாம் என்று
அவள் அச்சத்துடன்
அலறினாள்.
சிரித்தபடி நானும் எந்தன்
சிறிய தங்கையைத் தூக்கினேன்.

- கோகு -

## அம்மாக் கோழி அழைக்குது!

பஞ்சு மேகந்தன்னில் பருந்து
வட்டம் போட்டுத் திரியுது!
குஞ்சுக் கோழிகண்டு பயந்து
''கீச்சுக் கீச்சு'' என்குது!
அஞ்சிடாமல் வருமென்று
அம்மாக் கோழியழைக்குது!
பஞ்சுக் கோழிக்குஞ்சு ஓடி
[illegible]

## உளவியல் மருத்துவர் 'ஸ்டிரைக்': மனநோயாளர்கள் தற்கொலை!!

உள்நாட்டுக் குழப்பம் மற்றும் வெளிநாடுகளுடனான போர்களினால் அமைதியிழந்த ஜெருசலேம் நகரத்து மக்கள் தற்போது உளவியல் நிபுணர்கள் வேலை நிறுத்தத்தால் அதிக அளவில் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

இஸ்ரேலில் மனநோய் நிபுணர்கள் அதிக ஊதியம் கேட்டு இரண்டு மாதங்களாக வேலை நிறுத்தம் செய்து வருகிறார்கள். இதன்காரணமாக மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் சிகிச்சை ஏதும் இன்றி தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

கடந்த மே—ஜூன் மாதங்களில் 60 பேர் இவ்வாறு தற்கொலை செய்து கொண்டார்கள். ஜூலை முதல்வாரத்தில் மட்டும் 7 பேர் தற்கொலை செய்து கொண்டார்கள். மனநோயால் பாதிக்கப்பட்டவர்களால் ஏற்படும் வன்முறை நிகழ்ச்சிகள் மே—ஜூன் மாதங்களில் 80 சதவிகிதம் அதிகரித்துள்ளது.

இதற்கிடையே மனநோய் டாக்டர்களின் கோரிக்கையை இஸ்ரேல் அரசு நிராகரித்து விட்டது.

## கமீலா பிறந்த தினம் சார்ள்ஸ் வீட்டில்!

இங்கிலாந்து இளவரசர் சார்ள்ஸின் இல்லத்தில் அவரது காதலி கமீலா தனது ஐம்பதாவது பிறந்த நாளை அண்மையில் வெகு விமரிசையாகக் கொண்டாடியிருப்பது அவர்களின் காதல் விவகாரத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

இந்த விழாவிற்கு அரச குடும்பத்தினர் உட்பட எண்பது பேர் மட்டுமே அழைக்கப்பட்டிருந்தனர்.

கமீலாவின் பிறந்த நாள் விழாவிற்கு முதலாவதாக வந்தவர் கமீலாவின் முன்னாள் கணவர் பார்க்கர் பவுல்ஸ். இவர் தனது தற்போதைய மனைவியுடன் விழாவுக்கு வந்தார். விழாவுக்கு வந்தவர்களை கமீலா சார்ள்ஸ் வீட்டு வாசலில் வந்துநின்று புன்னகையுடன் வரவேற்றார்.

விழாவுக்கு சார்ள்ஸின் முன்னாள் மனைவியான டயானா அழைக்கப்படவில்லை. சார்லஸ்-கமீலா உறவு 20 ஆண்டுகளுக்கும் மேலாக உள்ளது. கமீலாதான் தன் திருமண வாழ்க்கைபாழாகக் காரணம் என்று டயானா குற்றம் சாட்டியிருந்தார்.

கமீலா தன் பிறந்த நாளை இளவரசர் சார்ள்ஸின்அரண்மனையிலேயே நடத்தியிருப்பது இவர்களது விவகாரத்தில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இது சார்ள்ஸ்-கமீலா திருமணத்திற்கான முன்னோடி நிகழ்ச்சி என்று பலர் கருதுகின்றனர்.

## வரதட்சணை கொடுமை!

வரதட்சணை கேட்டு கர்ப்பிணிப் பெண்ணான மனைவியைக் கொடுமைப் படுத்தி மனைவியின் உடல் முழுவதும் ஊசியால் குத்திக் கொலை செய்ததாகக் கூறப்படும் கணவன், மாமியார் உட்பட அவர்களின் முழுக் குடும்பமுமே கைது செய்யப் பட்டிருக்கின்றது.

தமிழ் நாடு அரக்கோணம் நெமிலி அருகே கடந்த வாரம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இருபத்தியையாயிரம் ரூபா வரதட்சணை கேட்டு கன்னம்மா என்ற இளம் பெண்ணைக் கொலை செய்ததாக அவரின் கணவர் வேணுகோபால் (வயது 23), தாயார் சந்திரா (வயது 42), தகப்பன் ஜெயராமன் (வயது 60) ஆகியோர் நெமிலி பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

## பயணம்.....

(V ஆம் பக்கத் தொடர்)

நான் அவன். விழிப்பிலும் கூட கனவுகள் போல நினைவுகள் ஓடும்.

தாங்கமால் அன்று நங்கூரத்தைப் போட்டுவிட்டும் இழுத்துப் போர்த்தபடி ஆசைக்கு உறங்கிவிட்டான். எழுந்து வெளியே வந்ததும் சுள்ளெனச் சூரியன் சுட்டான்.

ஒன்று மறைய ஒன்றாக வரிசையில் கப்பல்கள் தென்படத் தொடங்கின. ஆசைக்கு சமையல் செய்து நல்ல சாப்பாடு ஒன்றைச் சாப்பிட்டான். இதற்கிடையில் டின் உணவுகள்வெறுத்தநிலைமை.

அடுத்து வரும் நாள்கள் பயணத்தில் சாதகம் ஆகவே அமைந்துவிட்டன. இதமான காற்று சீரான வேகம் ஆனால் சுள்ளென்ற சூரியன் அவனின் வெண்ணிறத் தோலை அள்ளத் தொடங்கி விட்டன.

தொடர்ந்து வந்து மோதும் அலைகள்- அலைகள்- அலைகள். எத்தும் நீரில் ஈரம் காயாமல் நனையும் மேனி. உப்பும் வெயிலும் சேர்ந்து காய்ச்சிக் கருவாடு போடச் சுருங்கிப் போன தோல்.

எத்தி, எத்தி எறியும் படகில் இருந்து புண்ணாய்ப் போன ஆசனம் - துடைகள் எல்லாவற்றையும் எதிர் பார்த்துக் கொண்டுவந்த சுரும்பூச்சி வகைகள் கைவிட்ட நிலைமை.

வேதனையும் - சோதனையும் வாட்டத்தொடங்க தனிமை என்ற தவிப்பு வராமலா விடும்? மனிதர்களைக் கனவில் மட்டுமே காணக் கூடிய நிலைமை. அதுவும்கூட சாதாரண மனிதர்களாக இல்லை, ஏதோ புராதன காலத்து ஆதிவாசிகள் போல இராட்சத ரூபங்கள். இப்படியான வேளை - மன நிலை புரியாமல் இன்னும் தூரத் தூர ஆழ்கடலை நோக்கி இதமாக விரையும் படகு. தானே தனக்குத் தேடிக் கொண்ட வினை என்று இதைச் சொல்லவதா?

(தொடரும்)

## இந்த வார...

(VIII ஆம் பக்கத் தொடர்)

இராகு, கேது மாற்றமும் ஏழரைச் சனீஸ்வரனின் தாக்கமும். அடிக்கடி சலனத்தைக் கொடுப்பதனால் தொழில் ஸ்தானத்தில் அவதானமாக இருக்கவும். தாரவழியிலும், சகோதர உறவிலும் விரிசல் ஏற்படலாம். பொருள் செலவுகள். அதிகரிக்கும் மனப்பயம் கொடுக்கும். முருகப்பெருமானை வழிபட்டு வரவும்.

மீனம்: உங்கள் நிலையில் உறுதி தளராது செயற்படுங்கள் மனைவி வழியினரால் உதவிகள் கிடைக்கும். வெளிநாட்டிலிருந்து நற்செய்திகள் வரும். கொடுக்கல் வாங்கலில் குறை கேட்கவேண்டிவரும். சகோதரங்கள் மனம் புழுங்குவர். எதற்கெடுத்தாலும் தடுமாற்றமும், மந்த நிலையும் ஏற்பட்ட குழப்பங்களைக் கொடுத்தபடி இருக்கும். தெய்வ வழிபாடும் கிரகங்களுக்கு அர்ச்சனைகளும் செய்து வர சுகம் கொடுக்கும். மாற்றங்கள் ஏற்படும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிசுவின் உன்னத உணவு

## தாய்ப்பால் மட்டும் தான்!





பிரசவத்துடன் தாய்க்குப் பால் சுரக்கத் தொடங்குகின்றது. ஆகவே, தாய்ப்பால் பிரசவத்துடன் இணைந்த ஒன்றெனக் கூறலாம். எனவே அது குழந்தைக்கு உரியஒன்று; அதன் பிறப்புரிமை. இந்த உரிமையை நாம் குழந்தைக்குக் கட்டாயம் கொடுத்தாக வேண்டும்.

பெண் யானை ஒரு குட்டியை ஈன்றால், அந்த யானைக் கூட்டத்திலுள்ள சகல பெண் யானைகளுக்கும் பால் சுரக்குமாம்; அது பிள்ளைப் பாசத்தினால் ஏற்படும் செயல்.

**ஓகஸ்ட் முதல் வாரம் உலகத் தாய்ப்பால் ஊட்டல் வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டிருப்பதுதெரிந்ததே. அதைஒட்டி இந்தக் கட்டுரை இங்கு பிரசுரமாகின்றது.**

தன் பிள்ளைப் பாசத்தைக் காட்டத் தாய்ப்பால் போன்ற மேன்மையும் பெறுமதியும் மிக்க ஒன்று இந்த உலகில் இல்லை. எப்படிப் பார்த்தாலும் செயற்கைப் (புட்டிப்) பால்மா, தாய்ப்பாலுக்கு ஒருபோதும் ஈடாகாது. தாய்ப்பாலில் போஷாக்கு, நோய்எதிர்ப்புச் சக்தி, தாய்க்கும்— பிள்ளைக்கும் ஒரு பிணைப்பு ஆகிய யாவும் அடங்கியுள்ளன.

உலகம் எவ்வளவு தான் அபிவிருத்தி அடைந்திருந்தாலும், தாய்ப்பாலுடன் ஒப்பிடத்தக்க செயற்கைப் பால்மா எதுவும் இன்னும்



உற்பத்தியாகவில்லை. எனவே தாய்ப்பால் இயற்கையின் அருங்கொடை, அதற்குச் சமனான வேறு எதுவும் இல்லவே இல்லை.

### முதல் 30 நிமிடத்துள் தாய்ப்பால் ஊட்ட ஆரம்பியுங்கள்

குழந்தை பிறந்த முதல் 30 நிமிடத்துள் அல்லது எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில், தாய்ப்பால் ஊட்டத் தொடங்க வேண்டும். பிள்ளை பிறந்ததும் பால் சுரத்தலானது, தாய்க்கும், சேய்க்கும் ஒரு மானசீகப் பிணைப்பை ஏற்படுத்த வழிகோலுகிறது. பாலை உறிஞ்ச, உறிஞ்ச பால் ஊறிச் சுரக்கும் வேகமும் அதிகரிக்கிறது.

பிரசவத்தை அடுத்த சில தினங்களில் சுரக்கும் கடும்புப் பாலைக் கட்டாயம் குழந்தைக்குக் கொடுக்க வேண்டும். இந்தப் பால் சிறிது தடித்ததாகவும், மஞ்சள் நிறத்திலும் காணப்படும். அது போஷாக்குச் சத்து நிறைந்தது மட்டுமல்ல; குழந்தைக்கு நோய் எதிர்ப்புச்சக்தியையும்வழங்குகிறது. இக் கடும்புப்பால் மிகக் குறைந்த அளவிலேயே சுரந்தாலும், பிறந்த குழந்தையின் போஷாக்கு மேம்பாட்டுக்கு அது நன்கு போதுமானது.

### முதல் 4 மாத காலத்துள் தாய்ப்பால் மட்டுமே ஊட்டுங்கள்

குழந்தைகளுக்கு நான்கு மாதம் நிறையும் வரை தேவையான முழுப் போஷாக்கையும், நீராகாரத்தையும் வழங்குவது தாய்ப்பாலே. எமது நாட்டைப் போன்ற வெப்ப வலய நாடுகளில் பிறந்து வளரும் பிள்ளைகளுக்குக் கூடத் தாய்ப்பாலை விட மேலதிகத் தண்ணீரோ வேறு நீராகாரங்களோ தேவை இல்லை. குழந்தைக்கு பால் தேவைப்படும்போதெல்லாம் இரவு பகல் என்று பாராது தாய்ப்பாலை ஊட்டுங்கள். அதன் வளர்ச்சிக்கு இது அத்தியாவசியம். வயிற்றுப் போக்கு, இருமல், தடிமல், காதுவலி மற்றும் சரும நோய்கள் குழந்தைக்கு வராது தடுக்க தாய்ப்பால் உதவுகிறது.

குளுக்கோஸ், கொத்தமல்லி, தே நீர், போன்றவற்றை வழங்குவதால், சிசுவின் உடலில் நோய்க் கிருமிகள் பரவி அது நோய்வாய்ப்படும் சாத்தியம் அதிகரிக்கிறது. எனவே வீணாக உங்கள் அன்புக் குழந்தைக்கு ஏன் ஆபத்தை வரவழைக்கிறீர்கள்?

### எல்லாத் தாய்மாருக்கும் தாய்ப்பாலூட்ட முடியும்

தாய்மாருக்குத் தம்மிடம் சுரக்கும் பாலின் அளவு பற்றிச் சந்தேகம் எழுவது இயற்கை. அத்தகைய சந்தர்ப்பங்களில் தாய்மாருக்கு நம்பிக்கையும், உற்சாகமும் ஊட்ட வேண்டியது குடும்பத்தில் உள்ள ஏனையோரது கடமை. தரயின் உடல், மார்பு என்பன அளவில் சிறிதாக இருந்தாலும் கூட சுரக்கும் பால் அளவில் குறையாது. வெளி வேலை செய்யும் ஒரு தாய், கிரமம் தவறாது இரவு வேளைகளில் பாலூட்டி வர வேண்டும். பால் சுரத்தல் தொடர்ச்சியாக இருக்க இது உதவும். வேலைக்குப் புறப்படும் வேளையிலும் வேலை முடிந்து வந்தவுடனும் குழந்தைக்குப் பாலூட்ட வேண்டும்.

### செயற்கைப் பொருள்கள் வேண்டாம்

நீங்கள் உண்மையான தாய் எனில், செயற்கைச் சூப்பிகள் எவற்றையும் பாவிக்கக் கூடாது. குழந்தை முலைக்காம்பை உறிஞ்சும் நாட்டம் குறைவதும், நோய்க் கிருமிகள் அதன் உடலுட் செல்வதும் சூப்பிகளால் ஏற்படும் விளைவாகும்

### இரு வருடங்கள் வரை தாய்ப்பால் கொடுங்கள்

குழந்தை பிறந்த முதல் 4 மாத காலத்துள் தாய்ப்பாலை மட்டுமே கொடுக்க வேண்டும். அதன் பின்னர்
(XII ஆம் பக்கம் பார்க்க)

# ஒரு புரட்சியாளனின்.....

(III ஆம் பக்கத் தொடர்)
'ஸ்ரெச்சர்' ஒன்றில் அவசர அவசரமாகக் கொண்டு வந்து சேர்த்த கெரில்லா வீரனின் சடலத்தில் காணப்பட்ட அதே கறுப்பு இடுப்புப் பட்டி அந்த எலும்புக் கூட்டில் காணப்பட்டது. அதனை அவர் உறுதி செய்தார்.

படையினரால் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்ட சடலம் சே குவரா என்கின்ற மார்க்சிய கெரில்லாத் தலைவனுடையது என்பதை அப்போது தான் ஓரளவு அறிந்து கொண்டதாகவும் ஒஸினாகா தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சே குவராவின் எலும்புக் கூட்டை நிரூபிக்கும் நோக்கில் நிபுணர்கள் குழுவினர் தீவிர ஆய்வுகளை ஆரம்பித்தனர்.

புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட இராணுவ ''ஜக்கெற்'' ஒன்றை சே குவரா கைதான பின்னர் எடுக்கப்பட்ட புகைப்படம் ஒன்றில் அவர் அணிந்திருக்கக் காணப்பட்ட ஜக்கெற்றுடன் ஒப்பிட்டு நுணுக்கமாக ஆராய்ந்த போது அவை இரண்டும் ஒன்றாக இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டது.

கெரில்லாக்களின் புகைப்படங்களுடன் அவர்களது மண்டை ஓடுகள் கணனியின் உதவியுடன் ஒப்பிடப்பட்டு முடிவுகள் பெறப்பட்டன. அவையும் சே குவராவின் மண்டை ஓட்டை உறுதிப்படுத்தின.

பொலீவிய இராணுவத்தினரால் 1967 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட மருத்துவ அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தபடி சே குவராவின் உடலில் துப்பாக்கிக் குண்டுகள் துளைத்த பகுதிகள் எலும்புக் கூட்டில் காணப்பட்ட சூட்டுக் தடயங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டன. அதுவும் சே குவராவின் எலும்புக் கூட்டை அடையாளம் காட்டியது.

இவை எல்லாவற்றையும் விட 'இலக்கம்-2' எனக்குறிப்பிடப்பட்ட எலும்புக் கூட்டின் இரு கைகளும் துண்டிக்கப்பட்டுக் காணப்பட்டன. கொல்லப்படுவதற்கு முன்னர் சே குவராவின் கரங்கள்துண்டிக்கப்பட்டதாக முன்னரே வெளியாகியிருந்த துப்புத் தகவல் ஒன்றை அது உறுதி செய்தது.



கொல்லப்படுவதற்கு முன் கைதான நிலையில் சே குவரா.

இறுதியில் 'இலக்கம்-2' எனக் குறிக்கப்பட்ட எலும்புக்கூட்டுத் தொகுதி கெரில்லாத் தலைவர் சே குவராவினுடையதுதான் என்பதை நிபுணர்கள் குழுவினர் உறுதிப்படுத்தினர்.

கடந்தமாதம் 10ஆம் திகதி நிபுணர்களின்முடிவு உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்பட்டபோது அங்கு கூடியிருந்த கியூபா நாட்டவர்கள் உணர்ச்சியைக் கட்டுப்படுத்த முடியாது கண்ணீர் சிந்தினர்.

கியூபாவில் மண்ணின் மைந்தன் எனப் போற்றப்பட்ட சே குவராவின் எலும்புக்கூடு அடங்கியபேழை கடந்த மாதம் 13 ஆம் திகதி கியூபா நாட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்டது. பேழையை ஏற்றிச் சென்ற இராணுவ விமானம் ஹவானாவுக்கு அருகே இராணுவ தளம் ஒன்றில் தரையிறங்கியபோது அங்கே அவருக்குப் பூரண இராணுவ மரியாதை செலுத்தப்பட்டது.

### சே குவராவின் இறுதி நாள்கள்

கியூபாவில் இருந்து புரட்சிகர கெரில்லா யுத்தத்தை லத்தீன் அமெரிக்க நாடுகளுக்கு விரிவுபடுத்திய சே குவரா 1966 ஆம் ஆண்டில் தமது அணியினருடன் பொலீவியாவின் தென்கிழக்குப்பகுதி ஊடாக அந் நாட்டினுள் நுழைந்தார்.

கரடுமுரடான மலைத் தொடர்களிலும், அடர்ந்த காடுகளிலும் தலைமறைவாக இருந்து கொண்டு பொலீவிய இராணுவத்துக்கு எதிராகத் துணிகரத் தாக்குதல்களை அவர்கள் நடத்திவந்தனர்.

வெளிநாட்டுப் புரட்சிக் குழுக்களின் தலையீட்டை முறியடிக்க பொலீவிய இராணுவம் அமெரிக்காவின் உதவியுடன் [illegible] நடவடிக்கைகளை எடுத்தது;

இராணுவத்துக்கு அஞ்சி உள்ளூர் மக்கள் சே குவராவின் கெரில்லாக்களுக்கு ஆதரவு வழங்கத் தயங்கினர்.

கம்யூனிஸ்டுக்களின் உதவியுடன் தனது கெரில்லா நடவடிக்கைகளை விரிவுபடுத்த சே குவரா எடுத்த முயற்சிகள் எதிர்பார்த்த வெற்றியை அளிக்கவில்லை.

1967 ஆம் ஆண்டு ஒக்ரோபர் 7 ஆம் திகதி உருளைக் கிழங்கு பயிரிடும் விவசாயி ஒருவனால் கொடுக்கப்பட்ட தகவலை அடுத்து சே குவராவும் அவரது சகாக்கள் 17 பேரும் சுரங்கப்பகுதி ஒன்றினுள் வைத்து பொலீவியப் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டனர்.

கடும் துப்பாக்கிச் சமரின் பின்னர் சே குவராவும் அவரது சகாவான வில்லி என்பவரும் படையினரிடம் சிக்கினர்.

சே குவரா கைது செய்யப்பட்டது உறுதிப்படுத்தப்பட்டதும் நாடு முழுவதும் இராணுவத்தினர் அந்த வெற்றியைக் கொண்டாடினர்.

தம்மிடம் சிக்கிவிட்ட சே குவராவை என்ன செய்வது என்பதில் பொலீவிய இராணுவத்தலைமை உறுதியான முடிவை எடுக்க முடியாமல் திண்டாடியது. அவரைக் கொல்ல வேண்டும் என்று ஒரு சாரார் வற்புறுத்தினர். பொலீவியாவில் மரண தண்டனை வழங்கும்வழக்கம் இல்லை. அவரைப் பாதுகாப்பாக சிறைவைக்கக்கூடிய சிறைச்சாலை வசதியும் அங்கு இருக்கவில்லை.

சே குவராவை சீ. ஐ. ஏயிடம் ஒப்படைத்து நாட்டுக்கு வெளியே அவரைச் சிறை வைக்குமாறு தீவிரப்போக்குடைய அதிகாரிகள் கோரினர்.

இது விடயத்தில் வெளிநாட்டு நிர்ப்பந்தங்கள் ஏற்படுவதற்கு முன்னர் சே குவராவைக் கொன்றுவிட பொலீவியத் தலைமை முடிவு செய்தது.

### லொத்தர் மூலம் சிப்பாய் தெரிவு

தலைநகர் லாபாஸில் இருந்து விடுக்கப்பட்ட உத்தரவின் படி சே குவராவைக் கொல்வதற்கு சிப்பாய் ஒருவன் லொத்தர் மூலம் தெரிவு செய்யப்பட்டான்.

1967 ஒக்ரோபர் 9 ஆம் திகதி லாஹிகுரா என்னும் இடத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் வைத்து சே குவரா சுட்டுக் கொல்லப்பட்டார். துப்பாக்கிக் குண்டுகளால் துளைக்கப்பட்ட அவரது சடலம் அங்கிருந்து வெல்லகிரண்டியில் உள்ள இராணுவத் தளம் ஒன்றுக்கு ஹெலி மூலம் கொண்டு செல்லப்பட்டது.

### சே குவராவின் கடைசி வார்த்தைகள்

கொல்லப்படுவதற்கு முன்னர் சே குவரா கடைசியாகக் கூறிய வார்த்தைகளை பொலீவிய இராணுவத்தின் எட்டாவது படைப்பிரிவின் உளவுத்துறை அதிகாரியான கேணல் ஆர்னல்டோ தமது உத்தியோக பூர்வ அறிக்கையில் வெளியிட்டார்.

அது பின்வருமாறு காணப்பட்டது.

''நீ என்னைச் சுடப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். இதிலிருந்து என்னால் தப்ப முடியாது. இந்தத் தோல்வி புரட்சியின் முடிவு அல்ல; அது தொடர்ந்து எங்கும் எதிரொலித்துக்கொண்டே இருக்கும் என்று பிடலிடம் சொல்லுங்கள்.

''...மறுமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து பிள்ளைகளின் படிப்பைக் கவனிக்குமாறு அபெஸ்டாவிடம் (சே குவராவின் மனைவி) கூறுங்கள்...''

சேகுவரா தனது கடைசி வார்த்தைகளில் கூறியபடி அவரது புரட்சிகர கெரில்லா யுத்தம் இன்றும் கூட உலகின் பல நாடுகளில் எதிரொலித்துக்கொண்டே இருக்கிறது. ★

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வட கொரியா எதிர்நோக்கும் சவால்கள்!

**உலக உலா**

என்.பி.சீலன்

உலகிலேயே அதி பதற்றம் நிறைந்ததும் உச்சப் பாதுகாப்புடையதுமான எல்லைகளைக் கொண்டுள்ள வட கொரியா மீது சர்வதேச கவனம் தற்போது மீண்டும் திரும்பி உள்ளது.

1953 ஆம் ஆண்டு கொரிய யுத்தம் முடிவடைந்து 44 ஆண்டுகள் கழிந்து விட்ட போதிலும் வட கொரியா தொடர்ந்து யுத்த நிலையிலேயே இருந்து வருகிறது.



வட கொரிய அதிபர் கிம் - ஜோங் - இல்

இதன் காரணமாக தென் கொரியா மாத்திரம் அல்ல முழு கொரிய தீபகற்பமே பல தசாப்த காலமாக அமைதி இழந்து காணப்படுகிறது.

## அடுத்தடுத்து ஏற்பட்ட வெள்ளப் பெருக்கு

சர்வதேச கவனம் தற்போது வட கொரியா மீது திரும்புவதற்கு அங்கு நிலவும் பஞ்சமும் பட்டினி நிலையுமே காரணம் ஆகும்.

தென் கொரியாவின் இறைமைக்கும் சுதந்திரத்துக்கும் பெரும் அச்சுறுத்தலாக இருந்து வந்த வட கொரியா தற்போது அங்கு நிலவும் பட்டினி நிலை காரணமாக அமெரிக்கா, ஜேர்மனி உட்பட மேற்கு நாடுகளின் உதவியை நாட வேண்டிய நிலையில் இருந்து வருகிறது.

1995 ஆம் ஆண்டும் 1996 ஆம் ஆண்டும் வடகொரியாவில் கடும்மழை காரணமாகப் பெரும் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டது.

பூகோள ரீதியாக வட கொரியாவின் நிலப்பரப்பில் 80 சத வீதம் விவசாயத்துக்கு உகந்தது அல்ல. 20 சதவீத நிலப்பரப்பிலேயே விவசாயம் — பிரதானமாக கோதுமை — செய்கை பண்ணப்பட்டு வருகிறது.

அடுத்தடுத்து இரண்டு ஆண்டுகள் ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கு காரணமாக விவசாய நிலங்கள் அழிந்து போயின. வெள்ளம் அள்ளிச் சென்றதால் நிலம் வளம் இழந்து பயனற்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக பெரும் பாலான உரத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு விட்டன. வளம் இழந்த விவசாய நிலங்களை உரமூட்டும் முயற்சியும் வெற்றி அளிக்கவில்லை. தற்போது வடகொரியாவில் 20 முதல் 30 சத வீத தொழிற்சாலைகளே இயங்குகின்றன.

வட கொரிய அரசு பங்கீட்டு அடிப்படையில் மக்களுக்கு உணவை விநியோகித்து வருகிறது. உணவுக்குத் தட்டுப்பாடு அதிகரித்து வருவதால் இந்த பங்கீட்டு அளவும் குறைக்கப்பட்டு விட்டது.

ஆரம்பத்தில் ஒருவருக்கு 700 கிறாம் உணவு வழங்கப்பட்டு வந்தது. தற்போது அது 100 கிறாம் முதல் 150 கிறாம் வரை குறைக்கப்பட்டுள்ளது. தொழிற்சாலைகள் மூடப்பட்டுள்ளதால் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை இழந்துள்ளனர்.

## அமெரிக்கா உதவுமா?

தற்போதைய பட்டினி நிலையில் வட கொரியாவுக்கு உதவி வழங்குவதற்கு அமெரிக்காவில் எதிர்ப்பு இருந்து வருகிறது.

இது மனிதாபிமானப் பிரச்சினையாக இருப்பதால் அரசியலுடன் இதனைக் கலக்கக் கூடாது என்று அமெரிக்காவில் உள்ள பெரும்பாலான அரச சார்பற்ற தொண்டர் நிறுவனங்கள் கருத்துத் தெரிவித்து வருகின்றன. வட கொரியாவுக்கு உதவி வழங்குவதை தென் கொரியாவும் எதிர்க்கிறது.

1989 இல் சோவியத் யூனியன் பிளவு பட்டு 1990 இல் இரு ஜேர்மனிகளும் இணைக்கப்பட்ட போது, கொரிய இணைப்பும் சாத்தியமாகிவிடும் என்று கருதப்பட்டது.

ஆனால் ஆறு ஆண்டுகள் கடந்தும் இணைப்பு என்பது இன்னும் நினைத்துக்கூடப் பார்க்க முடியாத எட்டாத தூரத்தில் இருந்து வருகிறது.

## ஜேர்மனியும் கொரியாவும்

ஜேர்மனி இணைக்கப்பட்ட போது கிழக்கு ஜேர்மனி மிகவும் வறுமை நிலையில் இருந்தது. 4 மேற்கு ஜேர்மன்யர்கள் 1 கிழக்கு ஜேர்மனியரைப் பராமரிக்க வேண்டிய பொருளாதார ஏற்றத் தாழ்வு அப்பொழுது நிலவியது.

தற்போது கிழக்கு ஜேர்மனியைவிட மோசமான நிலையில் வட கொரியா இருந்து வருகிறது. வட கொரியாவை விட தென் கொரியா 10 மடங்கு செல்வம் மிகுந்த நாடு.



ஊட்டச் சத்துக் குறைவு ஆபத்தை எதிர் நோக்கும் வட கொரிய சிறுவர்கள்.

எனினும் இந்த வறுமை நிலை வட கொரியாவின் போக்கை மாற்றவில்லை.

1994 இல் மரணமான வட கொரியாவின் சிற்பி எனப்படும் கிம் — இல் — சுங்கின் புதல்வர் கிம் — ஜோங் — இல் (Kim Jong IL) தென் கொரியா மீது எந்நேரமும் தாக்குதல் நடத்தலாம் என்று வட கொரியாவில் இருந்து தென் கொரியாவுக்குத் தப்பி வந்த வட கொரிய அதிருப்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கிம் — இல் — சுங் மரணமானபோது அறிவிக்கப்பட்ட மூன்றாண்டு துக்கதினம் தற்போது முடிவடைவதால் தென் கொரியா மீது வட கொரியா எந்நேரமும் பாயலாம் என்று அதிருப்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## அமெரிக்காவுக்கு வட கொரியாவே அச்சுறுத்தல்

சோவியத் யூனியனில் ஏற்பட்ட பிளவுடன் சர்வதேச அரங்கில் கெடுபிடி யுத்தம் முடிவுக்கு வந்த பின்னர் அமெரிக்காவின் கவனம் ஐரோப்பாவில் இருந்து ஆசியாவுக்குத் திரும்பியது.

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்ரன் கடந்த நவம்பர் தேர்தலில் வெற்றி பெற்று இரண்டாவது தவணையாகப் பதவி ஏற்ற போது, ஆசியாவில் வட கொரியாவே தொடர்ந்து சவாலாக இருப்பதாகத் தெரிவித்தார்.

கிம் — இல் — சுங் போன்று அவரது புதல்வர் கிம்— ஜோங் — இல்லும் வட கொரியாவை தொடர்ந்து யுத்த நிலையிலேயே வைத்திருக்க விரும்புகிறார்.

கடந்த செப்ரெம்பர் மாதம் வட கொரிய ஊளவு நீர் மூழ்கிக் கப்பல் ஒன்று தவறுதலாக தென்கொரியக் கரைக்கு வந்து விட்டது.

இந்த நீர்மூழ்கிக் கப்பலில் வந்தவர்கள் தென் கொரியாவின் மலைப் பகுதிக்குள் தப்பிச் சென்ற போதிலும் தென்கொரிய படையினர் தேடுதலின் போது அனைவரையும் சுட்டுக் கொன்று விட்டனர்.

## கிம் - இல் - சுங் காலத்தில் இருந்தே பகைமை உணர்வு

கிம் — இல் — சுங்கின் ஆட்சிக்காலத்திலேயே வட கொரியா தென்கொரியா மீது பகைமை உணர்வை வெளிக் காட்டி வந்தது.

1968 ஆம் ஆண்டு தென் கொரிய தலைநகரான சோலில் உள்ள ஜனாதிபதி மாளிகை மீது வட கொரிய உளவாளிகள் திடீர் தாக்குதல் நடத்தி ஜனாதிபதியைக் கொலை செய்ய முயன்றனர், எனினும் அந்த முயற்சி கை கூடவில்லை.

இதன் பின்னர் 1974 இல் தென் கொரிய ஜனாதிபதியின் மனைவி கொல்லப்பட்டார்.

1983 இல் பர்மாவில் தென் கொரிய ஜனாதிபதியின் விஜயத்தின் போது வட கொரிய உளவாளியால் வைக்கப்பட்ட குண்டு வெடித்ததில் சுமார் ஒரு டசின் பர்மிய அமைச்சர்களும் உயரதிகாரிகளும் கொல்லப்பட்டனர்.

1995 இல் வடகொரிய உளவாளி ஒருவர் தென் கொரியாவில் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றும் ஒருவர் கைதுசெய்யப்பட்டார்.

தென் கொரியத் தலைநகரான சோல் யுத்த சூன்யப் பகுதியில் இருந்து 50 கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதால் வட கொரிய ஊடுருவல்காரர்களினால் எந்நேரமும் ஆபத்துஇருந்துவருகிறது. அத்துடன் வடகொரியாவின் ஏவுகணை மற்றும் பீரங்கித் தாக்குதல் தூரத்திலேயே சோல் இருந்து வருகிறது.

## இணைப்புக்கு இரு வழிகள்

தற்பொழுது கொரிய இணைப்புக்கு இரு வழிகளே உள்ளன.

ஒன்று வடகொரியாவில் எவராவது கிம் — ஜோங் — இல்லின் ஆட்சியைக் கவிழ்த்து விட்டு தென் கொரியாவை உதவிக்கு அழைக்கலாம்.

இரண்டாவது வட கொரியா தென் கொரியா மீது படை எடுத்து அதனைக் கைப்பற்றி விட்டுத் தான் விரும்பியவாறு இணைப்புத் திட்டத்தை அமுல் செய்யலாம்.

தென்கொரியாவைக் கைப்பற்றித் தான் நினைத்த விதத்தில் கொரிய இணைப்பை ஏற்படுத்துவதே வடகொரியாவின் நோக்கம்:

வட கொரியாவில் உள்ள 10 லட்சத்துக்கும் மேற்பட்ட படையினரும் இதற்கான தயார் நிலையிலேயே இருந்து வருகின்றனர்.

ஆனால் தென் கொரியாவில் அமெரிக்கப் படைகள் இருக்கும் வரை இது சாத்தியப்படுமா?

தென்கொரியாவில் 37 ஆயிரம் அமெரிக்கப் படைகள் நிலை கொண்டுள்ளன.

இவற்றுக்குப் புறம்பாக அமெரிக்காவினால் நன்கு பயிற்சி அளிக்கப்பட்ட 6 லட்சத்து 60 ஆயிரம் தென் கொரியப் படைகளும் இருந்து வருகின்றன.

வட கொரியா தென் கொரியாவை இணைத்து தனது பழைய சகாவான சீனாவுடன் கூட்டுச் சேர்ந்து விட்டால் தற்போது வட கொரியாவிடமிருந்து எதிர் நோக்கும் நெருக்கடிகளை விடப் பல மடங்கு நெருக்கடிகளை அமெரிக்கா எதிர் நோக்கலாம்.

இதனாலேயே தென் கொரிய மீதான வட கொரியாவின் எந்தவித ஆக்கிரமிப்பு முயற்சிக்கும் அமெரிக்கா இடம் கொடாது என்று தெரிவிக்கப்படுகிறது. ★

---

# ஆங்கில மொழி....

(முதலாம் பக்கத் தொடர்)

கற்பிக்கும் ஆசிரியர்கள் தாம் கற்பிக்கும் போது அவ்வப் பாடங்களுடன் தொடர்பான கலைச் சொற்களை, முக்கிய பதங்களை, கருத்துக்களை, எண்ணக் கருக்களை ஆங்கிலத்திலும் அவ்வப்போது கூறுவதும் எழுதுவதும் மாணவரின் ஆங்கிலச் சொல்வளம் அதிகரிக்க உதவும் நடைமுறைகளாகும். குறிப்பாக விஞ்ஞான, கணித, சமூகவியல் பாடங்களில் இவை நிறையவுள. அங்ஙனம் கூறப்படுவதனால் — எழுதப்படுவதனால் — ஆங்கிலத்தில் மட்டுமல்லாமல் கற்பிக்கும் விடயத்தையும் மாணவர் திருத்தமாகவும் தெளிவாகவும் விளங்கிக் கொள்வர். விஞ்ஞானத்தில் வரும் கலைச் சொற்கள், விஞ்ஞானிகளின் பெயர்கள் தமிழ் வடிவில் கூறப்படும் போது அவை சரியான உச்சரிப்பை இழந்து விடுகின்றன. இருமொழிப் பாவனை இக் கஷ்டத்தைத் தவிர்க்க உதவுகின்றது. எந்தவொரு வகுப்பிலும் இம்முறை மாணவர்களுக்கு ஊக்கமளிக்கும் கற்றல் — கற்பித்தல் தொழிற்பாடாக அமைவதுடன் விடயத்தை இலகுவாக்கி நேரத்தை மீதப்படுத்தவும் உதவும்.

## கணித, விஞ்ஞான பாடங்களில்

ஆங்கிலமொழி அறிவை உயர்த்த இதனை இன்னுமொரு வழியாகக் கொள்ளலாம். பாடசாலைகளில் ஆங்கில பாடத்தினூடாகக் கற்ற ஆங்கிலத்திலும் பார்க்க ஏனைய பாடங்களினூடாகக் கற்ற ஆங்கிலமே அதிகம் என்பதை ஆங்கிலமொழியில் கற்றவர் எவரும் ஏற்றுக் கொள்வர். இன்றைய கல்வித் திட்டத்தில் மாணவர் கற்கும் பாடங்களில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களையாவது ஆங்கில மொழியில் கற்கின்ற சூழ்நிலை ஏற்படுத்தப்படுமாயின் ஆங்கிலத்தில் மட்டுமன்றி கணித, விஞ்ஞான பாடங்களிலும் மாணவரின் அறிவு வளர்ச்சி அதிசயப்படக் கூடியதாக அமையும்.

## ஆங்கில அறிவு அடிப்படைத் தகைமை ஆக வேண்டும்

இவையெல்லாம் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் ஆசிரிய வாண்மையில் பிரவேசிக்கும் எத்துறை சார்ந்த ஆசிரியரும் ஆங்கில மொழியில் குறிப்பிட்ட தகைமை பெற்றிருக்க வேண்டுமென்பது கட்டாய நிபந்தனையாக்கப்படல் வேண்டும்.

இது தேசத்தின் பெயரால் — சமூகத்தின் பெயரால் — இளந் தலைமுறையினரின் பெயரால் — நாட்டின் சட்ட மூலம் நடைமுறைப்படுத்தப் பட வேண்டிய தொன்றாகும். அங்ஙனம் நடைமுறைப்படுத்தப்படுவதனால் ஆசிரிய வாண்மைக்கு அளிக்கப்படும் ஒப்பற்ற கௌரவப் பட்டியென்று ஆசிரியர்களும் பெருமிதங் கொள்வதற்குக் காரணங்கள் உளவேயல்லாமல் எதிர்ப்பதற்கு எதுவுமில்லை.

## தொடர்கதையாக விடலாமா?

மாணவர்களின் ஆங்கில மொழியறிவை உயர்த்த இங்கு கூறப்பட்ட முறைகளுடன் நாம் திருப்தியடைந்துவிட முடியாது. இன்னும் பொருத்தமான முறைகளைக் கல்விமான்கள் பிரேரிக்க வேண்டும். அவை நடைமுறைப்படுத்தப்படுவதற்கு அவர்களே அழுத்தங் கொடுக்க வேண்டும். இல்லையெனில் ஆங்கில மொழி அறிவுத்தரமென்பது சென்ற 30 ஆண்டுகளாக பேசுவதற்கும்எழுதுவதற்கும் ஒரு வாய்ப்பான தலைப்பாக விருப்பது போல் என்றுமே அமையப் போவதைத் தவிர்க்க முடியாது போய் விடும். ★

# சிசுவின்...

(11 ஆம் பக்கத் தொடர்)

2 வயது வரை மேலதிக உணவுடன் தாய்ப்பாலையும் கொடுத்து வர வேண்டும். குழந்தை நோய்வாய்ப்பட்ட போதும் கூட இடைநிறுத்தாது தாய்ப்பால் வழங்குதல் அது விரைவில் சுகப்பட உதவும.

## புட்டிப்பால்மா தாய்ப்பாலுக்குச் சமனாகாது

புட்டிப்பால்மா ஒரு போதும் தாய்ப்பாலுக்கு ஈடாகாது. நீங்கள் உங்கள் பிள்ளையில் உண்மையிலேயே பாசம்வைத்திருப்பின் புட்டிப் பால், சூப்பி என்பனவற்றை நாடாதீர்கள், குழந்தையின் அதியுன்னத உணவு தாய்ப் பால்மட்டுமே. அதன் மூலம் கிடைக்கும் போஷாக்கைப் பெறும் உரிமை உங்கள் குழந்தைக்கு உண்டு. அதற்கு வழி கோலுங்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org